# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-19 Issue-5 மே-2026 துல்கஃதா-1447



## வானத்தைப் பிளந்து வெற்றியை ஈட்டிய ஈரான்

இந்திய விடுதலைப் போர் வீரர்

## திப்புசுல்தான் ஷஹீத் நாள் மே-4



ஹாதி கோஸ்ரோஷாஹி

ஜாஹிலிய்யா அரசு, இமாம்கள் & இஸ்லாமிய புரட்சியாளர்கள் - ஓர் ஆய்வு

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

மே-2026 | துல்கஃதா-1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்

- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps
G Pay | பே | UPI | BHIM | Paytm

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!




எதுவும் சாத்தியமென நிரூபித்தத் திப்பு - 8

GPS - அமெரிக்காவின் முனை மழுங்கிய ஆயுதம்! - 19

அமெரிக்காவுக்கு விழுந்த ‘பேரிடி’! காலி ஆன ஆயுதக் கிடங்கு.. - 22

செய்யது குதுப் சிந்தனைகள் வரப்போகும் பேரொளிக்கான விதை - 35

கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி..! - 41

இந்தியாவில் நடக்கும் வெறுப்புப் பிரச்சாரங்கள் - 43

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 52

சிலுவைப் போர் 2.0 - 57

மருத்துவம் - 60

தலையங்கம் - 62

திருக்குர்ஆனும் மருத்துவமும் - 64

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# வானத்தைப் பிளந்து வெற்றியை ஈட்டிய ஈரான்

ஈரானின் வானம் கடந்த எட்டு ஆண்டு களாக நீல நிறத்தில் வெப்பத்தால் தகித்துக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் செழிப்பான விளை நிலங்களாக இருந்த இடங்கள் இப்போது வெடிப்பு விழுந்த பாலைவனங்களாக மாறிவிட்டன.

ஒரு நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை (Sanctions) விதிப்பது என்பது அதன் கைகளைக்கட்டுவதற்குச் சமம். ஆனால், அந்த நாட்டின் தற்சார்பு வாழ்வாதாரமான

## அமெரிக்கா பயன்படுத்திய

- ☛ **சுற்றுப்புறச் சூழல், ஆயுதம்**
- ☛ **உணவு ஆயுதம்...**
- ☛ **தண்ணீர் அயுதம்...**

இப்படி சில சொல்லாட்சிகள் 1967 முதல் 1972 வரை உலகில் உலாவந்தன.

அல்லது போர் என்பதை - இதில் சுற்றுப்புறச் சூழலில், ஆயுதம் 1967ஆம் ஆண்டில் அமெரிக்கா வியாட்னாம்போது கடைபிடித்தது.

அது வானத்தில் இரசாயனப் பொருள் களைத் பொடியாகத் தூவி அதிகமான மழையைப் பெய்திடச் செய்தது. அதோடு வியட்னாமின், மழைக்காலத்தை நீடிக்கச் செய்ய செய்தது. இவற்றின் மூலம், கடும் மழையால் ஏற்படும் பாதிப்புகளை ஏற்படுத்தி யது. அத்தோடு வியட்னாமின் நிலபரப்பு சதுப்பு நிலமாக மாறியது. இதற்கு "Operation Popeye" எனப் பெயர் வைத்தது.

சாதாரணமாக மழை பொய்த்துவிட்டால் அந்த இடங்களை வறட்சியிலிருந்து காப்பாற்றிட இதுபோன்ற உத்திகளை கடைப் பிடிப்பது வழக்கமாக இந்தியா, சைனா, அரபு நாடுகள் மழைக்காக இதை வழக்கமாகக் கடைபிடிக்கின்றன.

இங்கே அந்த மழையை அதிகமாகப் பெய்திடச் செய்வது, அதன்மூலம் பல இழப்புகளை ஏற்படுத்தியது.

வியட்னாமின் நிலப்பரப்பை சேறும் சகதியுமாக ஆக்கிவிட்டதால், வியட்னாம் படைகள் தரைவழி தாக்குதல்களை வீரியத் துடன் கொண்டு சென்றிட இயலவில்லை. இப்படிச் செய்வது 1977இல் கொண்டு வரப்பட்ட சர்வதேச விதிகளுக்கு எதிரானது.

இப்போது ஈரானில் அதனை அமெரிக்கா பல வருடங்களாகக் கடைப் பிடித்திருக்கின்றது. வியட்னாமில் கடைப் பிடித்ததற்கு நேரெதிரான ஒரு உத்தியைக் கடை பிடித்திருக்கின்றது.

அதனை இங்கே தருகின்றோம்.

விவசாயத்தை அழிப்பது என்பது அதன் கழுத்தை நெரிப்பதற்குச் சமம்.

ஈரானின் கழுத்தை நெரிக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் கையில் எடுத்த ஆயுதம்,

அதுதான்: பஞ்சம்.

ஈரானுக்கு மழையைக் கொண்டு வரும் மேகங்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் உருவாகி, லெபனான், சிரியா மற்றும் ஈராக் வழியாகப் பயணிக்கின்றன.

இந்த "மேகப் படுகையை" (Cloud Basin) குறிவைத்து வளைகுடா நாடுகளில் அதிநவீன THAAD Radar அமைப்புகளையும், அயனி உமிழ்ப்பான்களையும் (Ion emitters aka HAARP) அமெரிக்கா நிறுவியிருந்தது.

இந்தத் தொழில்நுட்பம் ஈரான் மீது ஒரு கண்ணுக்குத் தெரியாத குடையைப் போலச் செயல்பட்டது.

மேகங்கள் ஈரான் எல்லைக்குள் நுழையும் போது, இந்த ரேடார்கள் மூலம் அனுப்பப்படும் மின்காந்த அலைகள் மேகங்களுக்குள் இருக்கும் நீர் மூலக்கூறுகள் ஒன்றிணைவதைத் தடுத்தன.

அதாவது, மழையாகப் பொழிய வேண்டிய மேகங்களைச் சிதறடித்து (Dissipate), அவற்றை வெறும் நீராவியாக மாற்றிவிடும் "வானிலை போர்முறை" (Weather Warfare) இது.

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம். 50 ஆண்டுகளில் இல்லாத மிக மோசமான வறட்சியால் ஈரானின் உணவுப் பொருட்கள் விலை விண்ணைத் தொட்டது.

மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கி ஆட்சிக் கவிழ்ப்பைச் செய்ய எதிரிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், ஈரான் ஒரு துணிச்சலான முடிவை எடுத்தது.

ஈரானின் ஏவுகணைகள் வளைகுடா நாடுகளில் அமைக்கப்பட்டிருந்த அந்த மின்காந்த ரேடார் தளங்களை துல்லியமாகத் தாக்கி அழித்தன. சில மணிநேரங்களில் அந்த "மின்காந்தக் குடை" கிழிந்தது.

ரேடார்கள் செயலிழந்த அடுத்த 72 மணிநேரத்திற்குள் அதிசயம் நிகழ்ந்தது. எட்டு ஆண்டுகளாக ஈரானுக்குள் நுழைய விடாமல் விரட்டப்பட்ட மேகங்கள், கருமேகங்களாகத் திரண்டு வந்து பேய் மழையாகக் கொட்டின.

கடந்த ஏழு ஆண்டுகளாக வறண்டு கிடந்த Darbandikhan அணை, 3 பில்லியன் கனமீட்டர் நீரால் நிரம்பி 100% கொள்ளளவை எட்டியது.

இந்த தொழில் நுட்பத்தில் முக்கியமானதும், ஆபத்தானதும் என கருதப்படுவது HAARP என்ற தொழில்நுட்பம்.

HAARP (High Frequency Active Auroral Research Program) மற்றும் Ionospheric Manipulation என்ற இரு தொழில் நுட்பங்கள் எப்படி மழையைத் தடுக்கின்றன என்பதை பார்க்கலாம்.

**முதலாவது வகை**

HAARP technology யின்படி Ionization உண்டாக்க வளைகுடா நாடுகளில் உள்ள தரைவழி தளங்களில் இருந்து வான்வெளிக்கு (Ionosphere) அதிகப்படியான Radiated power-ஐ அனுப்புவதன் மூலம், அங்குள்ள மேகங்களின் தன்மையை மாற்ற முடியும்.

**இரண்டாவது வகை**

Cloud seeding என்ற மேகங்களுக்குள் Silver Iodide என்ற இரசாயன பொருட்களைத் தூவி மழையை வரவழைப்பது. (இதன்மூலம் ஐக்கிய அரபு அமீரகம் தனக்குத் தேவையான மழையை மேலேயே உறிஞ்சிவிடுவதால், ஈரானுக்குச் செல்ல வேண்டிய மேகங்கள் காலியாகின்றன).

**மூன்றாவது வகை**

Cloud Dissipation என அழைக்கப்படும் உயர் அதிர்வெண் கொண்ட ரேடார் அலைகளை செலுத்துவதன் மூலம் (High-frequency waves) மேகங்கள் மழையாகக்



குளிர்ந்து பொழியவிடாமல் தடுத்து, அவற்றைச் சிதறடிக்கும்.

மின்காந்தத் தடுப்பு (Electromagnetic Shielding) என்ற முறையை THAAD போன்ற அதிநவீன ரேடார் அமைப்புகள் மூலம் மேகங்களின் மின்சுமையை (Electrical charge) மாற்றி, வறட்சியை செயற்கையாக நீட்டிக்கச் செய்ய முடியும்.

இவ்வகையான தொழில் நுட்பங்களே ஈரானால் தாக்கியழிக்கப்பட்டன.

ஈரானின் இந்த அதிரடி நடவடிக்கை, நவீன காலப் போர்கள் வெறும் எல்லைகளோடும் ஏவுகணைகளோடும் முடிந்துவிடுவதில்லை என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

ஒரு நாட்டின் இயற்கை வளத்தைத் திருடி, அதன் பொருளாதாரத்தைச் சிதைக்க அமெரிக்கா கையில் எடுத்த "வானிலை போர்முறை" (Weather Warfare), ஈரானின் துல்லியமான தாக்குதலால் தவிடுபொடி யானது.

மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டிருந்த அந்த மின்காந்தச் சுவர் (THAAD Radar Wall) தகர்க்கப்பட்ட அடுத்த சிலமணி நேரங்களி லேயே வானம் ஈரான் வசமானது.

இது வெறும் தற்செயலான மழை அல்ல; மாறாக, ஒரு நாட்டின் இறையாண்மையை இயற்கையோடு இணைத்து ஈரான் மீட்டெடுத்த வெற்றி என்றே பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல அமெரிக்காவின் HAARP மற்றும் ரேடார் தொழில்நுட்பங்கள் உலகின் எந்தப் பகுதியையும் வறண்ட பூமியாக மாற்ற முடியும் என்ற பிம்பத்தை ஈரான் உடைத் துள்ளது.

வறட்சியின் மூலம் மக்களைப் பசிப் பிணியில் தள்ளி, உள்நாட்டுக் கலவரத்தைத் தூண்ட நினைத்த எதிரிகளின் சதி, அணைகள் நிரம்பியதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத் தடைகளைத் தாண்டி, ஒரு நாடு தனது இயற்கை வளத்தைப் பாதுகாக்கத் துணிந்தால், தொழில்நுட்பப் போரிலும் (Hybrid Warfare) வெல்ல முடியும் என்பதற்கு ஈரான் ஒரு உலகளாவிய உதாரணமாக மாறியுள்ளது.

இறுதியாக, வான்வெளியைக் கைப்பற்றி மழையைத் திருட நினைத்த அமெரிக்காவின் தந்திரத்தை, ஈரான் தனது ஏவுகணைகளால் முறியடித்து, மீண்டும் தன் நிலத்தில் வசந்தத்தைக் கொண்டு வந்துள்ளது.

இது அமெரிக்காவிற்கு எதிரான ஈரானின் மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியாகும்.

## இஸ்ரேலும் சுற்றுப்புறச்சூழல் ஆயுதமும்

இந்தச் சுற்றுப்புறச்சூழல் ஆயுதத்தை இந்தப் போரில் இஸ்ரேல் இப்போது கடைபிடித்து வருகின்றது.

காஸாவில் அது வீசிய இராசயன குண்டுகளால் புற்பூண்டுகள்கூட முளைக்காத நிலங்களாக பெரும், பெரும் வளமான கழனிகள் ஆகி இருக்கின்றன.

அதேபோல், லெபனானிலும் இதே இராசயன குண்டுகளை வீசி பல கழனிகளைப் பாழாக்கி இருக்கின்றது.

இப்போது சிரியாவின் எல்லைப்புறங்களிலும் இதே குண்டுகளை வீசி வருகின்றது.

காஸா, லெபனான், சிரியா ஆகிய பகுதிகளில் விவசாயம் ஒருபெரும் வருமானம் தரும் தொழிலாகும். இஸ்ரேலின் இந்த ஈனச் செயல்களால், வருவாயையும், தொழிலையும் இழந்து அந்த மக்கள், தவிர்த்து வருகின்றார்கள். இந்த விவசாயத்தை நம்பி வயிறு பிழைத்துக் கொண்டிருந்த பலர் புலம்பெயர்ந்து போய் விட்டார்கள்.

அமெரிக்கா இதனை ஆப்கானிஸ்தானில் செய்தது. ஆனால், ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகம், கடுமையாக உழைத்து பல ஏரிகளையும், கால்வாய்களையும் வெட்டி அந்தக் கழனிகளை மீட்டு விட்டனர்.

### தண்ணீர் யுத்தம்

இது எதிரி நாட்டு படைகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் செய்வது அதற்காக நீர்த்தேக்கங் களையும், அணைகளையும் உடைப்பது.

இன்றைய காலங்களில் பெரும்பாலான நாடுகள், கடல் நீரை, சுத்திகரித்து குடிநீராக மாற்றி மக்களுக்கு குடிநீரை வழங்கி வருகின்றன.




இந்த கடல் நீர் சுத்திகரிப்பு ஆலைகளை உடைப்பதையும், தண்ணீரி யுத்தம் என்றே கொள்ள வேண்டும்.

குடிமக்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் செய்வதன் தவிர்க்க முடியாத விளைவாக மக்கள் அந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து போய்விடுவார்கள்.

இப்போது காஸாவில் இதை இஸ்ரேல் தினம், தினம் செய்து வருகின்றது. இதனால் காஸாவிலிருந்து மக்கள் பெருமளவில் புலம் பெயர்ந்து வருகின்றார்கள். உண்மையைச் சொன்னால் காஸா முழுவதும் இதே நிலை நீடிப்பதால் மக்கள் அங்கும் இங்கும், அல்லாடு கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் சேவை முகமைகளும் (UNRWA/WFO) உலக உணவு வழங்கும் முகமைக்கும், காஸாவில் இயங்கும் தன்னார்வ குழுக்களும் காஸா மக்களுக்ககுத் தண்ணீர் கிடைக்கச் செய்வதை ஒரு பெரும் பணியாக செய்து வருகின்றன.

இந்த தன்னார்வ குழுக்கள் பலவற்றிற்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் UNRWA - உர்வா அமைப்பின் கட்டடங்களை இடித்தும், சமுதாய சேவை செய்பவர்கள் அழித்தும் வருகின்றது.

இதை ரஷ்யாவும் உக்ரைனில் பல அணைகளை உடைத்து வெள்ளப்பெருக்கு ஏற்படச் செய்திருக்கின்றது.

தண்ணீர் யுத்தத்தில் இன்னொரு உத்தி என்னவெனில் கடலோர நாடுகளுக்குள் கடல் நீரை சுனாமி போல் அலைகளை புகுத்துவது இதற்காக குண்டுகளை வீசி, பேரவைகளை உருவாக்குவது. இதில் உலக நாடுகள் பெரிதாக வெற்றி பெற்றதில்லை.

இந்த உத்திகள், எல்லாம் எதிரி நாடு எனக் கருதப்படும் நாட்டில் வாழும் அப்பாவி மக்களை அழிப்பவை. அவர்களை பூர்வீக பூமியைவிட்டு வெளியேற்றுவது என்ற வகையில்... கூட்டுப்படுகொலைகள், மனித இனத்திற்கு எதிரானவை. இஸ்ரேல் இந்த உத்திகளை காஸாவில் பயன்படுத்த முயற்சி செய்து தோற்றுப்போனது.

பின்னர் போராளிகளின் ஹமாஸ்-இன் சுரங்கப்பாதைகளை நீரால் நிரப்பிட உதவி செய்தது. அதிலும் தோற்றது.

## உணவு ஆயுதம்

- இதில் எதிரி நாட்டிலுள்ள குடிமக்களுக்கு உணவு கிடைக்காமல் செய்வது.
- உள் நாட்டிலிருக்கும் உணவு ஆதாரங்களை அழிப்பது.
- வெளியே இருந்து உள்ளே உணவு செல்ல முடியாமல் தடுப்பது.
- இதைத்தான் காஸாவில் இஸ்ரேல் செய்து கொண்டிருக்கின்றது.
- லெபனான் முகாமிலும் இதற்கு முயற்சி செய்கின்றது.
- இந்த உத்திகள் அனைத்தும் இஸ்லாமியப் போர் நெறிமுறைகளுக்கு எதிரானவை.
- எதிரி நாடாக இருந்தாலும் அப்பாவி மக்களைக் கொலை செய்யக்கூடாது. அவர் களுக்கு பயன்தரும் மரங்களை அழிக்கக்கூடாது. கழனிகளை அழிக்கக்கூடாது. உணவு/தண்ணீர் ஆகியவற்றைத் தவிர்க்கக் கூடாது. அதேபோல் கால்நடைகளுக்குப் பயன்படும் புல்வெளி களையும் அழிக்கக் கூடாது.
- தவிர்க்க முடியாத சூழலில், எதிரி படைகள் கழனிகளில் சந்திக்க வேண்டியது வந்தபோது அந்தக் கழனிகளின் சொந்தக் காரர்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு நஷ்ட ஈடு கொடுத்த வரலாறு நிரம்பவே இஸ்லாமிய வரலாற்றுகளில் உண்டு!

இன்று பாலஸ்தீனில் நடக்கும் போரில் இதை, இஸ்லாமிய போராளிகளும், ஈரானின் புரட்சி பாதுகாப்புப்படையும் இந்த இஸ்லாமிய நெறிமுறைகளை கடைபிடித்து வருகின்றன.

– திருப்பூர் காதர்
- MGM



# எதுவும் சாத்தியமென நிரூபித்தத் திப்பு

நாற்பத்தொன்பது ஆண்டுகளே உயிர்த்திருந்தத் திப்புவின் வாழ்நாளில், பெரும்பொழுதுகள் போர்க்களங்களிலேயே கழிந்துபோயின. போர்முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக, தந்தை ஹைதர் அலி, பதினைந்து வயது மகனை களத்துக்கு அழைத்துச் சென்றிருந்தபோது, துணிச்சலாகக் களமிறங்கி அசத்தத்துவங்கிய திப்புவின் இறுதிமூச்சும், களத்தில்தான் கலந்தது.

இதுவரையில் சொல்லப்பட்ட திப்புவின் கதை, முழு அளவிலானதாகவோ அல்லது அவரது வாழ்க்கையின் நேர்த்தியையோ, பதிவு செய்தவையாக இல்லையென்பது பெருங்குறை. ஆங்கிலேய எழுத்தாளர்களும் சரி, அவர்களைப் பின்னொற்றிய இந்திய எழுத்தாளர்களும் சரி, முழு உண்மையையும் புரிந்துகொண்டு எழுதவில்லையென்பதை மறுக்க முடியாது. அவை, திப்புவைச் சுற்றிப் பெரும்பாலும் புனைக்கதைகளை மட்டுமே உலவ விட்டிருக்கின்றன.

ஹைதர் அலியின் எதிர்பாராத மரணம், அதையொட்டிய தவிர்க்கவியலாத சூழல், திப்புவைப் போர்க்களங்களிலேயே களமாட விட்டுவிட்டது. இந்த நூல் திப்புவின் களங்களையும், அதற்கான வியூகங்களையும், போருக்கானத் தயாரிப்பு முறைகளில் அவர் காட்டிய ஈடுபாடுகளையும், வெற்றி, தோல்விகளையும் பேசுகிறது. அதேவேளையில் இத்தனைப் பெரும்பாடுகளுக்கிடையிலும் வாழ்வின் மற்ற அம்சங்களையும் அவர், விட்டுச் சென்றவராக இருந்துவிடவில்லை. தேசத்தின் மீதான அக்கறை, நல்லிணக்கம், தயை, மாற்று மதத்தினரிடம் காட்டிய வாஞ்சை, வேறெந்த ஆட்சியாளரும் இதுவரைக் கடைப்பிடிக்காதது. பிடிபட்ட எதிரிப்படையின் போர்க்கைதிகளிடம் அவர் காட்டிய கருணையும், அதேவேளையில் தனக்குத் துரோகம் செய்தவர்களை தண்டித்த விதமும் மனித மனத்தின், இரு வேறு பக்கங்கள்.

திப்புவின் செயல்பாடுகளில் நினைவில் நிற்கக்கூடியவையாகயிருப்பது, அவர் வர்த்தகத்தில் காட்டியப் பேரார்வமும், தனது சாம்ராஜ்ஜியத்தில் வணிகமும், தொழிற்சாலைகளும் பெருக வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முனைப்புகளுமே 'சிந்தனை அவருக்கிருந்தது. அதனாலேயே அந்நியத் தொழில் நுட்பத்தில் மைசூர் ஆகும். அவைதான், ஒரு தேசத்தை பலப்படுத்தும் என்னும் தூரநோக்குச் சாம்ராஜ்ஜியத்திலும், பிறதேசங்களிலும் தொழில்களைத் தொடங்கினார். அது, இந்தியாவில் ஆங்கிலேய வல்லாண்மையை நிலைநிறுத்த விரும்பிய கார்ன்வாலிஸுக்கு பெருத்த அபாயத்தைத் தரவிருப்பதாகத் தோன்றியது. திப்புவை அவன், 'அசாதாரணமானத் திறமைகளைக் கொண்ட இளவரசது. என்றும், எல்லைகளைக் கடந்த லட்சியங்களைக் கொண்டவன் என்றும், எல்லைப் பரப்பை, வளத்தை விரித்துக்கொண்டு செல்வதில், அடங்காத தாகம் கொண்டவன் என்றும், கர்நாட்டிக்கிலிருந்தக் கம்பெனியின் உடமைகளுக்கு மிரட்டலானச் சக்தியாய் இருப்பவன் என்றும், மற்றவர்களுக்கு அபாயகரமானவன் என்றும் மதிப்பிட்டிருந்தான்.' இந்திய வளங்களைக் கைப்பற்றினால் தான், பதிமூன்று வட அமெரிக்கக் காலனிகளை இழந்ததில் ஏற்பட்ட சரிவை, தன் தாய் தேசத்தால் ஓரளவு சமப்படுத்த முடியுமென்று, எங்கோ இழந்ததை வேறெங்கோ மீட்க, இந்திய மண்ணில் அவனும் வெல்லெஸ்லியும் செய்த சூதுகள், தனது குடிகளை, உடமைகளைப் பாதுகாக்க, யாருக்கும் அடிமையாகயில்லாமல், சுதந்திரமாக உலவ நினைத்தத்

திப்புவை, களத்திலேயே நிற்கவைத்துவிட்டது.

எனினும் திப்புவின் தகுதி, திறமை, பேராவல் எல்லாமே ஆங்கிலேயர்களுக்கு ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியாகவே இருந்திருக்கிறது. அதை அவர், தனது செயல்பாடுகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது குணாதிசயம் மிகக் கடுமையானதாகவும், சமரசமற்றதுமாக இருந்திருக்கிறது. அதனாலேயே, இந்திய அதிகாரங்களில் மிகப் பெருமை வாய்ந்த சாம்ராஜ்ஜிய அதிபதியாகயிருந்தும், சாதாரணப் போர்வீரனைப்போல, தன் மண்ணையும், மக்களையும் காக்க, வாளுடன் களத்தில் இறங்கியிருக்கிறார். அதுவே, அவரது மரணத்துக்கு இட்டுச்சென்றிருக்கிறது.

சில எழுத்தாளர்கள் திப்புவை, முதலாவது இந்திய தேசியவாதியென்றும், இந்திய சுதந்திரத்துக்காக முதலில் உயிர்நீத்த தியாகி என்றும் வர்ணனைக்கு உள்ளாக்குகின்றனர். அது, கடந்த காலத்துக்குள் நிகழ்காலத்தைப் பொருத்தும் சூட்சுமமாகவே இருக்கிறது. திப்பு வாழ்ந்த (1750-1799) காலகட்டத்தில், இந்தியாவில் தேசிய உணர்வெழுச்சியோ அல்லது இந்திய மக்களிடையே, 'நாமெல்லாம் அடிமைகள்' என்ற கசந்த விழிப்புணர்வோ வந்திருக்கவில்லை. அதனால், இந்திய

சுதந்திரத்துக்காக, திப்பு ஆங்கிலேயர்களுடன் போர் நடத்தினார் என்று சொல்வது கொஞ்சம் அதிகமாகவேபடுகிறது. உண்மையில் தனது அதிகாரத்தையும், தனித்தன்மையையும் பாதுகாக்கவே தனிமனிதனாக, ஆங்கிலேயர்களுடன் போராடியிருக்கின்றார். மற்றெந்த இந்திய அதிகாரங்களான மராத்தியர்கள், நிஜாம் ஆகியோரைக் காட்டிலும், இந்தியா மீது பிரிட்டிஷ் கொண்டிருந்த அழிப்புத் திட்டங்களை, அதிகம் உணர்ந்தவராகவும்' இருந்திருக்கிறார். அதனாலேயே, மராத்தியர்களையும் நிஜாமையும் அபாயத்துக்கு எதிராக எச்சரிக்கை விடுத்து, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான, இந்திய ஆட்சியாளர்கள்கூட்டணியை அமைக்க முயற்சி செய்திருக்கிறார்.

அதுவே, அவரது பலமும், பலவீனமுமாக இருந்துவிட்டது. அதேவேளையில், திப்புவின் அரசாங்கமும், அதை அவர் நடத்திய விதமும், அவரது இராணுவமும், அவர் செய்த சீர்திருத்தங்களும், மதக் கொள்கைகளும், தொழிற்துறைக்கு அவர் முன்னெடுத்த முயற்சிகளும், சமூக சமத்துவமும், அவரது குணாதிசயமும் இன்றைய நிலையிலிருந்து பல படிகள் முன்னிற்கின்றன.

இந்திய வரலாற்றின் முதல் பக்கத்தில், முதல் பத்தியில், முதல்வரியின் முதல் வார்த்தையாக எழுதப்பட்டிருக்க வேண்டியப் பெயர், திப்புவுடையது. கிரேக்கப் புராணங்களில் வரும் பெருங்காப்பிய வீரன் அச்சீலஸைப் போன்ற திப்புவை, மறந்துவிட்ட / மறக்கடிக்கப்பட்ட அவரது வரலாற்றுப் பக்கங்களை மீட்டெடுக்கும் வாய்ப்பு, இந்நூல் மூலம் ஓரளவு சாத்தியப் பட்டிருக்கின்றது.

பல்வேறு ஆய்வுகளின் மூலம், திப்புவின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதியை, சமூகத்திற்கு தனது பங்களிப்பாக இந்நூல் மூலம் தந்திருக்கும் மொஹிபுல் ஹசன், கல்கத்தா பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர். முதுபெரும் வரலாற்றாசிரியர். அலிகார் பல்கலைக் கழகத்திலும், காஷ்மீர் பல்கலைக் கழகத்திலும் தனது பணியைத் தொடர்ந்தவர். புதுடெல்லியின் ஜாமியா மில்லியா இஸ்லாமியப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையை நிறுவியவரும், அதன் முதல் பேராசிரியரும் ஆவார்.



## இந்திய விடுதலைப் போர் வீரர்

# மே-4 திப்புசுல்தான் ஷஹீத் நாள்



அறிமுகம்

**இந்திய விடுதலைப் போரை புரட்டிப் போட்ட நாள்**

**நவம்பர் 20,1750 - மே-4,1799**

**மைசூர் வேங்கை திப்புசுல்தான் ஷஹீத் நாள்**

திப்பு ஏவுகணைகளின் தந்தை பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவில் உச்சத்தைத் தொட்டவர்.

திப்புசுல்தான், தான் ஆங்கிலேய ஆக்கிர மிப்பாளர்களை, அறுதி மூச்சுவரை எதிர்த்து போர் செய்த ஒரே பேரரசர் என்பார் பகவான்தாஸ்.

இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த குறுநில மன்னர்கள் பலர் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டி வாழ்ந்தனர். அவர்களில் சிலர் பெரும்பாலான நேரங்களில் ஆங்கிலேயர்களுடன் கை கோர்த்துக் கொண்டனர். சில நேரங்களில் எதிர்த்தார்கள். திப்புவும் அவருடைய தந்தை யுந்தான் முதல்நாள் முதல் வீரமரணமடையும் வரை எதிர்த்து போர் செய்தார்கள்.

இந்தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்த வர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்திப் போர் செய்தவர் திப்பு. (தமிழகத்தின் வேலுநாச்சி போன்றவர்கள்)

அதேபோல் உலக அளவில், ஆங்கிலேயர் களை எதிர்த்தவர்களையும் தன்வயப்படுத்தி ஆங்கில கொள்ளைக்காரர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர். அதனால்தான் அவர் வீரமரணத்தை அடைந்த மே-4இல் இனி இந்தியா நமக்கு எனக் கூறினர் ஆங்கிலேய சுரண்டல் பேர்வழிகள்.

திப்புவுக்குப் பின், திப்புவின் குடும்பத்தவர்கள் அந்த விடுதலைப் போரை தொடர்ந்தார்கள். காலம் மாறியது. ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆட்காட்டும் வேலையைச் செய்து கொண்டிருந்த பாசிஸ்ட்டுகள் அரியணையைக் கவ்விக் கொண்டனர். திப்புவின் தந்தை கைதர் அலீ - திப்பு ஆகியவர்களை வரலாற்றிலிருந்து மறைக்க பல தகிடு தத்தங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில், திப்புவின் வரலாற்றை மீண்டும், மீண்டும் மக்கள் மன்றத்தில் நிலைநிறுத்திட வேண்டியது ஒரு வரலாற்றுக் கடமை - அதனை நிறைவேற்றவே இந்தப் பதிவுகள்.

திப்புவின் வரலாற்றைப் பற்றி பலநூல்கள் வெளிவந்துள்ளன.

ஆனால், வரலாற்று ஆசிரியர் மொஹிபுல் ஹஸன் அவர்கள் எழுதி எஸ்.அர்ஷிகா அவர்கள் மொழிபெயர்த்த நூல் எமது கவனத்தை கவர்ந்தது ஓர் அறிய அறிவுப் பெட்டகம். அதிலிருந்து சில கட்டுரைகளை இங்கே இடம்பெறச் செய்கின்றோம்.

**வெளியீடு - எதிர் வெளியீடு**

96, நியூ ஸ்கீம்ரோடு, பொள்ளாச்சி-642002.
பேசி-98650 05084

பக்கங்கள் பெரிய அளவில்-459,
விலை ரூ. 500/- வாசகர்கள் முழு நூலையும் வாங்கிப் படிக்க பரிந்துரைக்கின்றோம்.

**வேர்கள் பதிப்பகம், MGM**

மங்களூர் உடன்படிக்கையை வங்காள அரசாங்கமும் கம்பெனியின் இராணுவ அதிகாரிகளுமே அங்கீகரிக்கவில்லை. இந்த உடன்படிக்கையை வாரன் ஹேஸ்டிங் 'அவமானகரமானச் சமாதானம்' என்று குறிப்பிட்டான். இன்னஸ் மன்றோவோ, 'திப்பு சாகிபுடனான இந்தச் சமாதானத்தைக் கம்பெனி மிகத் தாமதமாகச் செய்து கொண்டிருக்கிறது. இது, தற்காலிகச் சமாதானம்தான்' என்று அவநம்பிக்கை தெரிவித்தான். இந்தச் செயல்பாடுகளின் விளைவாக, அதிகாரப்பூர்வமாக ஆங்கிலேயர்கள் திப்புவுடன் சமாதானமாக இருந்தனர். ஆனால், அவர்களின் உறவு வலிந்து திணிக்கப்பட்டதாகவே இருந்தது.

மங்களூர் உடன்படிக்கையின் ஒருவிதியாக, கண்ணனூரை திப்புவால் நியமிக்கப்படும் ஒரு அதிகாரியின் முன்னிலையில், அதன் உரிமையாளர் பீபீயிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. மாறாக, திப்புவின் பிரதிநிதி வரும்வரை ஒப்படைக்கக் காத்திருக்காமல், அதற்கு முன்பாகவே ஆங்கிலேயர்கள் அந்த இடத்தைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டனர். வெளியேறும் போது அந்தஇடத்தை மட்டுமன்றி, சுற்றிலுமுள்ள நிலங்களைத் தரிசாக்கிவிட்டுப் போனார்கள். குடியிருப்புகளில் புகுந்து கொள்ளையடித்தார்கள். கோட்டையைக் குண்டுகளால் துளைத்துவிட்டு துப்பாக்கிகளைக் கடலில் வீசிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் இதேபோன்ற சூறையாடல்களை ஒனூரிலும், கார்வாரிலும், சதாசிவ்கார்க்கிலும் அரங்கேற்றியிருந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட மெக்கார்ட்னி, 'ஆங்கில அதிகாரிகளின் நடத்தை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல' என்று கடும் அதிருப்தியைத் தெரிவித்தான். இது, உடன்படிக்கையின் நான்காவது விதியை மீறியச் செயலாகும் என்று குறிப்பிட்டு, 'திப்பு குறிப்பிடும் அனைத்து வகையானக் கோரிக்கைகளையும் சீர்செய்வதுதான் முறையாகும்' என்றுசொல்லி, அவர்களைத் தயார்படுத்தினான்.

உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் மீறுவது, இந்தவொரு விஷயத்தில்மட்டும் நடந்ததல்ல. திண்டுக்கல்லை முற்றிலுமாகக் கொள்ளையடித்தனர். உடன் படிக்கையின்படி, தங்களுக்கு அதிகாரம் இல்லாத மாவட்டங்களிலும் அவர்கள் வரிவசூல்செய்து குவித்தனர். திப்புவின் சாம்ராஜ்ஜியத்துக்குள் கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டுக் குளிர்காய்ந்தனர். வளைந்துகொடுக்காமல் திப்புவுக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு இருகரம்விரித்து அடைக்கலம் கொடுத்தனர்.

தலைச்சேரிக்கு ஓடிய பெரும் எண்ணிக்கையிலான நாயர்கள் ஆங்கிலேயர்களின் பாதுகாப்பைப் பெற்றனர். அந்ததைரியத்தில் திப்புவின் எல்லைக்குள் புகுந்து கொள்ளைச் சம்பவங்களை நிகழ்த்தினர்.

திப்பு, இதுகுறித்துத் தலைச்சேரியின் தலைவனுக்குக் கடிதமெழுதியும், அவன் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இதனால் திப்பு, கடும்சீற்றம்கொண்டார். 'இனி, இதுபோன்றத் தகவல்கள் என்காதில் விழக்கூடாது' என்று எச்சரித்தார்.

கள்ளிக்கோட்டையில் ஆங்கிலேயர்களின் தொழிற்சாலையைத் திரும்ப ஒப்படைத்தத் திப்பு, மௌண்ட் தெல்லியை அதன் உரிமையாளர்களிடம் திரும்பக்கொடுக்காமல் தள்ளிப்போட்டார். மேலும் மிளகு, ஏலக்காய் மற்றும் சந்தன மரக்கட்டைகள் விற்பனைக்கு அங்கே தடைவிதித்தார். தலைச்சேரியின் பிரதான நுழைவாயிலான தர்மாபட்டிணத்தைக் கைப்பற்றச்சொல்லி சித்ரக்கால் ராஜாவைத் தூண்டிவிட்டார்.

## ஆங்கிலேயர்கள் மற்றும் மராத்திய-மைசூர் போர்

திப்புவுக்கும் பேஷ்வாவுக்குமிடையிலானப் போர் தவிர்க்கமுடியாததாகிப்போனது. தனது சபையிலிருக்கும் ஆங்கிலேய முகவரான ஆண்டர்சனுக்கு அப்பாஜி பண்டிட் மூலமாக, சிந்தியா ஒரு தகவலை அனுப்பினான். அந்தத்தகவலில், 'மராத்திய எல்லைக்கருகில் திப்பு படைகளைக் குவிக்கிறார். அதனால் சால்பாய் உடன்படிக்கையின்படி, ஆங்கிலேயக் கம்பெனி பூனா அரசாங்கத்துக்கு உதவ வேண்டும். திப்புவுக்கு எதிராக பேஷ்வாவுக்கும், நிஜாமுக்கும் ஆதரவாகக் கம்பெனி தாக்குதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கவேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தான். உதவிக்கானக் கோரிக்கையையும் கூட்டணிக்கான முன்மொழிவையும் ஆண்டர்சன், கவர்னர் ஜெனரல் மக்பெர்சனுக்கு



அனுப்பிவைத்தான். மக்பெர்சன் அனுப்பிய பதிலில், 'சால்பாய் உடன்படிக்கை, கம்பெனியின் நண்பர்களையும் எதிரிகளையும் நிர்ணயம் செய்யவில்லை. மராத்திய மாநிலம் உள்ளிட்ட எல்லாமே பரஸ்பரம்தான்' என்றிருந்தது. உடன்படிக்கையின் பத்தொன்பதாவது விதி, பேஷ்வாவுக்கு எதிரான எந்த நாட்டுக்கும் உதவக்கூடாது என்று மட்டுமே இருந்தது. அதன்படி கம்பெனி திப்புவுக்கு உதவாது. அதேவேளையில், மங்களூர் உடன்படிக்கையின்படி, திப்புவின் எதிரிகளுக்கு ஆங்கிலேயப்படைகள் உதவிசெய்யமுடியாது. அந்தவகையில், அது மராத்தியர்களுக்கும் உதவிசெய்ய இயலாது என்று சொல்லியிருந்தான்.

ஆனாலும், மராத்தியர்களுக்கு எந்த வகையிலாவது உதவிவிடவேண்டும் என்பதில் மக்பெர்சன் பெருத்த ஆவல் கொண்டிருந்தான். மராத்தியர்களின் கோரிக்கைகள் 'நேர்மையானவை. நியாயமானவை' என்று பிதற்றினான்.

பிட்ஸ் இந்தியா சட்டப்படி, கவர்னர் ஜெனரல் மற்றும் ஆலோசனைக்குழு யாருடனாவது கூட்டணிவைத்தால், அது போருக்குச்சென்றுவிடும் அபாயத்தைக்க கொண்டிருந்தால், அவனால் எதுவும்செய்ய முடியாதது ஒருபாதியென்றால், மறுபாதியாக வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் பதினாறாவது விதி நிதிநிலைமை, மிகமோசமாகவும் இராணுவம் பலவீனப்பட்டும் கிடந்தது. எனினும் மிரட்டிக்கொண்டிருந்தது. ஆனால் கம்பெனியின் தலையாயப் பிரச்சனையான மக்பெர்சன் தனது நடுநிலைக்கொள்கையை வெகு விரைவில் விட்டுக்கொடுத்தான், ஏற்கனவே தன்முடிவை அவன், 'அவர்களின் சொந்த விவகாரங்களில் தலையிட நமக்கு விருப்பமில்லையென்றால், நமது செல்வாக்கைக்கொண்டு என்ன முடிவெடுக்கின்றோமோ அதன்படி நமது உதவியைச் செய்வது. இந்த அமைதித் திட்டத்திற்கு அப்பால், நிரந்தரமாக அமைதி தொடர்ந்து விடக்கூடாது' என்பதே அவனுக்குள் விருப்பமாகயிருந்தது. திப்புவுக்கும் மராத்தியர்களுக்குமிடையில் போர் வெடித்தபோது, ஆங்கிலேயர்களிடம் உதவிகேட்டு நானா பத்னவில் பெரும் அழுத்தம் கொடுத்தான். அதையடுத்து, ஐந்து பட்டாலியன் படையை அனுப்பி மக்பெர்சன் உதவினான். மேலும் அவன், நானாவிடம் தனது உத்தரவாதத்தை விரிவுபடுத்தி, 'மராத்தியர்களுக்கு உதவுவதற்காக பட்டாலியன்களைத் தயார் நிலையில் வைத்திருக்கிறேன்.

கர்நாட்டிக் பால்காட்டுக்கோ, லாகூருக்கோ அல்லது எங்கள் சேவை எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கு அனுப்பி வைக்கிறேன்' என்று சொன்னான். மங்களூர் உடன்படிக்கையை வெட்டவெளிச்சமாக மீறிய இந்தச்செயல்பாடு, திப்புவுக்கும் கம்பெனிக்குமிடையில் செய்துகொண்ட, "நேரடியாகவோ மறைமுகமாகவோ பரஸ்பரம் மற்றவர்களின் எதிரிகளுக்கு உதவுவதில்லை' எனும் ஒப்பந்தத்தை கவர்னர் ஜெனரல் காற்றில் பறக்க விட்டான்."

திப்புவுடனான உடன்படிக்கையை மீறிவிட்டு, மராத்தியர்களுக்கு அவன் உதவிக் கரம் நீட்டுவதற்கானக் காரணங்கள் இல்லாமலில்லை. முதலாவதாக, பூனாவில் அமர்ந்து கொண்டு பிரஞ்சு நிர்வாகம் செய்துவரும் உள்குத்து வேலைகளுக்கு எதிர்நடவடிக்கை எடுப்பதில் அவன் ஆர்வமாகயிருந்தான். பேஷ்வா, பிரஞ்சு நிர்வாகத்தின் செயல்பாடுகளில் ஈடுபாடுகாட்டி, அவர்களின் உதவியைப் பெற்றுவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாகவும் இருந்தான். இரண்டாவதாக மராத்தியர்கள் தனிபலம் பெற்றுவிடக்கூடாது என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தான். அதன்மூலமே தேசத்தின் அதிகாரத்தை, சமன்நிலையில் வைக்கமுடியுமென்று நினைத்தான். ஒருவேளை மராத்திய அதிகாரத்

திற்கு பின்னடைவு ஏற்பட்டால் திப்பு பலம் பெற்று, அது ஆங்கிலேயர்களுக்கு வினையாக முடியும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். மேலாக, மராத்தியர்களுக்கு அவன் வலிந்து உதவிசெய்து, திப்புவுக்கு எதிராகப் போராட வைத்தது, அவர்கள்

திப்புவுடன் அமைதி உடன்பாடு செய்து விடக்கூடாது எனும் 'நல்லெண்ணத்தினால் தான். காஸிக்னி, 'இந்திய அதிகாரபீடங்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ள வேண்டு மென்பதில் ஆங்கில நிர்வாகம் அதிக ஆர்வம் கொண்டிருந்தது. அதன்மூலமே அவர்களைப் பலவீனப்படுத்த முடியுமென்றும் நம்பியது' என்கிறான்.

நிஜாமுக்கும் மராத்தியர்களுக்கும் உதவுவதாக மக்பெர்சன் கொடுத்த உதவிக்கான வாக்குறுதியை, ஆங்கிலேய நிர்வாகம் விரும்பவில்லை என்பதுடன் அதனுடைய எண்ணமாக, திப்புவுக்கு எதிரானப்போரில் மராத்தியர்கள் தோல்வியடைந்தாலும் அல்லது வெற்றிபெற்றாலும் கூட நடுநிலை வகிப்ப தாகவே இருந்தது. ஒருவேளை பிரஞ்சின் தலையீடு ஏதாவது வந்தால் அல்லது ஆங்கிலேயப்பகுதியில் அச்சுறுத்தல் உருவானால் மட்டுமே, நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று விரும்பியது.

அதற்கேற்ப, கவர்னர் ஜெனரல் மராத்தியர் களிடம், 'திப்புவுக்கு பிரஞ்சு நிர்வாகம் உதவி செய்தால்மட்டுமே அதற்கெதிராக, கம்பெனி மராத்தியர்களுக்கு உதவமுடியும் என்று குறிப்பிட்டுச் சொல்லிவிட்டான். ஒருவேளை, மறுபக்கத்தில், மராத்தியர்கள் பிரஞ்சின் உதவியைப் பெற்றுவிட்டால் திப்புவுக்கு உதவிசெய்வது கம்பெனியின் கடமையாகும்' என்றும் கருதியது. ஆனால் பிரஞ்சு நிர்வாகம், திப்புவுக்கு உதவுவதாக உத்தரவாதப்படுத்தாதபோதிலும், எந்தவொரு தேவையும் ஏற்படாத நிலையில் அதற்குமாறாக, மராத்தியர்களுக்கு உதவுவதாக ஆங்கிலேயக் கவர்னர் ஜெனரல் உறுதிமொழிதந்ததை, லண்டன் நிர்வாகம் ரசிக்கவில்லை. 'இந்தச்செயல்பாடுகள் முதலாவதாக, திப்புவை பிரஞ்சின் கரங்களில் கொண்டுசேர்த்துவிடும். இரண்டாவதாக, நம்முடன் விரோதம் பாராட்டவைத்துவிடும்' என்றுகருதியது.

மக்பெர்சனின் இடத்தில் கார்ன்வாலிஸை கவர்னல் ஜெனரலாக அமர்த்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குழு, 'உலகளாவிய. நமது கொள்கையின்படி, அமைதியையும் பாதுகாப்பு முறையையும் கைக்கொண்டால் போதும். நம்மிடமிருக்கும் உடமைகளைப் பாதுகாப்பதற்கு முற்றிலும் திருப்தியான முறையில் இயங்க வேண்டும்' என்று அறிவுறுத்தியனுப்பியது. அதே வேளையில், போரின்போது பிரஞ்சு நிர்வாகம் ஒருபக்கத்தில் சேர்ந்தால், தானாக அதன் மறுபக்கத்தில் நாம் சேர்ந்துகொள்ள வேண்டும்' என்று வழிகாட்டியிருந்தது. அலுவல் பொறுப்பேற்றதும் நிர்வாகச்சீர்கேடுகளைக் கண்டறிந்த கார்ன்வாலிஸ், "மராத்தியர்களுக்கு கம்பெனி நிர்வாகம் உதவியது, விகாரமான, முட்டாள்த் தனமான சுரண்டலாகும்; அதிலிருந்து கௌரவமாக நாம் எவ்வாறு மீண்டுவரப்போகிறோம், கடவுள்தான் அறிவார், இதைத்தாண்டி நாம் ஏதாவதைப் பெற்றாகவேண்டும். அதேவேளையில் படைகளை இனி கொடுக்கக்கூடாது' என்று உறுதியெடுத்தான். அதன்படி தனக்கு முன்னால் பொறுப்பிலிருந்த மக்பெர்சனின் நிகழ்த்திட்டங்களை அவன் நிராகரித்தான். நிஜாமுக்கும், பேஷ்வாவுக்கும் உதவுவதை நிறுத்தினான். ஒருவேளை பிரஞ்சு நிர்வாகம் திப்புவுக்கு உதவினால், கம்பெனி உடனடியாக உங்கள் உதவிக்குவரும்' என்று உத்தரவாதம் அளித்தான்.

கார்ன்வாலிஸ் இப்படியொரு முடிவுக்கு வரக்காரணம், அவன் அமைதிக் கொள்கையை விரும்பியது மட்டுமல்ல, திப்புவின் நேர்மையான, நியாயமான ஒப்பந்தங்களை நம்பினான். அதே வேளையில், உள்ளார்ந்து மராத்தியர்களுக்கு உதவவேண்டும் என்று விரும்பினான். ஆனாலும் சமயத்திற்கேற்றவாறு சமயோசிதமாகச் செயல்படஎண்ணி, நடுநிலையைக் கையாண்டான மராத்தியர் களுக்கு உதவப்போய், அது திப்புவுடன் போரில் கொண்டுபோய்விடுமோ என்றும் அஞ்சினான். திப்புவுக்கும் பிரஞ்சு நிர்வாகத் துக்குமிடையிலான நெருக்கம் அவனுக்குக் கலக்கத்தைத் தந்திருந்தது.

இந்தநேரத்தில் போருக்கு தயாராகக் கம்பெனியில்லையென்பது ஒருபுறமிருக்க,

இராணுவத்தின் நிலையும் சொல்லிக்கொள்ளு மளவில் இருக்கவில்லை. கம்பெனியின் நிதிநிலை, வங்காள அரசாங்கத்தைத்தவிர, மற்றெல்லா இடங்களிலும் ஆழமாய் அபாயக் குழிக்கும் கிடந்தது. இதனிடையே, ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திப்புவுக்கு பலத்த ஆதரவை பிரஞ்சு நிர்வாகம் தந்து வந்தாலும், கார்ன்வாலிஸ் போரைத் தொடங்குவதற்கான விருப்பத்திலில்லை.

இந்தநிலை, ஐரோப்பாவில் ராஜாங்க ரீதியானச் சிக்கல்களை மட்டும் உருவாக்கும் என்பதில்லை. திப்புவைத் தோற்கடிப்பதை மிகக்கடினமான ஒன்றாக ஆக்கிவிடும். பிரஞ்சு நிர்வாகத்தின் உதவியைப் பெற்றுவிடக்கூடாது என்று மராத்தியர்களைத் தடுக்க, செய்த உதவி 'திப்புவின் அதிகார உயர்நிலையை மேலும் அதிகமாக்கவே செய்யும். அது பிரஞ்சுப் படையை வல்லமைமிக்கதாக ஆக்கிவிடும்.

ஆனாலும் இந்தநிலை நீண்டகாலத்துக்கு நீடிக்காது' என்றும் கருதினான். அதனால், நிஜாமுக்கோ மராத்தியர்களுக்கோ படையை அனுப்பி உதவும் தேவையிருக்கவில்லை. எனினும், இந்தியாவில் ஆங்கிலேய வல்லாண் மையை நிலைபெறச் செய்ய திப்புவுடன் உடனடியாகவோ அல்லது பின்னெப்போதோ போர் புரிந்தால்தான்முடியும் என்பதையும் அல்லது தேசத்தின் அதிகாரச் சமநிலை மைசூரின் பக்கம் சரிந்துவிடும் என்பதையும் கார்ன்வாலிஸ் நம்பினான். இந்திய மாநிலங் களில், மைசூர் சாம்ராஜ்ஜியம் பலம் வாய்ந்த தாகயிருந்தது. சிறப்பான ஆட்சி வளமையான தேசமாகவும் அது இருந்தது. நிஜாம் மற்றும் மராத்தியர்களின் ஒருங்கிணைந்தப்படை மைசூர் ஆட்சியாளர்களைத் தோற்கடித் திருந்தாலும், பிரஞ்சு அரசரிடமும், துருக்கி சுல்தானிடமும் நட்பை வளர்த்துக் கொள்ளவும். இராணுவ உதவி பெறவும் தூதுவர்க்குழுவை அனுப்பி திப்பு முயற்சி செய்து கொண்டிருப்பது, இந்தியாவில் ஆங்கிலேய வல்லாண்மையை நிலைநிறுத்த விரும்பிய கார்ன்வாலிஸுக்கு பெருத்த அபாயத்தைத் தரவிருப்பதாகத்தோன்றியது. திப்புவை அவன், 'அசாதாரணமானத் திறமைகளைக் கொண்ட இளவரசன் என்றும், எல்லைகளைக்கடந்த லட்சியங்களைக் கொண்டவன் என்றும் எல்லைப் பரப்பை, வளத்தை விரித்துக்கொண்டுசெல்வதில், அடங்காத தாகம்கொண்டவன் என்றும் கர்நாட்டிக்கிலிருந்தக் கம்பெனியின் உடமைகளுக்கு மிரட்டலானச் சக்தியாய் இருப்பவன் என்றும் மற்றவர்களுக்கு அபாயகர மானவன்' என்றும் மதிப்பிட்டிருந்தான். அதனாலேயே, திப்புவின் சக்தியை, பலத்தைக் குறைப்பது அவசியமென்று கார்ன்வாலிஸ் கருதினான்.

மேலாக, இந்தியாவில் ஆங்கிலேயக் கம்பெனியின் உடமைகளை விரிவாக்கிக் கொள்ள இதுதான் இரண்டாவது சந்தர்ப்பம். அதற்கான நேரம் அமைந்து வந்திருக்கிறது என்றும் கருதினான். அதனால் பேராசைக் கொண்ட அவன், தன் கண்களைத் திப்புவின் சாம்ராஜ்ஜியத்தின்மேல் பதித்தான். குறிப்பாக, வளமையான நறுமணப் பொருட்களும், சந்தன மரங்களும், பைன் மரங்களும் கள்ளிக் கோட்டை மற்றும் கண்ணனூர் கோட்டை களையும் உள்ளடக்கிய மலபார் பகுதியின் மேல் வைத்தான். அவற்றைக் கைப்பற்றினால், பதிமூன்று வட அமெரிக்கக் காலனிகளை இழந்ததில் ஏற்பட்ட சரிவை, ஓரளவு சமப்படுத்தமுடியுமென்று அவன் நம்பினான்.

கட்டுப்பாட்டுக்குழுவின் தலைவன் ஹென்றி டூன்டாஸ், எல்லை விரிவாக்கக் கொள்கையைச் செயல்படுத்தச்சொல்லி வலியுறுத்திக் கொண்டேயிருந்தான். பாம்பேயை விரிவுபடுத்தினால் மட்டுமே அது, சுயதேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளு மளவுக்கு வளரமுடியுமென்று கருதினான். இந்திய மேற்குக்கரையோரத்தில், இராணுவ நிலைகளை சங்கிலித்தொடராய்ப் பலப்படுத்தி மேம்படுத்தினால் மட்டுமே, நமது இந்திய சாம்ராஜ்ஜியத்தைப் பாதுகாக்கமுடியும் என்பதும் அதைப் பேச்சு வார்த்தையின் மூலமோ அல்லது வேறு எப்படியாவதோ செய்யவேண்டுமென்ற எண்ணம் அவனுக் கிருந்தது. பின்னர், டூன்டாஸ் கட்டாயப் பேச்சுவார்த்தையின் மூலம் அதை நிறைவேற்ற விரும்பினான். கார்ன்வாலிஸிடம், 'அமைதியற்று அலைபாய்ந்து கொண்டிருக்கும் துரோகக் கொடுங்கோலனானத் திப்புவை அழித்து, பழைய ராஜாவை அவன் இடத்தில் அமர்த்தச்சொல்லி அறிவுரைதந்தான். மைசூரின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி,



திருவாங்கூர், தஞ்சாவூர், அவுத்போல கைப் பொம்மையாக மாற்றச்சொன்னான். திப்புவைத் தூக்கிவீசினால், தேசத்திலிருக்கும் மற்ற அதிகாரங்கள் வருத்தமும் கலக்கமும் அடைந்துவிடும் என்பதையும் மராத்தியர்கள் பலம்கொண்டவர்களாக ஆகிவிடுவார்கள் என்பதையும் அவன் யோசிக்கவேயில்லை. ஆனால் அவர்களுக்குள் ஒற்றுமையில்லாததால், அப்படியொரு அபாயம் அங்கிருக்கவில்லை.

## கார்ன்வாலிஸின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள்

தனது இலட்சியங்களைச் செயல்படுத்து முகமாக, கார்ன்வாலிஸின் கவனம் கம்பெனியின் இராணுவத்தையும் நிதி இலாகாவையும் சீரமைப்பதில் பிடிவாதமாக இருந்தது. இதைச்செயல்படுத்தும் ஆர்வத் தையும் ஊக்கத்தையும் 1787 ஆம் ஆண்டில், டிசம்பர் மாதம் மாலெட், 'கம்பெனியின் இராணுவம் அனைத்து மாகாணங்களிலும் தயாராகயிருக்கிறது' என்று சொன்ன உத்தரவாதம்தான்.

எல்லாவகையிலும் ஆங்கிலேய நிர்வாகம் தயார்நிலையில் இருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டவன், திப்புவுக்கு எதிராக மராத்தியர்களுடனும் நிஜாமுடனும் கூட்டணிக்கானப் பேச்சுவார்த்தையைத் துவக்கினான். மேம்போக்காக, இந்தக் கூட்டணி பாதுகாப்பானதாகத் தெரிந்தாலும் உண்மையில் அது, எதிரிடையானத் தாக்குதல் கூட்டணியாகவே இருந்தது. நாக்பூரிலிருந்தக் கம்பெனி முகவர் போர்ஸ்டருக்கு 1787ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 23 தேதியன்று கார்ன்வாலிஸ் எழுதியக்கடிதத்தில், 'நமது பொதுஎதிரியான திப்புவுக்கெதிராக, மராத்தியர்களுடன் கூட்டணியமைக்க நிர்வாகம் விரும்புகிறது' என்றெழுதுகிறான். மேலும், முதோஜி போன்ஸ்லேயிடம் வேண்டு கோள்வைத்து, பூனா அரசைத்தூண்டி, திப்புவுக்கு எதிரானப் போருக்குத் தயார் படுத்தவும், திப்புவுடன் போரிடுவதற்காக வங்காளத்திலிருந்துவரும் படைகளுக்கு, கட்டாக் வழியாகச்செல்ல தடையற்ற வழிசெய்துகொடுக்க ஏற்பாடு செய்யவும்' என்று கேட்டுக் கொண்டிருந்தான். முதோஜி போன்ஸ்லேக்கு தனிப்பட்டமுறையில் கார்ன் வாலிஸ் எழுதியக் கடிதத்தில், 'ஹைதர் அலி மற்றும் திப்புவின் கைகளால் மராத்தியர்கள் பட்ட அடியையும், அதனால் ஏற்பட்டக் காயங்களையும் வலிகளையும் நினைவூட்டி, வலியைத்துடைத்துப் பழி தீர்த்துக்கொள்ள இதுதான்சமயம், அதனால், ஒன்றுசேருவோம்' என்று அழைப்புவிடுத்தான். அதற்கு இசைவு தெரிவித்த முதோஜி, 'பரஸ்பர இசைவு ஏதுமின்றி திப்புவுடன் அமைதியாகப் போவதில்லை. கிருஷ்ணாவுக்கும் துங்கபத்ராவுக்குமிடையில் மராத்தியர்கள் இழந்த உடமைகளை மீட்காமல் விடப்போவதுமில்லை' என்று வாக்குறுதி கொடுத்தான். இதேபோலானதொரு கடிதத்தை, குவாலியரிலிருந்த பால்மருக்கும் கார்ன்வாலின்

எழுதியனுப்பினான். "சிந்தியா இதற்கு இணக்கம் தெரிவித்தால், பூனா அரசாங்கத்தில் அவனுடையச் செல்வாக்கை பயன்படுத்திக்கொள்வதோடு, திப்புவுக்கு எதிரானப்போரில் மராத்தியர்களின் கூட்டமைப்பை வழி நடத்திச் செல்லலாம். தனிப்பட்டக்கவனத்துடன் செயல்பட்டால், அதை நட்பின் அடையாளமாகக் கருதுவேன். சிறப்பானப் பணிக்கு நமது அரசாங்கத்திடமிருந்து வெகுமதியாகப் பலன்களைப் பெறலாம்' என்று கருணை பொழிந்திருந்தான். இந்தக்கடிதங்கள் எல்லாமே பூனா நிர்வாகத்துக்கும், மாலெட்டுக்கும், அங்கிருந்தக் கம்பெனி முகவருக்கும் அனுப்பப்பட்டன. கூட்டுக்கான முன்மொழிவுகள் நானாவிடமும் சமர்ப்பிக்கப்பட்டன.

திப்பு கர்நாட்டிக்கிற்குள் படையெடுக்கத் தயாராகயிருக்கிறார் என்று மராத்தியர்கள் எண்ணிக்கொள்ளுமளவிற்கு முன்கூட்டியே ஒருவிதப் பதற்றத்தை கார்ன்வாலிஸ் உருவாக்கி விட்டிருந்தான். எனினும், உண்மையில் திப்பு கம்பெனியுடன் கூலிப்போர் நடத்துவதற்குத் தயாராக இருக்கவில்லை. ஒருபாதி, அவர் தயார்நிலையில் இல்லையென்பது உண்மைதான்.

ஆங்கிலேயர்களுடன் அமைதி உடன்பாட்டை எட்டியிருக்கும் பிரஞ்சுப்படையின் உதவியை எதிர்பார்க்க முடியாது என்பது மறுபாதியாக இருந்தது. திப்பு, கர்நாட்டிக்கின்மீது படையெடுக்கப் போகிறார் என்ற புரளி, அப்போது உண்மையாகவே நிலவியிருந்தது. ஆனால் அதற்கான ஆதாரங்கள் ஏதுமிருக்கவில்லை. கர்நாட்டிக் நவாபும், திருவாங்கூர் ராஜாவுமே அந்தப்பொய்ப் புனைவில் கட்டமைந்து கிடந்தார்கள். மற்ற அனைவரும் திப்புவுடனானப் போரில் கம்பெனி ஆர்வமாகப்போய் சிக்கிக்கொள்ளப்போகிறது என்று சொன்னார்கள்." உண்மையில், கார்ன்வாலிஸ் இந்தப் புரளியை நம்பவில்லை. மெட்ராஸ் அரசாங்கத்துக்கு, 'திப்பு நமக்கு எதிரான விரோதத்தை இப்போது கையில் எடுக்கமாட்டான்' என்றே எழுதுகிறான்.

எனினும், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, நீதிமன்ற இயக்குநர்களின் வழிகாட்டுதல், ஆங்கிலேய நிர்வாகம் சினம்கொள்ளும் வாய்ப்பு உருவாகும்படி திப்பு நடந்துகொள்ளாதது எல்லாமே சேர்ந்து கார்ன்வாலிஸால் ஒரு தாக்குதல் கூட்டணியை உருவாக்க முடியாமல்



செய்துவிட்டது. அதனால், 'திப்பு கர்நாட்டிக்கின்மேல் போர் தொடுத்தாலோ அல்லது கம்பெனியின் நட்புநிர்வாகங்கள் மீது தாக்குதல் நடத்தினாலோ, அது பிரஞ்சு உதவியுடனோ அல்லாமலோ எதுவாயினும், மராத்தியர்கள் உடனடியாக மைசூரின் வடக்கு எல்லையில் தாக்குதல் தொடுக்க வேண்டும். ஐரோப்பிய பட்டாலியன்கள், சிப்பாய்ப் படை பெனியால் நன்குபயிற்சி தரப்பட்ட பீரங்கி முற்றுகைப் படை, மராத்தியர்களுக்கு உதவியாக நிற்கும். ஆனால் அதற்கானச் செலவை மராத்தியர்கள் தரவேண்டும். அதேவேளையில் மராத்தியப் படையை திப்புமட்டுமே தனியாகத் தாக்கினால், கம்பெனி நடுநிலைவகிக்கும். பிரஞ்சுப்படை உதவியுடன் திப்பு தாக்குதல் தொடுத்தால் உதவிக்கு வரும்' என்று நானாவுக்கு தென்னத்தெளிவாகச் சொல்லிவிட்டான்.

இந்த முன்மொழிவுகள் நானாவுக்கு ஏற்புடையதாகயில்லை. நிராகரித்துவிட்டான், அவன் ஆங்கிலேயர்கள் மீது பெரும்நம்பிக்கை வைத்திருந்தான். அவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்த்தான், ஈடுபாடுபற்றியக் கடப்பாட்டுநிலையில், இயக்கவகை ஒழுங்கு நிலையற்றப் போக்கு, தாக்குதல் மற்றும் பாதுகாப்பு கூட்டணியில் நிலவுவதை எதிர்த்தான். கூடுதலாக, செயல்பாட்டில் சமத்துவமானப் பங்களிப்பு நட்பு அணியில் இருக்கவேண்டும் என்று விரும்பினான். மாலெட், 1783ஆம் ஆண்டின் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சிக்கல்களையும் 1784ஆம் ஆண்டின் நாடாளுமன்றச் சட்டத்தையும், இந்தவிதிகளின்படி, திப்பு தனியாகத்தாக்கினால், ஆங்கிலேயப் படையால் உதவமுடியாது என்பதையும், நானாவுக்கு தன்னால் முடிந்தவரையில் விவரித்துக் கூறினான். ஆனால் இந்த விளக்கமெல்லாம், நானாவைத் திருப்திப்படுத்தவில்லை. வீணில்முடிந்தது.

ஐரோப்பிய அரசியலும் அதன் நாடாளுமன்றச் சட்டங்களும் 'பம்மாத்து' என்று முடிவெடுத்து, அதில் அவன் ஆர்வம்காட்டவில்லை. அதனால் பேச்சு வார்த்தை முறிந்துபோனது. இது, ஆங்கிலேயர்களுக்கு அதிர்ச்சியைத் தரவில்லை. இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியைத் தராது என்பதை துவக்கத்திலிருந்தே மாலெட் கணித்து வந்தான். 'கடந்த முறை திப்புவுடனானப் போரின்போது உதவமறுத்ததையும், அதனால் மராத்தியர்கள் ஆங்கிலேயர்களின் மீதான நம்பிக்கையை அவ்வளவாக ரசிக்கவில்லை' என்பதையும் கான்வாலிஸிடம் தெரிவித்திருந்தான். 'நமக்கிடையில் செய்துகொண்ட ஒப்பந்தம், உங்கள் வசதிக்கேற்ப வரும்போது, செயலற்றதாகிவிடும். அதேபிரச்சனை உங்களுக்கு வரும்போது, நீங்கள் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை நீங்களே மதிப்பதில்லை. உங்களுக்குத் தேவைப்படும்போது எங்களைக் கூப்பிடுவீர்கள். உங்கள் படைக்கு, அதுவும் உங்களுக்காகப் போரிடும்போது, அதற்கானச் செலவீனங்களை நாங்கள் செலுத்தவேண்டும். பலன்களையும் பெயரையும் நீங்கள் தட்டிக் கொண்டு போய்விடுவீர்கள்' என்று மராத்தியர்கள் சொல்வதாக, கார்ன்வாலிஸிடம் மாலெட் முன்னமே கூறியிருந்தான்.

இந்தப்பேச்சுவார்த்தை முறிந்து போயிருந்தாலும், ஆங்கிலேயர்களுக்கும் மராத்தியர்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படவில்லை. கார்ன்வாலிஸ் தொடர்ந்து நானாவிடம் பேசி, அவன் மனநிலையை மாற்றினான். விரைவிலோ அல்லது பிற்பாடோ, திப்புவுடன் ஏற்படும் ஏதாவது ஒருபிரச்சனையில் சாக்குப் போக்குச்சொல்லி, தனது அதிகார எல்லைகளைத் தகர்த்துக் கொண்டு நானா வருவான் என்றும், அப்போது அவனை வரவேற்போம் என்றும் முன்னமே முடிவுசெய்திருந்தான். அதே வேளையில் மராத்தியர்களுடன் ஆங்கிலேயர்கள் நெருக்கமானப் பிணைப்பைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் இருநாடுகளின் மேன்மைக்காக, மெய்ப்பாட்டுணர்வின் தொடர்புகளை இருதரப்பிலும் சுதந்திரமாகக் கொண்டிருக்கவும் கார்ன்வாலிஸ் விரும்பினான்.

திப்புவுக்கு எதிராக மராத்தியர்களைத் தூண்டிவிட்டதுபோல, கார்ன்வாலின் நிஜாமின் மனதுக்குள் ஆழப்பதிந்திருந்த உணர்வுகளைக் கலக்கிவிட்டான். ஹைதர் அலியால் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்ட உடமைகளை மீட்பது குறித்து, கண்முன்னே ஆடவிட்டான். அதை வைத்து ஆங்கிலேய நிர்வாகம் நிஜாமிடமிருந்து குண்டூர் சர்க்காரை கைமாறாகக் கேட்டது. ஹைதராபாத்தில் அதுகுறித்து கார்ன்வாலிஸ் நடத்தியக் கபடப்பேச்சு பலனேதும் தரவில்லை உண்மையில் குண்டூர் சர்ச்சை, நிஜாமுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையில் தொங்கலை உருவாக்கி, நிஜாம் திப்புவின் பக்கம் சேருவதற்கானச் சந்தர்ப்பத்தை உண்டாக்கியிருந்தது.

1768ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி, குண்டூர் சர்க்காரை ஆங்கிலேயக் கம்பெனிக்கு ஒப்படைக்கும் முடிவுக்குவந்த நிஜாம், அதே உடன்படிக்கையின் ஒருவிதியின்படி, ஹைதர் அலி கைப்பற்றிய தனது மூதாதையரின் உடமைகளை மீட்டுத் தருவதாகக் கம்பெனி ஒப்புக்கொண்டிருந்த உடன்பாட்டை நிறைவேற்றித்தரும்படி வலியுறுத்தினான். அதற்காக, தனது அமைச்சர்களில் ஒருவனான மீர் ஆலம் என்று அறியப்பட்ட மீர் அபுல் காஸிமை, ஆங்கிலேயர்களுடன் மீண்டும் புதிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுவர கல்கத்தாவுக்கு அனுப்பினான். ஆனால் கார்ன்வாலிஸ், நாடாளுமன்றச் சட்டங்களுக்கு எதிராக அப்படியெல்லாம் செய்துகொள்ள முடியாது. அப்படிச்செய்தால், மராத்தியர்கள் பொறாமைக்கு உள்ளாகி, அது நட்பு அணிக்குள் வேறுவிதமானச் சிக்கல்களைக் கொண்டுவந்து சேர்த்துவிடும் என்று தகவல் தெரிவித்தான்.


ஆனால் 1789ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 7ஆம் தேதியன்று நிஜாமுக்கு கார்ன்வாலிஸ் எழுதியக் கடிதத்தில், 1768ஆம் ஆண்டின் உடன்படிக்கைக்குறித்த விதிகளைத் தெளிவுபடுத்தியவன், 'வழக்கம்போல ஆங்கிலேய நிர்வாகம் எல்லாத் தரப்பையும் ஒரேசீரான நிலையில்தான் கருதும்' என்று குறிப்பிட்டிருந்தான். அந்தக்கடிதம் மேலும் விரிவாக உடன்படிக்கையின் ஆறாம்விதியை வரையறுத்துக் கூறியிருந்தது. அதன்படி, 'ஆங்கிலேயப் படைகள் கம்பெனி விவகாரங்கள் அனுமதியளிக்கும் நிலையில், நிஜாமுக்கு உதவியாக நிச்சயம் அனுப்பிவைக்கப்படும்'.

அதன்பொருள்: 'ஆனால், கம்பெனியின் கூட்டிலுள்ளவர்களைத் தவிர்த்து வேறு யாருக்கும் எதிராகப் பயன்படுத்திக் கொள்ளலாம். பேஷ்வா,

சிந்தியா, மற்ற மராத்தியத் தலைவர்கள், கர்நாட்டிக் மற்றும் அவுத்தின் நவாப்புகள், தஞ்சாவூர் மற்றும் திருவாங்கர் ராஜாக்கள் ஆகியோர் கம்பெனியின் கூட்டில் இருப்பவர்கள் ஆவர்' என்ற பேசியது. அந்தப்பட்டியலில் திப்புவின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, கம்பெனியின் நட்புப்பட்டியலில் திப்புவின் பெயர் இல்லாததால் அவருக்கு எதிராகக் கம்பெனியின் படைகளை நிஜாம் அமர்த்திக்கொள்ளலாம். என்று சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்தக்கடிதம், 1768, ஆண்டு மே மாதத்தின் உடன்படிக்கை விதிகளைச் செயல்படுத்துவதைத் தடுத்தால் பால்காட்டின் உரிமையைப் பெறும். மேலும், அப்படியொன்று நிகழ்ந்தால், அல்லது அதற்கானச் சூழல் உருவானால், கம்பெனி தானாகவே, கர்நாட்டிக் மேற்சொன்ன விதிகளின்படி 'மேன்மைமிகுந்தவரின் உதவியுடன் கம்பெனி சம்பந்தப்பட்டப் பகுதியின் உரிமையைக் கைப்பற்றிக்கொள்ளும். இந்த விஷயத்தில் மேன்மை மிகுந்தவருக்கும் மராத்தியர்களுக்கும் ஆதரவாகக் கம்பெனி கண்டிப்பான விதிகளைப் பின்பற்றும்' என்று வடிவம்கொண்டிருந்தது.

ஆங்கிலேயக் கம்பெனி 1768ஆம் ஆண்டின் உடன்படிக்கையுடன் மேலும் இரண்டு உடன்படிக்கைகளை ஹைதர் அலியுடன் செய்துகொண்டிருந்தது. அத்துடன், ...ஆம் ஆண்டில் திப்புவுடனும் ஓர் உடன்படிக்கையைச் செய்திருந்தது. அதில் திப்புவின் உடமைப் பகுதிகளை அவர் ஆட்சிசெய்துகொள்ளும் இறையாண்மையை அங்கீகரித்திருந்தது. ஆனால் கவர்னர் ஜெனரல் கார்ன்வாலிஸ் இப்போது மராத்தியர்களுக்கும் நிஜாமுக்கும் எழுதியக் கடிதம் மங்களூர் உடன்படிக்கையை மீறுவதாக இருந்தது. அது, இந்தியச் சட்டத்தை மீறும் மெய்ப்பொருளாகக் காணப்பட்டது. தவறான உள்நோக்கத்துடன் எழுதப்பட்ட அக்கடிதம், பாதுகாப்பு ஏற்பாட்டு ஒப்பந்தத்தை யாவரும் ஒப்பியநிலையில், திப்புவுடனானப் போரை உருவாக்குவதுபோல கவனமாக வடிக்கப்பட்டிருந்தது. அந்தக்கடிதம் திப்புமீது களிப்போரை நடத்த கார்ன்வாலிஸ் முடிவு செய்திருப்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. இவ்வாறாக, கார்ன்வாலிஸ் போருக்கான ஏதாவது ஒரு காரணத்தை உற்பத்தி செய்வதற்காகக் காத்துக் கொண்டிருந்தான்.



**தி**ரைப்படங்களில் வில்லனுக்கு அருகில் குண்டு பாயும்படி ஹீரோ சுட்டுவிட்டு, சற்றுத் தள்ளி சுட்டால் உயிர் போய்விடும் என்று எச்சரிக்கும் காட்சியைப் பார்த்திருப்போம்.

இந்தப் போரில் அப்படித்தான் பல இடங்களில் பொதுமக்களுக்கு பாதிப்பின்றி தாக்குதல்களை நடத்தி எச்சரித்தது இரான். குறிப்பாக டிமோனாவில் உள்ள இஸ்ரேலின் அணு ஆய்வு மையத்துக்கு மிக அருகில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி, சற்றுத் தள்ளி நடத்தினால் இஸ்ரேல் வைத்திருக்கிற அணுசக்திப் பொருட்களில் ஏற்படும் அணுக்கதிர்வீச்சில் இஸ்ரேலே அழிந்துவிடும் என்று குறியீடாக எச்சரித்தது. அப்படி இரானின் தாக்குதல்கள் எல்லாம் மிகத் துல்லியமாக இருந்தது எப்படி?

இங்கு கவனிக்க வேண்டியது இரானின் தாக்குதல்கள் துல்லியமாக இருந்தது மட்டுமல்ல. இரானுக்குள் அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதல்கள் அப்படியில்லை என்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது. இவற்றுக்குக் காரணம் அறிய ஒரு ஃப்ளாஷ் பேக்-கை நினைவூட்ட வேண்டியுள்ளது.

*1993* ஆக்ஸ்ட். சீனாவிலிருந்து யின்ஹே (Yinhe) என்றொரு சரக்குக் கப்பல் இரானுக்குச் சென்றது. அந்தக் கப்பலில் வேதிம ஆயுதங்களுக்கான மூலப்பொருட்கள் இருப்பதாகக் குற்றம் சாட்டிய அமெரிக்கா, மத்தியக் கிழக்கில் உள்ள எந்தத் துறைமுகமும் அந்தக் கப்பலை அனுமதிக்கக் கூடாது என்று அறிவுறுத்தியது. அத்துடன் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் இந்தக் கப்பலைச் சூழ்ந்து அதன் பாதையையும் குழப்பின. இதற்கெல்லாம் உச்சமாக, அந்தக் கப்பலுக்கான ஜிபிஎஸ் சிக்னலை அமெரிக்கா முடக்கியது. இதனால் வழி தெரியாமல் அந்தக் கப்பல் நடுக்கடலில் *24* நாட்கள் தத்தளித்தது. குடிநீர், எரிபொருள் போன்றவை தட்டுப்பாடாகி தவித்த அந்தக் கப்பல் இறுதியாக *1993* ஆகஸ்ட் *27* அன்று சவுதி அரேபியாவின்

# GPS - அமெரிக்காவின் முனை மழுங்கிய ஆயுதம்!



தமாம் துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அமெரிக்க சீன அதிகாரிகள் முன்னிலையில் சோதனையிடப்பட்டு, அமெரிக்கா குற்றம் சாட்டிய எதுவும் இல்லை என்று நிரூபிக்கப் பட்டது. வீணாக நெருக்கடி அளித்த அமெரிக்கா அதனால் ஏற்பட்ட இழப்புக்கு இழப்பீடு வழங்கவும், தவறுக்கு வருத்தம் தெரிவிக்கவும் மறுத்துவிட்டது.

அமெரிக்காவின் நேவிகேஷன் வசதியைப் பயன்படுத்துவது நம்பிக்கைக்குரியது அல்ல என்று அப்போது முடிவுக்கு வந்த சீனா, தங்களுக்கென்று தனி நேவிகேஷன் சிஸ்டத்தை உருவாக்கத் தொடங்கியது. 2000ல் செயல் பாட்டைத் தொடங்கிய பிடிஎஸ் (BDS/ BeiDou) என்ற சீனாவின் நேவிகேஷன் அமைப்பு 2020இல் உலகம் முழுவதற்குமாக மாறியது.

2025இல் இஸ்ரேலால் இரான் தாக்கப் பட்ட 12 நாட்கள் போரின்போது இரானின் GPS-ஐ இஸ்ரேல் ஜாம் செய்தது. தவறான தகவல்களை(கோ-ஆர்டினேட்களை) இஸ்ரேலின் ஜாமர்கள் அளித்து இரானைக் குழப்பின. இதைத் தொடர்ந்து, இரான் சீனாவின் BDS சிஸ்டத்துக்கு முழுமையாக மாறியது. அப்படி மாறியபோது 2025 ஜூன் 23 அன்று இரான் முழுமையும் அமெரிக்காவின் GPSஐ நிறுத்தியதோடு, அதன் சிக்னல் களையும் முடக்கியது.

ஆக, இந்தப் போரில் இரான் பயன் படுத்தியது சீனாவின் BDS-ஐத்தான். அமெரிக் காவின் GPS-ஐவிட சீனாவின் BDS மேம் பட்டது. "பேசிக்கிட்டே இருந்தா எப்புடி, அடிச்சுக் காட்டு" என்று வடிவேல் சொல்லு வாரே, அப்படி களத்தில் 'அடிச்சு' BDSதான் மேம்பட்டது என்று காட்டிவிட்டது இரான். சுமார் 32 சாட்டிலைட்களின் தகவல்களின் அடிப்படையில் GPS இயங்கினால், சுமார் 50 சாட்டிலைட்களால் BDS இயங்குகிறது.

GPS 5 மீட்டர்தான் வேறுபாடு இருக்கு மளவுக்குத் துல்லியம் என்றால், BDS ஒரு மீட்ட ருக்கும் குறைவான வேறுபாடுதான் இருக்கு மளவுக்குத் துல்லியம். இன்னும் ராணுவப் பயன்பாட்டில் 10 செமீ துல்லியம் கொண்டி ருக்கிறது BDS. இரானின் குறி தவறாத தாக்குதல்களில் பின்னணி இதுதான். அது மட்டுமின்றி, போர்க்களத்துக்கென்று சில சிறப்பு வசதிகளையும் BDS கொண்டிருக்கிறது.

அடிப்படையில் GPS என்பது ராணுவத் துக்காகவே உருவாக்கப்பட்டது. இடங்களை அடையாளம் காணும் முயற்சி, இரண்டாம் உலகப்போரின்போது, விமானத்திலிருந்து தாக்கவேண்டிய இலக்குகளை அடையாளம் காண்பதற்காகவே தொடங்கியது. 200 மைல் தொலைவிலுள்ள இலக்கினை, 1000 அடிக் குள்ளான வித்தியாசத்துடன் துல்லியமாகத் தாக்குவதற்கு உதவுவதற்காக ப்ராஜெக்ட்-3 என்ற திட்டத்தை, அமெரிக்க ராணுவம் 1940இல் தொடங்கியது. ராடார் போன்ற கருவிகளில் ஏற்கெனவே பயன்பாட்டிலிருந்த ரேடியோ நேவிகேஷன் என்ற முறையைப் பயன்படுத்தி, 1942இல் லோரான் (LORAN - Long-Range Radio Aid to Navigation) உருவாக் கப்பட்டது. விமானங்கள் தங்கள் இருப்பிடத் தைக் கணிக்க உதவும் டெக்கா நேவிகேட்டர் சிஸ்டம் (Decca Navigator System) என்பது, இதே ரேடியோ நேவிகேஷன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, இங்கிலாந்தின் டெக்கா ரெக்கார்ட் கம்பெனியால் 1944இல் உருவாக்கப்பட்டது. 1957இல் உலகின் முதல் செயற்கைக்கோளான ஸ்புட்னிக்-1 சோவியத் ஒன்றியத்தால் ஏவப்பட்டது.

டாப்ளர் விளைவைக்கொண்டு, இச்செயற்கைக்கோளின் இருப்பிடத்தைக் கணிக்கமுடியும் என்று வில்லியம் கூயர், ஜார்ஜ் வெய்ஃபென்பேக் என்ற அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். இங்கிருந்து செயற்கைக்கோளின் இடத்தைக் கணிக்க முடியும்போது, செயற்கைக்கோளின் இடத்தைக்கொண்டு, நம் இடத்தைக் கணிக்க முடியுமா என்று ஆராயுமாறு அவர்களை பாதுகாப்புத்துறை கேட்டுக்கொண்டது.

5 செயற்கைக்கோள்களின் இடத்தைப் பயன்படுத்தி புவியில் இடத்தைக் கணிக்கும் ட்ரான்சிட் (TRANSIT) 1960இல் உருவாக்கப் பட்டது. சார்பியல் கொள்கைப்படி, புவியீர்ப்பு விசையால் நேரத்தில் ஏற்படும் மாறுபாடு, புவியைச் சுற்றும் பொருட்களின் இடத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தும் என்று ஃப்ரீட் வார்ட் விண்ட்டர்பர்க் 1955இலேயே கூறியிருந் தார். சார்பியல் கொள்கைப்படியான நேர வேறுபாட்டைக் கணக்கிட, கடிகாரத்துடன் கூடிய டைமேஷன் (Timation) செயற்கைக்

கோளை 1967இல் அமெரிக்கக் கடற்படை உருவாக்கியது. 1970களின் தொடக்கத்தில் ஒமேகா நேவிகேஷன் சிஸ்டம் (OMEGA navigation system) உருவானது. அணுக் கடிகாரங்கள் பொருத்தப்பட்ட செயற்கைக் கோள்கள்மூலம் துல்லியம் அதிகரிக்கப்பட்டாலும், பனிப்போர்க் காலத்தில் இதனை ராணுவ வசதியாக, மிக ரகசியமாக வைத்திருந்தது அமெரிக்கா.

அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை 1978இல் ஜிபிஎஸ் (GPS - Global Positioning System)-ஐப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்து, 1980இல் பொதுமக்களுக்கும் அனுமதித்தாலும், அமெரிக்க ராணுவத்துக்கு மட்டுமே துல்லியமான GPS வழங்கப்பட்டது.

மக்களுக்கான GPS வசதி எதிரிகளுக்குப் பயன்பட்டுவிடும் என்று கூறி, அந்த வசதியில் வேண்டுமென்றே தவறுகள் (error) சேர்க்கப்பட்டன. ராணுவத்திற்கு 5 மீட்டருக்குள் அடையாளம் காணும் துல்லியத்துடன் GPS செயல்பட்டால், பிறருக்கு அது 50 மீட்டராக வழங்கப்பட்டது SA(Selective Availability) என்றழைக்கப்பட்டது. கார்கில் போரின்போது, எல்லைப்பகுதிகளைக் காக்க, இந்திய ராணுவத்துக்குக்கூட துல்லிய GPS வசதியை அளிக்க அமெரிக்கா மறுத்தது குறிப்பிடத்தக்கது.

இப்படியான காரணங்களால், 1982இலேயே சோவியத் ஒன்றியம் உருவாக்கிய 'க்ளோனாஸ்' (GLONASS - Global Navigation Satellite System) தொடங்கி, பிற நாடுகளும் தங்களுக்கான, இடங்காட்டும் தொழில் நுட்பங்களை உருவாக்கத் தொடங்கிய நிலையில், 'போட்டியைச் சமாளிக்க', அதாவது பிற நாடுகள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும் ஆர்வத்தைக் குறைக்கும் நோக்கில், 2000 மே 2இல்தான் இந்த SA கட்டுப்பாட்டை அமெரிக்க அரசு நீக்கி, ராணுவத்துக்குக் கிடைக்கும் அதே துல்லியத்தை பிறருக்கும் வழங்கத் தொடங்கியது.

ஆனால், அதற்குள் சீனாவின் BDS உருவாகிவிட்டது என்பது கவனிக்கத்தகது. ஏற்கெனவே ரஷ்யா க்ளோனாஸ் என்ற உலகளாவிய நேவிகேஷன் சிஸ்டத்தை வைத்திருக்கிற நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்களுக்கென்று உருவாக்கிக்கொண்டிருக்கிற கலீலியோ என்ற நேவிகேஷன் சிஸ்டம் இவ்வாண்டில்(2026) பயன்பாட்டுக்குவரவிருக்கிறது. ஆக, GPS, BDS, க்ளோனாஸ், கலீலியோ என்று 4 உலகளாவிய நேவிகேஷன் சிஸ்டங்கள் இனி செயல்படும். அதே நேரத்தில் தங்கள் பகுதிக்கு மட்டுமாக க்வாசி ஜெனித் (Quasi-Zenith Satellite System - QZSS) என்பதை 8 சாட்டிலைட்களுடன் ஜப்பானும், ராணுவப் பயன்பாட்டுக்கு மட்டும் தங்கள் பகுதிக்குள் நேவிக் (NavIC - Navigation with Indian Constellation அல்லது IRNSS - Indian Regional Navigation Satellite System) என்பதை 7சாட்டிலைட்களுடன் இந்தியாவும் உருவாக்கியுள்ளன. இன்னும் கொரியா தனக்காக ஓர் அமைப்பையும் (Korea Positioning System - KPS), ஜப்பான்-தென்கொரியா இணைந்து ஓர் அமைப்பையும் (East Asia regional navigation system) உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இத்தனை நேவிகேஷன் சிஸ்டங்கள் தேவையா என்ற கேள்வி எழலாம். தேவை என்பதைத்தான் இஸ்ரேலும் அமெரிக்காவும் உணர்த்திக்கொண்டிருக்கிறன. இடங்காட்டும் அமைப்பை வைத்திருக்கிற ஒரு நாடு, அதைக் கொண்டு ஒரு நவீன ஏகபோகமாகச் செயல்பட முடியும் என்பதை, தொடக்கத்திலேயே அதில் செயற்கையாக தவறுகளை (error) சேர்த்து அளித்து அமெரிக்கா காட்டிவிட்டது.

2025-26இல் மட்டும் இந்தப் போர்க் காலத்தில் இஸ்ரேல் செய்த ஜாமிங்-ஸ்பூஃபிங் வேலைகளால் ஹார்முஸ் நீரிணையில் மட்டும் 1100 கப்பல்கள் பாதிப்புக்குள்ளாயின. இதனால், கப்பல்கள் இருக்கிற இடம் தவறாக - விமான நிலையத்தில் கப்பல் நிற்பது போலக்கூட - GPS காட்டியது. அமெரிக்கா நினைத்தால் எதிரிக்கு GPS-ஐ தடுத்து, கண் தெரியாதது போன்ற நிலையை ஏற்படுத்த முடியும் என்பதை அது 1993இலேயே காட்டிவிட்டது.

ஆக, GPS என்பது ஒரு முக்கியமான ஆயுதம் என்ற நிலையை எட்டியிருக்கிறது. அந்த ஆயுதம் அமெரிக்காவின் கையில் மட்டும் இருப்பதைத்தான் இந்த புதிய நேவிகேஷன் சிஸ்டங்கள் முடிவுக்குக் கொண்டு வருகின்றன. அமெரிக்காவின் அந்த ஆயுதமும் முனை மழுங்கியதுதான் என்பதை இந்தப் போரில் இரான் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது!

-அறிவுக்கடல்



# அமெரிக்காவுக்கு விழுந்த 'பேரிடி'! காலி ஆன ஆயுதக் கிடங்கு.. ஓராண்டு ஏவுகணைகள் 38 நாளில்?

**கடந்த பிப்ரவரி இறுதியில் அமெரிக்கா ஈரானுக்கு எதிராகத் தொடங்கிய 'ஆபரேஷன் எபிக் பியூரி' (Operation Epic Fury) போரின் விலை என்ன? அமைதிப் பேச்சு வார்த்தைகள் ஒருபுறம் நடக்க, மறுபுறம் போர்க்களத்தில் அமெரிக்கா இழந்த ஆயுதங்கள் மற்றும் நிதி குறித்த புள்ளி விவரங்கள் இப்போது வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.**

38 நாட்கள் நடந்த இந்த மோதலில், அமெரிக்கா ஒரு நாளைக்குச் சராசரியாக 1 பில்லியன் டாலர், அதாவது சுமார் 8,400 கோடி ரூபாயைச் செலவு செய்துள்ளது. இது போர்க்களத்தில் மட்டும் நடந்த செலவு, இதன் நீண்டகாலப் பாதிப்புகள் இன்னும் அதிகம் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கா பயன் படுத்திய ஆயுதங்களின் எண்ணிக்கை மலைக்க வைக்கிறது. சுமார் 1,100 'JASSM-ER' ஸ்டெல்த் ஏவுகணைகள், 1,000-க்கும் மேற்பட்ட டோமா ஹாக் (Tomahawk) ஏவுகணைகள் மற்றும் 1,200-க்கும் மேற்பட்ட பேட்ரியாட் (Patriot) இடைமறிப்பு ஏவுகணைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இதில் மிக முக்கியமான விஷயம் என்ன வென்றால், அமெரிக்கா ஓராண்டில் உற்பத்தி செய்யும் மொத்த பேட்ரியாட் ஏவுகணை களின் எண்ணிக்கையை விட, இந்த 38 நாட்களில் பயன்படுத்திய எண்ணிக்கை மிக அதிகம். இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு ஆயுதங்களைச் செலவழித்திருப்பது, அமெரிக்காவின் ராணுவக் கிடங்குகளில் ஒரு பெரும் வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது. இதை மீண்டும் சரிசெய்ய பல ஆண்டுகள் ஆகலாம் என்று பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த ஆயுதத் தட்டுப்பாடு ஏன் இவ்வளவு ஆபத்தானது? என்றால், அமெரிக்கா தனது பாதுகாப்பிற்காகவும், சீனாவுடனான மோதல் சாத்தியமுள்ள பசிபிக் பிராந்தியத்திற்காகவும் சேமித்து வைத்திருந்த ஆயுதங்களைத்தான் ஈரான் போருக்காகக் காலி செய்துள்ளது. தென்கொரியாவில் இருந்த 'THAAD' ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் பசிபிக் பிராந்தியத்தில் இருந்த ராணுவத் தளவாடங்கள் அனைத்தும் மத்திய கிழக்குக்கு மாற்றப்பட்டன. இது, ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பை பலவீனப்படுத்தியுள்ளது.

இந்தச் செலவுகளை ஒரு சாதாரண மனிதர் புரிந்துகொள்ளும் வகையில் சொன்னால், அமெரிக்காவில் ஏழை எளிய மக்களுக்கான உணவுத் திட்டத்திற்கு (SNAP/Food stamps) ஒரு நாளைக்கு 300 மில்லியன் டாலர் மட்டுமே செலவிடப்படுகிறது. ஆனால், ஈரான் போருக்காக ஒரு நாளைக்கு 1 பில்லியன் டாலர் செலவாகிறது.

அதாவது, அமெரிக்காவின் ஏழை மக்களின் 3 நாள் உணவிற்கான செலவு, ஈரான் போரின் 1 மணிநேர செலவுக்குச் சமம். வெள்ளை மாளிகை, "எங்களிடம் ஆயுதங்கள் தாராளமாக உள்ளன" என்று மறுத்தாலும், காங்கிரஸ் மற்றும் பாதுகாப்புத் துறை வட்டாரங்களில், ஆயுதக் கிடங்குகள் 'அபாயகரமான அளவுக்குக் குறைந்துவிட்டதாக' தகவல்கள் கசிகின்றன.

வரலாற்று ரீதியாக, போர்க்காலத்தின் மொத்த செலவில் 40 சதவீதம் வீரர்களின் ஓய்வூதியம் மற்றும் மருத்துவச் செலவுக்கே செல்லும். அந்த வகையில், இந்த ஈரான் போர் அமெரிக்காவிற்கு 1 டிரில்லியன் டாலர் வரை பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தலாம் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். இந்தத் தரவுகள் அனைத்தும், போர் என்பது வெறும் எல்லைப் பிரச்சினை மட்டுமல்ல, அது ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பையே எப்படிச் சிதைக்கும் என்பதற்கு ஒரு பாடமாக உள்ளது.




# ஜாஹிலிய்யா அரசு, இமாம்கள் VS இஸ்லாமிய புரட்சியாளர்கள்

**வாசகர்கள் கவனத்திற்கு இந்த தொடரில், ஈரானில் புரட்சிக்கு முன், பஹ்லவி ஆட்சியில், குதுபின் நூல்களை மொழிபெயர்த்தவர்கள் என்னென்ன சோதனைகளை எதிர்கொண்டார்கள், என்றும் சொந்த சமுதாய இமாம்களும், ஆலிம்களும் புரட்சியாளர்களுக்கு எதிராக நின்றதையும் குறிப்பிட்டிருந்தோம்.**

*மேலும் 2015ஆம் ஆண்டு தெஹ்ரானில், நடந்த குதுப் குறித்த மாநாட்டில் பேசிய இமாம்கள், ஆலிம்களின் விமர்சனங்களையும், அதற்கு புரட்சியில் பங்கேற்றவர்கள் கொடுத்த பதில்களையும் விவரித்துள்ளோம்.*

*வாசிக்கும் வாசகர்கள், இது ஏதோ குதுபை வைத்து ஈரானில் குழாயடி சண்டை நடந்துள்ளதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். அது ஒரு கலந்துரையாடல்தான். அதற்கான முக்கியமான காரணம், குதுபின் சிந்தனைகள் தான் ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற இயக்கங்கள் உருவாக காரணம் என்று, அமெரிக்கா, இஸ்ரேல் அடிவருடிகள் சிலர் அங்கே குழப்பத்தை ஏற்படுத்த முயன்றனர். அந்த சதியை முறியடிக்கவே இத்தகைய கலந்துரையாடல் ஒன்று 2015இல் ஈரானில் நடத்தப்பட்டது. அதில் குதுப் சிலாரால், விமர்சிக்கப்பட்டார். சிலரால் ஆதிரிக்கப்பட்டார். ஆனால் இறுதியாக, குதுப்-இன் சிந்தனை இஸ்லாமிய உம்மத்தின் ஒற்றுமைக்கு மட்டுமே கை கொடுக்கும் என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டது ஈரானில். இந்த புரிதலோடு இந்த தொடரை வாசிக்கவும்.*

**சோதனைகள்**

புரட்சிக்கு முந்தைய ஈரானில் செய்யித் குத்பின் (Sayyid Quṭb) படைப்புகள் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டதும், அவை பரவலாக விநியோகிக்கப்பட்டதும், அவரை ஒரு இஸ்லாமிய கருத்தியல்வாதியாக நிலை நிறுத்தியதையும் முந்தைய தொடரில் பார்த்தோம். ஆனால், குத்பின் எழுத்துக்கள் பஹ்லவி ஆட்சி மற்றும் ஷியா மதகுருமார்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடமிருந்து எதிர்மறையான எதிர்வினைகளையும் தூண்டியது. மதச்சார்பற்ற அரசின் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ், மதம் சார்ந்த வெளியீடுகள் தீவிரக் கண்காணிப்பிற்கும் தணிக்கைக்கும் உட்படுத்தப்பட்டன.

இந்த படைப்புகளை வெளியிட்டவர்கள் பல்வேறு விதிமுறைகளையும் சோர்வடையச் செய்யும் அதிகாரத்துவ நடைமுறைகளையும் எதிர்கொண்டனர். அதே நேரத்தில், பஹ்லவி ஆட்சியின் உளவு அமைப்பான 'சாவக்' (SAVAK), ஈரானிய இஸ்லாமியவாதிகளின் அறிவுசார் செயல்பாடுகளைத் தீவிரமாகக் கண்காணித்தது.

புரட்சிக்குப் பிறகு கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களின்படி, குத்பின் படைப்புகளின் பாரசீக மொழிபெயர்ப்புகள் இஸ்லாமிய ஆட்சியை ஊக்குவித்ததாலும், பஹ்லவி ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பைத் தூண்டியதாலும், அவை அரசு மற்றும் சமூகத்தின் நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாக சாவக் (SAVAK) கருதியது.

### அலி காமெனி

குத்பின் படைப்புகளை மொழிபெயர்த்த முக்கியமானவர்களில் ஒருவரான அலி காமேனி, சாவக் (SAVAK) அமைப்பின் மிகக் கடுமையான கண்காணிப்பிற்கு உள்ளானார். இறுதியில், இந்த அழுத்தத்திலிருந்து தப்பிக்க அவர் மஷ்ஹத் (Mashhad) நகரில் இருந்து தெஹ்ரானுக்கு இடம்பெயர வேண்டியிருந்தது.

காமேனி மொழிபெயர்த்த குத்பின் The Future of This Religion என்ற புத்தகத்தை அச்சிட்ட 'சப்பீதே பதிப்பகம்' (Sapideh Publishing) சாவக் அமைப்பால் மூடப்பட்டதுடன், மீதமிருந்த புத்தகங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. காமேனியின் நண்பர்களால் ஒரு சில பிரதிகள் மட்டுமே காப்பாற்றப்பட்டன. காமேனி பலமுறை கைது செய்யப்பட்டார். குத்பின் புத்தகத்தை மொழிபெயர்த்து வெளியிட்டதன் மூலம் அரசாங்கத்தை அவமதித்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டார்.

அந்தப் புத்தகத்தின் உள்ளடக்கங்களும், காமேனியின் சொந்த அறிக்கைகளும் அவர் பஹ்லவி ஆட்சியின் பாதுகாப்பிற்கு ஒரு பெரிய அச்சுறுத்தல் என்பதை நிரூபிக்கப் பயன்படுத்தப்பட்டன. அவரது விசாரணையின் போது, அரசாங்கம் அவருக்கு எதிரான ஆதாரங்களாக அவர் மொழிபெயர்த்த புத்தகத்தின் பக்கங்களையே சமர்ப்பித்தது.

### ஹாதி கோஸ்ரோஷாஹி

குத்பின் "இஸ்லாத்தில் சமூக நீதி" (Social Justice in Islam) என்ற நூலின் தனது மொழிபெயர்ப்பிற்கு, 1999-ஆம் ஆண்டு பதிப்பின் முன்னுரையில் ஹாதி கோஸ்ரோஷாஹி, பஹ்லவி ஆட்சியின் தணிக்கைக் கொள்கை குறித்துப் புகார் தெரிவித்துள்ளார். தான் வெளியிட்ட ஒவ்வொரு பதிப்பிற்கும் பஹ்லவி ஆட்சியின் கல்வி அமைச்சகம் மற்றும் தேசிய நூலகத்திடம் அனுமதி பெற வேண்டியிருந்தது என்று அவர் அதில் குறிப்பிடுகிறார்.

ஒவ்வொரு முறையும், இந்த நிறுவனங்கள், புத்தகத்தின் சில பகுதிகளை, குறிப்பாக அரசியல் அமைப்பு, சமூகம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான பகுதிகளைத் தணிக்கை செய்தன. இதன் காரணமாகவே, "ஆட்சியின் தணிக்கை அதிகாரிகளால் பல பக்கங்களின் உள்ளடக்கங்கள் நீக்கப்பட்டு, மொழிபெயர்ப்பின் வெவ்வேறு பதிப்புகளில் வெற்றுப் பக்கங்களைக் காண்பது ஆச்சரியமான ஒன்றாக இருக்கவில்லை" என்றும் அவர் கூறுகிறார்.

### குத்பிற்கு எதிரான ஷியா அறிஞர்கள்

பஹ்லவி அரசின் தணிக்கைக்கு மேலதிகமாக, குத்பின் மொழிபெயர்ப்புகள் ஈரானில் உள்ள சில ஷியா மதகுருமார்களின் கண்டனத்திற்கும் உள்ளாயின. உதாரணமாக, 1971-இல் அபூ ஃபழ்ல் ரளவி அர்தகானி, "உண்மையைப் பாதுகாத்தல், செய்யித் குத்பின் திட்டமிட்ட தவறுகளின் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டுதல்" என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினார்.

இந்த நூலில், அர்தகானி குத்பை ஒரு மதவெறி பிடித்தவராகவும், நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாருக்கு (அஹ்லுல் பைத் - Ahl al-Bayt) எதிரான கசப்பான எதிரியாகவும் சித்தரிக்கிறார். குத்பு தனது குர்ஆன் விளக்கவுரையான 'ஃபீ ஜிலாலில் குர்ஆன்' நூலில், அஹ்லுல் பைத்தை மறைமுகமாகக் குறிப்பிடும் வசனங்களுக்கு, அத்தகைய குறிப்புகளை அங்கீகரிக்க மறுக்கும் சன்னி விளக்கவுரைகளை மீண்டும் பயன்படுத்தியதன் மூலம் நபிகளாரின் குடும்பத்தின் மீது தனது பகையை வெளிப்படுத்தியுள்ளார் என்று அர்தகானி வாதிடுகிறார். மேலும், குத்பை

இஸ்லாத்தின் தியாகி (ஷஹீத்) என்று அழைப் பவர்களையும் அர்தகானி விமர்சித்தார்.

குத்பின் பாரசீக மொழிபெயர்ப்புகளுக்கு எதிராகக் கடும் கண்டனம் தெரிவித்ததோடு, குத்பை நேரடியாகவே கடுமையாக விமர்சித்த மற்றொரு ஷியா இமாம், ஆயத்துல்லாஹ் செய்யித் இப்ராஹிம் மிலானி (Ayatollah Sayyid Ibrāhīm Mīlānī) ஆவார். குத்பு தனது குர்ஆன் விளக்கவுரையில் நபிகளாரின் குடும்பத்தைப் பற்றித் தெரிவித்த கருத்துகளின் காரணமாக, மிலானி அவரை "மதமும் ஈமானும் (நம்பிக்கையும்) இல்லாத ஒரு மனிதர்" என்று அழைத்தார்.

### அலி ஷரீஅதி

அதேபோல், ஈரானிய இஸ்லாமிய கருத்தியல்வாதியான அலி ஷரீஅதிக்கு எதிராக வும் அவர் ஒரு ஃபத்வாவை (மார்க்கத் தீர்ப்பு) வெளியிட்டார். ஷரீஅதியின் "ஷியா எதிர்ப்புப் பார்வைகள்" மற்றும் "மேற்கத்திய தத்துவத்தின் மீதான ஈடுபாடு" ஆகியவற்றைக் காரணம் காட்டி, அவரது புத்தகங்களைப் படிப்பதற்கும் அவரது உரைகளைக் கேட்ப



அலி ஷரீஅதி

தற்கும் மிலானி தடை விதித்தார். இஸ்லாமிய ஒற்றுமை என்ற போர்வையில் குத்பின் கருத்துகளைப் பரப்புவதற்காகவும் அவரைப் புகழ்ந்ததற்காகவும் ஷரீஅதி போன்ற இமாம் அல்லாத இஸ்லாமியவாதிகளை மிலானி விமர்சித்தார். மேலும், குத்பைப் பின்பற்று பவர்களுக்குப் புத்திசாலித்தனமும் பகுத்தறியும் திறனும் மிகக் குறைவு எனக்கூறி அவர்களை ஏளனம் செய்தார்.

குத்பின் மொழிபெயர்ப்புகள் குறித்து பழமைவாத இமாம்களின் எதிர்வினைகள் மற்றும் கும் (Qum), மஷ்ஹத் (Mashhad) ஆகிய நகரங்களில் இருந்த ஷியா கல்வி மையங்களின் அப்போதைய சூழல் குறித்து ஹாதி கோஸ் ரோஷாஹி முக்கியமான தகவல்களை வழங்குகிறார்.

"இஸ்லாத்தில் சமூக நீதி" நூலின் 1999-ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புப் பதிப்பின் முன்னுரையில், இந்த மொழிபெயர்ப்புகள் மதப் பள்ளிகளில் (மதரஸாக்கள்) இருந்த மதகுருமார்களுக்கு ஒரு விரும்பத்தகாத புதிய விஷயமாகத் தெரிந்ததாகக் கோஸ்ரோஷாஹி குறிப்பிடுகிறார். இதன் காரணமாக, அவரும் குத்பின் பிற ஈரானிய மொழி பெயர்ப்பாளர் களும் ஒரு "சுன்னி எழுத்தாளரின்" நூலை மொழிபெயர்த்ததற்காக அவர்களில் சிலரால் விமர்சிக்கப்பட்டனர்.

இத்தகைய விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக கோஸ்ரோஷாஹி கூறியதாவது:

"நான் மொழிபெயர்த்தது அக்காலத்தின் ஒரு முக்கிய இஸ்லாமிய அறிஞராலும், குர்ஆனின் சிறந்த விரிவுரையாளராலும் எழுதப்பட்ட, அறியப்பட்ட மற்றும் மதிக்கப்படும் ஒரு புத்தகமாகும். அவர் குர்ஆனின் கொள்கைகள் மற்றும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையிலேயே தனது புத்தகத்தை எழுதியுள்ளார்."

அவர் ஒரு இளம் மத மாணவராக இருந்தபோது, குத்பின் புத்தகங்களை முதன் முதலில் மொழிபெயர்க்கத் தொடங்கிய சமயம், கும் (Qum) நகரில் இருந்த சில மதகுரு மார்கள் ஒரு சுன்னி எழுத்தாளரின் நூலை மொழிபெயர்ப்பதற்குத் தங்களது மதப்பிரிவு ரீதியான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இருப்

பினும், அலி ஷரீஅதி, ஆயத்துல்லாஹ் முர்ததா முதஹரி மற்றும் ஆயத்துல்லாஹ் மஹ்மூத் தலகானி ஆகியோர் அவரை ஊக்குவித்தனர்.

இந்த மொழிபெயர்ப்புகளின் காரணமாகச் சில அறிஞர்கள் அவரை ஒரு மறைமுகமான "சுன்னி" அல்லது "வஹாபி" என்று கூடக் குற்றம் சாட்டியதாக கோஸ்ரோஷாஹி நினைவு கூர்கிறார். இத்தகைய அதிருப்திகள் அவருக்கும் பிற மொழிபெயர்ப்பாளர்களுக்கும் அந்த இமாம்களுடனான தனிப்பட்ட உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தின. உதாரணமாக, சில இமாம்கள் அவரைப் பார்த்தபோது முகமன் (Greetings) கூறக்கூட மறுத்துவிட்டனர்.



ஹாதி கோஸ்ரோஷாஹி

இருப்பினும், இமாம்களிடமிருந்து வந்த இத்தகைய எதிர்வினைகளைத் தான் பொருட்படுத்தவில்லை என்று கோஸ்ரோஷாஹி கூறுகிறார்.

அவரது வார்த்தைகளில் சொல்வதானால்:

"இந்த எதிர்வினைகளும் எதிர்ப்புகளும் எங்களைச் சிறிதும் பாதிக்கவில்லை! எங்களுக்கு எந்த அச்சமும் இருக்கவில்லை, ஏனெனில் நாங்கள் தொழுகைக்குத் தலைமை தாங்குபவர்கள் (இமாம்கள்) கிடையாது, எனவே அவர்கள் எங்களைப் பின்தொடர மறுப்பார்கள் என்ற கவலை எங்களுக்கு இல்லை. அதேபோல் நாங்கள் யாரிடமும் 'கும்ஸ்' (Khums - மத வரி) கேட்பதுமில்லை, எனவே அதை இழந்துவிடுவோம் என்ற கவலையும் எங்களுக்கு இருக்கவில்லை."

அதே உணர்வோடு, கோஸ்ரோஷாஹி குறிப்பிடுகையில்,

“தாமும் சக மொழிபெயர்ப்பாளர்களும் எந்தத் தரப்பிலிருந்து அழுத்தம் வந்தாலும் அதற்குப் பணியவில்லை என்றும், குத்பின் புத்தகங்களை வெளியிடுவதன் மூலம் இஸ்லாமிய இயக்கத்தின் அறிவுசார் அடித்தளத்தை நிறுவத் தங்களால் இயன்ற வரை முயன்றதாகவும் கூறுகிறார். ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் தற்போதைய இருப்பே தங்கள் இலக்கை அடைந்ததற்கான சான்று என்று அவர் வாதிடுகிறார். ஏனெனில் ஈரானின் இஸ்லாமிய இயக்கம் ஒரு வெற்றி கரமான புரட்சியில் உச்சகட்டத்தை அடைந்ததை இது நிரூபிக்கிறது.

சமூக நீதி மற்றும் இஸ்லாமிய ஆட்சி முறை ஆகிய இலக்குகளை முன்னெடுப்பதில் குத்பின் படைப்புகள் இன்றும் அந்த இஸ்லாமிய அரசுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் தொடர்கின்றன.”

**ஆயத்துல்லாஹ் முர்ததா முதஹரி**

செய்யித் குத்பின் படைப்புகளை மொழி பெயர்க்கும் பணியைத் தொடருமாறு ஆயத்துல்லாஹ் முர்ததா முதஹரி, ஹாதி கோஸ்ரோஷாஹி உள்ளிட்ட இளம் மத மாணவர்களை ஊக்குவித்ததாக கோஸ்ரோஷாஹி உறுதிபடக் கூறினாலும், முதஹரி அந்தப் படைப்புகளின் தாக்கம் மற்றும் அவற்றின் பக்கவிளைவுகள் குறித்துப் புகார் தெரிவித்துள்ளார்.

அவரது நூலான 'இலால்-இ கிராயஷ்-இ மத்திகரி' (The Causes Responsible for Materialist Tendencies - பொருள்முதல்வாதப் போக்குகளுக்கான காரணங்கள்) என்பதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"துரதிர்ஷ்டவசமாக, முஸ்லிம் அரபு எழுத்தாளர்களில் அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு குழுவினர், சமீபகாலமாக



ஒருபுறம் மேற்கத்திய அனுபவவாதத்தின் (Empiricism) தாக்கத்தினாலும், மறுபுறம் அஷ்அரி (Ash'arī) இறையியல் கடந்த காலத்தின் தாக்கத்தினாலும் ஒருவித அறிவுசார் தேக்கத்தையும், இறையியல் அறியாமையையும் (Agnosticism) பரப்பி வருகின்றனர். அவர்கள் அனுபவவாதத்துடன் கலந்த ஒரு வகையான அஷ்அரி சிந்தனையைப் பிரபலப்படுத்த முயன்று வருகின்றனர். ஃபரித் வஜ்தி மற்றும் ஓரளவிற்குச் செய்யித் குத்பு, முஹம்மது குத்பு, செய்யித் அபுல் ஹசன் நத்வி ஆகியோர் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள். ஓரளவிற்கு இந்த வகையான சிந்தனை இங்கும் [ஈரானுக்கும்] வந்து சேர்ந்துள்ளது."

மற்றொரு இடத்தில், ஈரானிய புரட்சிகர அறிஞர்கள் எகிப்திய இஸ்லாமிய எழுத்தாளர்களைச் சார்ந்து இருப்பது குறித்து முதஹரி தனது அதிருப்தியை வெளிப்படுத்துகிறார். 'தஹ் குஃப்தார்' (Dah guftār - பத்து உரைகள்) என்ற நூலில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"ஈரானின் இஸ்லாமிய அறிஞர்கள், எகிப்திய அறிஞர்கள் இஸ்லாமிய சமூகப் பிரச்சினைகள் குறித்து புதிய புத்தகங்களை எழுதுவதற்கும் நவீனப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் தங்களின் சொந்த மதத் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர்; அந்தத் தலைவர்கள் சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தவறியதோடு, வெறும் 'ஷியா நடைமுறை சட்ட வழிகாட்டிகளை' (Shia manuals of practice) மட்டும் எழுதி சாமானிய மக்களைக் கவர முயல்கிறார்கள்."

இதுதவிர, இஸ்லாமியப் புரட்சிக்கு முந்தைய ஆண்டுகளில் நிலைமை மாறத் தொடங்கிவிட்டதாகவும், தற்போது ஷியா எழுத்தாளர்கள் தங்களின் எகிப்திய சகாக்களை விடவும் முக்கியமான பிரச்சினைகளை இன்னும் ஆழமாக அணுகத் தொடங்கி விட்டதாகவும் முதஹரி உரிமை கோருகிறார்.

### செய்யித் குத்பின் பார்வைகளை மறுவாசிப்பு செய்தலும் மறுபரிசீலனை செய்தலும்" (தெஹ்ரான், பிப்ரவரி 15-16, 2015)


2015-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கலாச்சாரம் மற்றும் அறிவுசார் செயல்பாடுகளுக்கான, தெஹ்ரானைத் தளமாகக் கொண்ட இஸ்லாமிய இளைஞர் மையமான 'கானூன் இளைஞர் சிந்தனை மையம்' (Kanoon Youth Thought Center), இஷ்ராக் நிறுவனம் (Ishrāq Institute) மற்றும் உச்ச தலைவரின் பிரதிநிதித்துவ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செய்யித் குத்பு குறித்த மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தது. இதில் பல முன்னணி மத அறிஞர்களும் கல்வியாளர்களும் பேச்சாளர்களாகப் பங்கேற்றனர். மேலும் பொதுமக்கள் திரளாக இதில் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்த சுருக்கமான செய்திகள் ஈரானின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனங்களால் வெளியிடப்பட்டன.



இன்றைய ஈரானில் செய்யித் குத்பின் எஞ்சியிருக்கும் செல்வாக்கிற்கு இந்த மாநாடு ஒரு தெளிவான உதாரணமாகும். குத்பின் படைப்புகள் முதன்முதலில் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதைய ஈரானியச் சூழலில் அவரும் அவரது எழுத்துகளும் எவ்வாறு பார்க்கப்படுகின்றன என்பது குறித்த முக்கியமான புரிதலை இந்த மாநாடு வழங்குகிறது. இந்த மாநாடு நடைபெற்ற காலகட்டத்தைக் கவனிப்பது மிகவும் அவசியம்; 2015-இல் மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும், (அமெரிக்க சதியால்) தீவிரவாதம் மற்றும் வன்முறைச் சம்பவங்களால் பெரும் அதிர்வுக்குள்ளாகி இருந்தன. இக்காலகட்டத்தில், இஸ்லாமியத் தீவிரவாதத்தின் கோட்பாட்டாளராகவும், இஸ்லாமியப் பயங்கரவாதத்தின் கருத்தியல் வாதியாகவும் குத்பு அடிக்கடி அடையாளப் படுத்தப்பட்டார்.

**60 ஆண்டுகள் கழித்தும் இந்த இமாம்கள் தணியவில்லை..!**

இந்த மாநாட்டின்போது, ஒரு சில பேச்சாளர்கள் 1960-கள் மற்றும் 70-களில் அவரது மொழிபெயர்ப்பாளர்கள் தங்களின் முன்னுரைகளில் குறிப்பிட்டது போலவே, செய்யித் குத்பை நவீன முஸ்லிம் உலகின் ஒரு சிறந்த சிந்தனையாளராகப் புகழ்ந்து பேசினர். இருப்பினும், பெரும்பான்மையான பேச்சாளர்கள் குத்பைப் பற்றி விமர்சன ரீதியான மற்றும் சில நேரங்களில் எதிர்மறையான கருத்துகளையே முன்வைத்தனர்.



பிந்தைய குழுவைச் சேர்ந்த சில பேச்சாளர்கள், செய்யித் குத்பு குறித்து ஆயத்துல்லாஹ் முர்ததா முதஹரி முன்வைத்த விமர்சனங்களையே மீண்டும் வலியுறுத்தினர். அதாவது, குத்பு அக்காலத்தின் முக்கியப் பிரச்சினைகளுக்கு அவசரமான தீர்வுகளை முன்மொழிந்த ஒரு மேலோட்டமான சிந்தனையாளர் என்று அவர்கள் குற்றம் சாட்டினர். மேலும், அவரது அறிவுசார் மற்றும் இறையியல் நோக்குநிலையானது சுன்னி அஷ்அரி (Ash'arī) இறையியல் பள்ளி மற்றும் அதன் பகுத்தறிவுக்கு எதிரான (anti-rationalist) போதனைகளால் பாதிக்கப்பட்டிருந்ததால், அவரால் புதிய மற்றும் குறிப்பிடத்தக்க யோசனைகளை வழங்க முடியவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

உதாரணமாக, சமயத் தத்துவஞானியும், கலாச்சாரம் மற்றும் சிந்தனைக்கான இஸ்லாமிய ஆராய்ச்சி மையத்தின் தலைவருமான ஆயத்துல்லாஹ் அலி அக்பர் ரஷாத் (Ayatollah 'Alī Akbar Rashād), அஷ்அரி பள்ளியின் இறையியல் செல்வாக்கு மற்றும் அதன் பகுத்தறிவுக்கு எதிரான வழிமுறையின் கீழ் உருவான சுன்னி அரசியல் சிந்தனையை விமர்சித்தார். இத்தகைய சிந்தனை முறையே சுயாதீனமான ஆய்வுத் திறனுக்கு (இஜ்திஹாத் - ijtihād) தடையாக இருந்ததாகவும், அதன் விளைவாக சுன்னி உலகம் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுன்னி உலகில் இறையியலில் ஆர்வம் அதிகரித்து வந்தாலும்கூட, அஷ்அரி பள்ளியின் நீடித்த தாக்கம் இன்றும் ஆதிக்கம் செலுத்துவதாகவும், அதுவே குத்பு போன்ற புரட்சிகர சுன்னி சிந்தனையாளர்கள் மதச் சார்பின்மை (secularism) போன்ற பிரச்சினைகளுக்குப் புதிய யோசனைகளையும் பொருத்தமான தீர்வுகளையும் கண்டடைவதைத் தடுத்தது என்றும் அவர் வாதிட்டார்.

அதேபோல், கலாச்சாரப் புரட்சிக்கான உச்ச கவுன்சில் உறுப்பினரும், கும் (Qum) நகரின் தத்துவம் மற்றும் இஸ்லாமிய மானிடவியல் பேராசிரியருமான ஹுஜ்ஜத்துல்

இஸ்லாம் டாக்டர் ஹமீத் பார்ஸானியா (Dr. Ḥamīd Pārsāniyā), குத்பை சமூக நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்த ஒரு செயல்வீரர் (praxis-oriented thinker) என்று புகழ்ந்தாலும், அவரை அஷ்அரி பள்ளியைப் பின்பற்றுபவர் என்று விமர்சித்தார்.

### 9/11 தாக்குதலுக்கு குதுூப் காரணமா?

ஆயத்துல்லாஹ் முதஹரி முன்னரே முன்வைத்த விமர்சனங்களுக்கு இணையாக, இந்த மாநாட்டின் சில பேச்சாளர்கள் செய்யித் குத்புக்கும், சுன்னி இஸ்லாத்தில் உள்ள இன்றைய தீவிரவாத மற்றும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே கருத்தியல் மற்றும் அறிவுசார் தொடர்புகளை உருவாக்க முயன்றனர்.

உதாரணமாக, தெஹ்ரான் பல்கலைக் கழகத்தின் உலக ஆய்வுகள் துறையின் இணைப் பேராசிரியரான டாக்டர் அலி அக்பர் அலிகானி (Dr. ʻAlī Akbar ʻAlīkhānī) வாதிடுகையில், நாகரிகம் என்ற கருத்தாக்கம் குறித்து (அதாவது, இஸ்லாமிய நாகரிகம் மற்றும் மேற்கத்திய உலகளாவிய நாகரிகம் ஆகியவற்றிற்கு இடையே) குத்பு கையாண்ட எளிமையான 'இருமை அணுகுமுறை' (binary approach), மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான வன்முறைப் பகையை உருவாக்கியுள்ளது என்று கூறினார்.

இதுவே 2001 செப்டம்பர் 11 அன்று அல்-கொய்தா நடத்திய பயங்கரவாதத் தாக்குதல்கள் போன்ற கொடூரங்களுக்குக் காரணமாக அமைந்ததோடு, ஐஎஸ்ஐஎஸ் (ISIS) அமைப்பு உருவாவதற்கான அடிப்படையையும் அமைத்துக் கொடுத்தது என்று அவர் வாதிட்டார்.

மேலும், நீதி (Justice) குறித்த குத்பின் புரிதல் மிகவும் எளிமையானது என்றும் அலிகானி குறிப்பிட்டார். பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் காலம் முதல் நீதி என்ற கருத்தாக்கத்துடன் போராடி வரும், இஸ்லாத்தால் உள்வாங்கப்பட்ட இரண்டாயிரம் ஆண்டு கால தத்துவ மரபின் சிந்தனைகளை குத்பு புறக்கணித்துவிட்டதே இதற்கு காரணம் என்று அவர் வாதிட்டார்.

### சுன்னி உலகில் ஏன் இஸ்லாமிய புரட்சி சாத்தியமாகவில்லை?

இமாம் கொமெய்னி நிறுவனத்தின் ஆசிரியக் குழு உறுப்பினரான ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் அஹ்மத் ரஹ்தார் (Ḥujjat al-Islam Aḥmad Rahdar), இந்த மாநாட்டின் மற்றொரு பேச்சாளராகப் பங்கேற்றார். அவர் ஒரு கேள்வியை எழுப்பினார்: இஸ்லாமிய அரசியல் சிந்தனை குறித்து சுன்னி உலகம் ஏராளமான படைப்புகளை உருவாக்கியிருந்த போதிலும், ஈரானில் நிகழ்ந்தது போன்ற ஒரு 'இஸ்லாமியப் புரட்சியை' அந்தச் சிந்தனைகளின் மூலம் உருவாக்க சுன்னி அறிஞர்கள் ஏன் தவறிவிட்டனர்?

இந்தக் கேள்விக்குப் பதிலாக, இஸ்லாமிய அரசியல் சிந்தனை மற்றும் மதத் தலைமை குறித்த சுன்னி மற்றும் ஷியா இஸ்லாத்தின் மாறுபட்ட பார்வைகளை ரஹ்தார் சுருக்கமாக ஒப்பிட்டு விளக்கினார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,



அஹ்மத் காதமி

“சுன்னி இஸ்லாம் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ச்சியான மதத் தலைமை இல்லாமல் இருந்து வருகிறது. ஆனால் ஷியா இஸ்லாமோ, 'இஜ்திஹாத்' (ijtihād) செய்வதற்கான வழிகாட்டு தலையும், பின்பற்றுவதற்கான ஒரு முன்மாதிரியையும் (Source of imitation) எப்போதும் கொண்டிருந்தது” என்றார்.

செய்யித் குத்பு உள்ளிட்டோர் கோட்பாட்டு ரீதியாக முன்வைத்த சுன்னி உலகின் புரட்சிகர மாற்றத்திற்கான அழைப்பு, காலப்போக்கில் பலனற்றுப் போனது மட்டுமல்லாமல், அது வன்முறை உரையாடலாக உருவெடுத்து தலிபான், அல்-கொய்தா மற்றும் ஐஎஸ்ஐஎஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகளின் கருத்தியல் அடிப்படையாக மாறியது என்று அவர் வாதிட்டார். (அடிக்குறிப்பு ஒன்றை பார்க்கவும்.)

*1890-ஆம் ஆண்டின் ஈரானிய புகையிலை எதிர்ப்புப் போராட்டம் அல்லது 1906-1908-ஆம் ஆண்டின் ஈரானிய அரசியலமைப்புப் புரட்சி போன்ற ஷியா இஸ்லாத்தின் வரலாற்றில் காணப்பட்ட 'எதிர்ப்பும், போராடும் அனுபவம்' மற்றும் 'நிலையான இமாம்களின் தலைமை' ஆகியவை சுன்னி உலகில் இல்லாததே இதற்குக் காரணம் என்று ரஹ்தார் குறிப்பிட்டார்.*

**ஈரானில் மிகைப்படுத்தப்பட்டாரா, செய்யது குதுப்?**

ஈரானிய சமகால வரலாற்று ஆய்வுகள் நிறுவனத்தின் (IICHS) தலைவரான மூஸா நஜஃபி (Mūsā Najafī), இந்த மாநாட்டில் பேசுகையில், ஈரானின் இஸ்லாமிய விழிப்புணர்வில் செய்யித் குத்பின் பங்கு குறித்து ஹாதி கோஸ்ரோஷாஹி போன்ற ஈரானிய இஸ்லாமியவாதிகளால் அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளதாக வாதிட்டார்.



மூஸா நஜஃபி

குத்பின் கருத்தியலானது பாரம்பரிய மற்றும் நாகரிக ஆழம் இல்லாத ஒரு 'பிற்போக்குத்தனமான மதச் சீர்திருத்த இயக்கத்தின்' விளைபொருள் என்பதால், முஸ்லிம்களின் பின்தங்கிய நிலை மற்றும் வீழ்ச்சிக்கான காரணங்கள் போன்ற முக்கியக் கேள்விகளுக்கு விரிவான மற்றும் நன்கு சிந்தித்து உருவாக்கப்பட்ட தீர்வுகளை வழங்க அது தவறிவிட்டது என்று அவர் உறுதிபடக் கூறினார். நஜஃபியின் கூற்றுப்படி, குத்பு அவசரமான,

மேலோட்டமான மற்றும் தீவிரமான தீர்வுகளை முன்வைத்தார்; அவை எளிதில் தீவிரவாதமாக மாறக்கூடியவை என்பதோடு ஐஎஸ்ஐஎஸ், அல்-கொய்தா மற்றும் தலிபான் போன்ற பயங்கரவாதக் குழுக்களுக்கு அடிப்படையையும் அமைத்துக் கொடுத்தன. (அடிக்குறிப்பு ஒன்றை பார்க்கவும்.)

புரட்சிக்கு முந்தைய ஈரானை விளக்குவதற்காக, சமூகங்களை 'ஜாஹிலிய்யா' (அறியாமைக் காலம்) மற்றும் 'தவ்ஹீதி' (ஏகத்துவம்) என இரண்டாகப் பிரிக்கும் குத்பின் ஜாஹிலிய்யா கோட்பாட்டை (jāhiliyya theory) கடன் வாங்கிய ஈரானிய இஸ்லாமியவாதிகளையும் நஜஃபி விமர்சித்தார். வரலாறு முழுவதும் தனது உலமாக்களின் (மத அறிஞர்கள்) தொடர்ச்சியான வழிகாட்டுதலைப் பெற்றுள்ள ஈரானிய சமூகத்திற்கு இந்த 'இருமை கோட்பாடு' (binary theory) எப்போதும் ஒத்துப்போகாத ஒன்று என்று அவர் வாதிட்டார்.

மேலும், பஹ்லவி ஆட்சியை 'ஜாஹிலி' என்று கருதினாலும், ஒட்டுமொத்த ஈரானிய சமூகத்தையும் அவ்வாறு கருத முடியாது என்ற அடிப்படையில் அவர் இக்கோட்பாட்டை எதிர்த்தார்; ஏனெனில் இத்தகைய கருத்து சக முஸ்லிம்களை 'காஃபிர்' (மதவிலக்கம் செய்யப்பட்டவர் - apostatizing) என முத்திரை குத்துவதற்கு எளிதில் வழிவகுத்துவிடும் என அவர் குறிப்பிட்டார்.

மேற்கூறிய புள்ளிகளுடன் கூடுதலாக, அலி ஷரீஅதி போன்ற குத்பின் இமாம்கள் எதிர்ப்பு மற்றும் பாரம்பரிய எதிர்ப்பு விமர்சனங்களால் ஈர்க்கப்பட்ட சில ஈரானியர்கள், சஃபாவித் வம்ச (Safavid dynasty) காலத்து ஈரானின் அரசியல் அதிகாரத்திற்கும் மதகுருமார்களுக்கும் இடையிலான உறவை விமர்சித்ததாக நஜஃபி வருத்தம் தெரிவித்தார்.

நஜஃபியைப் பொறுத்தவரை, சஃபாவித் வரலாறு என்பது ஷியா வரலாற்றின் மிகவும் புகழ்பெற்ற காலங்களில் ஒன்றாகும்; இது இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்ததுடன், இதில் ஒரு புதிய வகை மத வாழ்க்கை (பன்னிருவர் அல்லது இமாமி ஷியா பிரிவு) ஊக்குவிக்கப்பட்டது.

சஃபாவித் காலம் அரசியல் ஒழுங்கு மற்றும்

நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில் ஈரானிய வரலாற்றின் ஒரு சிறந்த காலகட்டமாக இருந்தது மட்டுமல்லாமல், அது கலாச்சார வரலாற்றின் ஒரு அற்புதமான கட்டமாகவும் இருந்தது. அக்காலத்தில் ஈரானுக்கு விஜயம் செய்த ஐரோப்பியப் பயணிகளின் பயணக் குறிப்புகளில் பிரதிபலிப்பது போல, கட்டிடக் கலை, தத்துவம் மற்றும் கலை ஆகியவை அக்காலத்தில் செழித்தோங்கின.

ஆயத்துல்லாஹ் கொமெய்னி மற்றும் ஆயத்துல்லாஹ் முதஹரி போன்ற மத அறிஞர்களின் தலைமையின் கீழ் ஈரானில் உள்ள இஸ்லாமியவாதிகளுக்கும், ஷியா புரட்சி கர பாரம்பரியத்தின் பிற முன்மாதிரிகளுக்கும், குத்பு மற்றும் அவரைப் போன்றவர்களால் சுன்னி உலகில் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் தேவையில்லை என்றும் நஜஃபி உறுதிபடக் கூறினார். நஜஃபியைப் பொறுத்தவரை, புரட்சிகரக் கருத்துக்கள் எப்போதும் ஷியா இஸ்லாத்தின் கலாச்சாரம், அடையாளங்கள் மற்றும் மரபுகளில் பொதிந்துள்ளன. இது தொடர்பாக, புரட்சியின் நெருப்பை மூட்டு வதற்கு நபிகள் நாயகத்தின் பேரரான இமாம் ஹுசைனின் புரட்சிகர பாரம்பரியத்தை மட்டும் நினைவு கூர்வதே போதுமானது என்று அவர் குறிப்பிட்டார்.

### இமாம் அல்லாத, புரட்சியாளர்களின் பார்வையில் குதுப்

முந்தைய பேச்சாளர்கள் இமாம்களாக இருந்ததற்கு மாறாக, ஈரானின் கலாச்சாரப் புரட்சிக்கான உச்ச கவுன்சில் உறுப்பினரும், இமாம் அல்லாத இஸ்லாமியக் கோட் பாட்டாளருமான ஹசன் ரஹீம்பூர் அஸ்காதி (Ḥasan Rahimpūr Azghadī) ஒரு மாற்றுக் கருத்தை முன்வைத்தார். முஸ்லிம் உலகில் புரட்சிகர இஸ்லாமியவாதத்தின் மிக முக்கிய மான சில கோட்பாட்டாளர்களில் செய்யித் குத்பும் ஒருவர் என்றும், முஸ்லிம் உலகம் மேற்கத்தியக் கருத்தியல்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஒரு காலத்தில் அவரது கருத்துக்கள் மிகவும் புதியவையாக இருந்தன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அஸ்காதியைப் பொறுத்தவரை, புரட்சிக்கு முந்தைய ஈரானின் புரட்சிகர இயக்கத்தில் குத்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.



ஹசன் ரஹீம்பூர் அஸ்காதி

மேலும் அவரது கருத்துக்கள் நவாப் சஃபாவி, அலி ஷரீஅதி மற்றும் ஆயத்துல்லாஹ் கொமெய்னி ஆகியோரின் கருத்துக்களுடன் குறிப்பிடத்தக்க அளவில் ஒத்திருந்தன.

குத்பை ஐஎஸ்ஐஎஸ் (ISIS) மற்றும் அல்-கொய்தா போன்ற சுன்னி பயங்கரவாத அமைப்புகளின் கருத்தியல்வாதியாக அடையாளப்படுத்தியவர்களுடன் அஸ்காதி உடன்படவில்லை. அவரைப் பொறுத்தவரை, இத்தகைய குற்றச்சாட்டுகள் தவறான முறையியல் அனுமானங்களை அடிப்படை யாகக் கொண்டவை. அவை குத்பின் கருத்துக் களைச் சூழலில் இருந்து பிரித்துப் பார்க்கின்றன மற்றும் அக்காலத்தின் குறிப்பிட்ட சமூக-அரசியல் நிலைமைகளைப் புறக்கணிக்கின்றன.

தனது வாதத்தை விளக்க, அஸ்காதி அலி ஷரீஅதி மற்றும் அல்-புர்கான் (al-Furqān - ஈரானிய அரசியலில் இமாம்களின் ஈடுபாட்டை எதிர்த்த ஒரு புரட்சிகர குழு) ஆகியோரின் கருத்துக்களை ஒப்பிட்டுக் காட்டினார். குத்பு மற்றும் ஷரீஅதி ஆகியோருக்கு இடையிலான முக்கியமான உடன்பாடுகளை, அவர்கள் பயன்படுத்திய முழக்கங்களின் மூலம் அவர் சுட்டிக்காட்டினார்:

"இஸ்லாத்தின் ஆன்மாவிற்குத் திரும்புதல்," "சுயத்திற்குத் திரும்புதல்" மற்றும் "இஸ்லாத் தின் பொற்காலத்திற்குத் திரும்புதல்." சுன்னி குழுக்களிலேயே செய்யித் குத்பும் 'இஹ்வானுல் முஸ்லிமின்'' (Muslim Brother hood) அமைப்பும்தான் இஸ்லாமியப் புரட்சிக்கு மிகவும் நெருக்கமான பிரிவினர் என்று அவர் வாதிட்டார். மேலும், எகிப்து நாடு நபிகளாரின் குடும்பத்தின் (அஹ்லுல் பைத்)

மீதான அன்பால் நிரம்பியது என்றும், அது ஒருபோதும் சவுதிகளால் பரப்பப்பட்ட 'வஹாபிசத்தின்' தாயகமாக இருந்ததில்லை என்றும் அவர் உறுதிபடக் கூறினார். சவுதி அரேபியா குத்பை வெறுத்ததோடு அவரது புத்தகங்களை வெளியிடுவதற்கும் தடை விதித்திருந்தது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

### டாக்டர் யஃகூப் தவக்குலி

இதேபோல், ஈரானிய கல்வி அமைச்சகத்தின் வரலாற்று ஆய்வுக் குழுவின் தலைவரான டாக்டர் யஃகூப் தவக்குலி (Dr. Ya'qūb Tavakkulī), குத்புக்கும் ஐஎஸ்ஐஎஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கும் இடையே தொடர்பு கற்பிப்பதை நிராகரித்தார். சுன்னிகள், ஷியாக்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவரையும் ஒன்றாக எதிர்த்துப் போரிடும் இந்த பயங்கரவாதக் குழுக்கள், குத்பின் கருத்தியலைப் பின்பற்றவில்லை; மாறாக அவை சவுதி ஆதரவு பெற்ற 'வஹாபி இஸ்லாத்தின்' கருத்தியலையே பின்பற்றுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

### குதுப் - எப்போதும் உம்மத்தின் ஒற்றுமையையே பேசினார்

குத்பின் படைப்புகளை மொழிபெயர்த்தவர்களில் முக்கியமானவரான ஆயத்துல்லாஹ் ஹாதி கோஸ்ரோஷாஹி, 2015-ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த மாநாட்டிலும் ஒரு பேச்சாளராகக் கலந்துகொண்டார். தனது உரையில், முன்னரே தனது மொழிபெயர்ப்பு நூல்களின் முன்னுரைகளில் குறிப்பிட்டிருந்தது போலவே, ஈரானின் இஸ்லாமிய விழிப்புணர்வு மற்றும் புரட்சிகரக் கருத்தியலில் குத்பு ஒரு முக்கியப் பங்காற்றியதை கோஸ்ரோஷாஹி மீண்டும் வலியுறுத்தினார்.



மேலும், மூன்றாவது கலீபா உஸ்மான் (Caliph 'Uthmān) குறித்த இஸ்லாமிய வரலாற்றின் பொதுவான சுன்னி விளக்கங்களிலிருந்து குத்பு மாறுபட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்; உஸ்மானின் ஆட்சியை ஊழல் நிறைந்ததாகவும் தோல்வியடைந்த ஒன்றாகவும் குத்பு கருதினார் என்பதை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். மிலானி மற்றும் அர்தகானி போன்ற பல்வேறு ஷியா மதகுருமார்கள் குற்றம் சாட்டியது போல, குத்பு தனது குர்ஆன் விளக்கவுரையில் நபிகளாரின் குடும்பத்திற்கு (அஹ்லுல் பைத்) எதிராகப் பேசினார் என்ற கருத்தையும் கோஸ்ரோஷாஹி நிராகரித்தார்.

குத்பு ஒருபோதும் அஹ்லுல் பைத்திற்கு எதிராகப் பேசியதில்லை என்றும், அவர் எப்போதும் இஸ்லாமிய ஒற்றுமை எனும் கருத்தையே ஆதரித்தார் என்றும் அவர் வாதிட்டார். அஹ்லுல் பைத் குறித்த குத்பின் உண்மையான பார்வைகளை நிரூபிப்பதற்காக, குத்பின் குர்ஆன் விளக்கவுரையிலிருந்து (Fī Ẓilāl al-Qur'ān) சில உதாரணங்களையும் அவர் எடுத்துக் காட்டினார்.

ஒட்டுமொத்தமாக, 2015-ஆம் ஆண்டு செய்யித் குத்பு குறித்து தெஹ்ரானில் நடைபெற்ற மாநாடு, அவரது மரபு குறித்த மூன்று வெவ்வேறு அணுகுமுறைகளைப் பிரதிபலித்தது:

### ஈரானியப் புரட்சி இயக்கங்களில் குத்பின் தாக்கத்தை அங்கீகரித்தல்:

அவரது எழுத்துக்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுதல்.

### பாரம்பரிய இமாம்களின் விமர்சனங்கள்:


குத்பின் சுன்னி பின்னணியைச் சுட்டிக் காட்டி, அவரை அறிவுசார் மேலோட்டத் தன்மை மற்றும் இறையியல் தேக்கத்துடன் தொடர்புடையவராக அடையாளப் படுத்துதல்.


### செல்வாக்கை நிராகரித்தல் அல்லது குறைத்து மதிப்பிடுதல்:

புரட்சிக்கு முந்தைய ஈரானில் குத்பின் தாக்கத்தை முற்றிலுமாக நிராகரித்தல் அல்லது

குறைத்து மதிப்பிடுதல். அத்துடன் அவரைத் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தின் கோட்பாட்டாளர் எனக்கண்டனம் செய்தல்.

குறிப்பிடத்தக்க வகையில், ஹாதி கோஸ்ரோஷாஹியைத் தவிர, செய்யித் குத்பைப் புகழ்ந்து பேசியவர்களும், ஈரானிய இஸ்லாமியப் புரட்சியில் அவரது தாக்கத்தை அங்கீகரித்தவர்களும் பெரும்பாலும் இமாம் அல்லாத அறிஞர்களே (non-clerical intellectuals). அஸ்காதி போன்றவர்களில் சிலர் அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் கும் (Qum) அல்லது மஷ்ஹத் (Mashhad) ஆகிய நகரங்களின் மதக் கல்வி நிறுவனங்களான 'ஹவ்சா' (Hawza) அல்லது அதன் அறிவுசார் வட்டங்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் அல்ல.






**புரட்சிக்கு பிந்தைய ஈரானின் செய்யது குதுப்**

புரட்சிக்குப் பிறகு ஈரானில் செல்வாக்கு குறைந்த அலி ஷரீஅதியைப் போலவே, செய்யித் குத்பும் இப்போது ஒரு கலவையான மரபையே (mixed legacy) பிரதிபலிக்கிறார். ஒருபுறம், உலக இஸ்லாமியக் கருத்தியலில் ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியவர் என அவர் வரலாற்று ரீதியாக அங்கீகரிக்கப்படுகிறார். ஆனால், மறுபுறம், 'உலமா'க்களின் (மத அறிஞர்கள்) அரசியல் நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாலும், அவர்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு வகையான இமாம் அல்லாத இஸ்லாமிய புரட்சியை தூண்டுவதாலும், அவர் நம்பிக்கையற்றவராகவும் அச்சத்திற்குரியவராகவும் பார்க்கப்படுகிறார்.

**இறுதியாக**

இந்த ஆய்வில் விவரிக்கப்பட்டுள்ளபடி, இஸ்லாமிய ஒற்றுமை குறித்த முழக்கங்கள், 'மறுசீரமைப்பு இயக்கம்' (Rapprochement movement), மற்றும் 'இஃவானுல் முஸ்லிமின்' (Muslim Brotherhood) - 'ஃபிதாயீன்-இ இஸ்லாம்' (Fidā'iyān-i Islām) ஆகியவற்றுக்கு இடையேயான தனிப்பட்ட மற்றும் கருத்தியல் ரீதியான தொடர்புகள் ஆகியவை, செய்யித் குத்பின் படைப்புகள் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்படுவதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்ததோடு, ஈரானில் அவருக்கு ஒரு உற்சாகமான வரவேற்பைப் பெற்றுத் தந்தன.

இந்த மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள் ஈரானிய புரட்சிக் குழுக்களைத் திரட்டுவதற்கான ஒரு முக்கியமான கருத்தியல் கருவியாகச் செயல்பட்டன.

மேலும், இமாம்களின் 'அமைதிவாத' (quietist) நிலைப்பாட்டை விமர்சிக்கவும், பஹ்லவி ஆட்சியின் மதச்சார்பற்ற கொள்கைகளை எதிர்க்கவும் தேவையான ஒரு முக்கியமான கருத்தியல் கட்டமைப்பை இவை வழங்கின. அந்த வகையில், குத்பின் படைப்புகளின் "மொழிபெயர்ப்பு இயக்கம்" என்பது ஒரு இலக்கியப் பயிற்சியை விட மேலாக, ஒரு அரசியல் மற்றும் கருத்தியல் செயல்பாடாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். இந்த இயக்கம் குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே இஸ்லாமிய புரட்சிகர செயல்பாடுகளைத் தூண்டுவதற்குப் பெரிதும் உதவியது.

குத்பின் மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளபடி, 1950-கள் மற்றும் 1960-களின் புரட்சிக்கு முந்தைய ஈரானில், இஸ்லாத்தை ஒரு முழுமையான கருத்தியலாகவும் (Total ideology), மனிதகுலத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகவும், மதச்சார்பற்ற அரசியல் கருத்தியல்களுக்கு மாற்றாகவும் முன்வைக்கக்கூடிய ஒரு நவீன உரையாடல் தட்டுப்பாடாக இருந்தது. இந்த வெற்றிடமே ஈரானிய புரட்சிகர செயல்பாட்டாளர்கள்

குத்பின் புத்தகங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கத் தூண்டிய முக்கியக் காரணியாகும்.

இந்த மொழிபெயர்ப்பு நூல்கள் புரட்சிக்கு முன்னரும் பின்னரும் பலமுறை மறுபதிப்பு செய்யப்பட்டு பரவலாக விநியோகிக்கப் பட்டன. இந்த மொழிபெயர்ப்பு இயக்கம் பஹ்லவி ஆட்சியிடமிருந்து எதிர்மறையான எதிர்வினையையும் தூண்டியது; அந்த அரசு கடுமையான கண்காணிப்பு மற்றும் தணிக்கைக் கொள்கைகளைப் பயன்படுத்தி இந்த மொழிபெயர்ப்பு நூல்களின் பரவலையும் தாக்கத்தையும் கட்டுப்படுத்தப் பல நடவடிக்கைகளை எடுத்தது.



afavi, leader of Fedayeen Islam Organization.

கூடுதலாக, ஆட்சிக்கு ஆதரவான சில மதகுருமார்கள் குத்பை மதவிலக்கம் (Anathematized) செய்ததோடு, ஷியா இஸ்லாத்தையும் நபிகளாரின் குடும்பத்தையும் குத்பு தாக்குவதாகக் கூறி அவரது படைப்புகளை இகழ்ந்தனர். இஸ்லாமியப் புரட்சியின் இமாம்களின் தலைவர்களில் ஒருவரான ஆயத்துல்லாஹ் முர்ததா முதஹரி, ஈரானிய இமாம் அல்லாத அறிஞர்கள் குத்பின் எழுத்துக்களைச் சார்ந்து இருப்பதை விமர்சித்தார். குத்பு மேற்கத்திய அனுபவவாதத் தத்துவம் மற்றும் சுன்னி இறையியலின் பள்ளியால் அளவுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக முதஹரி கருதினார்.

இத்தகைய கலவையான எதிர்வினைகள் இருந்தபோதிலும், ஈரானில் செய்யித் குத்பு தொடர்ந்து வாசிக்கப்படுகிறார், மேலும் அவரது படைப்புகளின் புதிய பதிப்புகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. 2015-ஆம் ஆண்டு குத்பு குறித்து நடைபெற்ற மாநாடு, ஈரானில் குத்பின் செல்வாக்கு இன்னும் நிலைத்திருப்பதற்கும், அவரது கருத்துக்கள் இப்போதும் விவாதத்திற்குரியவையாகக் கருதப்படுவதற்கும் ஒரு சிறந்த சான்றாகும்.

மேலும், இன்றைய ஈரானில் குத்பு குறித்த பார்வை, ஈரானின் தற்போதைய அரசியல் மாற்றங்கள் மற்றும் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகின் விரிவான அரசியல் சூழலுக்கு ஏற்ப எவ்வாறு மறுவடிவம் பெற்றுள்ளது என்பதையும் இந்த மாநாடு நிரூபிக்கிறது.

**அடிக்குறிப்பு-01**

**குதுப் குறித்த இந்த மாநாட்டில், ஷியா அடிப்படைவாதம் பேசும் இமாம்களும், கலந்துகொண்டனர். மிக நீண்டகால சொகுசு வாழ்க்கையில் திளைத்த இந்த இமாம்கள், புரட்சிக்கு பிந்தைய ஈரானின் தனது செல்வாக்கையும், பஹ்லவி ஆட்சியில் தங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் (Privileges) பறிக்கப்பட்டதாக கருதினர். இதன் காரணமாகவே, இவர்கள் குதுப் குறித்த இத்தகைய விமர்சனங்களை முன் வைக்கின்றனர்.**

**மேலும் தாலிபான்களை, ஐ.எஸ்.ஐ.எஸ்., அல்கொய்தா அமைப்புகளோடு ஒப்பிடுவதும் இதன் பிரதிபலிப்பே. மற்றபடி ஈரான் இஸ்லாமிய குடியரசிற்கு தாலிபான்கள் குறித்த பார்வை வேறு. இதுகுறித்து நேரம் கிடைக்கும்போது தனிக்கட்டுரையாக தருகிறோம்.**

**இன்ஷா அல்லாஹ்!**

Indiana University Press 2016-இல் வெளியிட்ட, Journal of Islamic and Muslim Studies, Vol. 1, No. 2 (November 2016), pp. 35-60லிருந்து.

இந்த கட்டுரையை ஆய்வு செய்து, RESEARCHGATE.NET என்ற தளத்தில் ஒரு PEER REVIEW PEPER - ä, Yusuf Unal என்பவர் வெளியிட்டுள்ளார். அதன் தமிழாக்கமே இந்த தொடர்.

**- Advocate. JASMINE FATHIMA**
B.Sc, B.Ed, LLM.,



# செய்யது குதுப் சிந்தனைகள் வரப்போகும் பேரொளிக்கான விதை

**ஷஹீது செய்யது குதுப், மைல்கற்கள், திருக்குர்ஆனின் நிழலில், போன்ற பெயர்களையும், தலைப்புகளையும் இன்று தமிழகத்தில் பரவலாக காணமுடிகின்றது. புரட்சியின் விதைகளாக பார்க்கப்பட்ட குதூபின் இத்தகைய புதினங்கள், இன்று இலக்கிய நடைக்கான அழகியலாகவும், மொழிபெயர்ப்பு புலைமையை நிரூபிக்க பயன்படுத்தப்படுவதையும் பரவலாக காண முடிகின்றது.**

*சுமார் 25லிருந்து 30 ஆண்டுகளுக்கு முன், குதுபின் நூல்களை, கருத்துகளை பேசுபவர்கள், எழுதுபவர்கள் சந்தித்த சோதனைகள் வார்த்தைகளில் விவரிக்க முடியாதவை. வேலையிழப்புகள், குடும்ப வறுமை, சமூக புறக்கணிப்பு, கிண்டல், கேலிகள் என அப்போது அவர்கள் சந்தித்த சோதனைகளை எல்லாம் கேட்டறிந்தபோது, இத்தகைய தியாகங்களால் மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்ட குதுபின் சிந்தனைகள், இன்றைய சோஷியல் மீடியா சமூகத்தில், சொகுசாக வாசிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்கள் நிறைந்த பேப்பர் பண்டல்களாகவும் இளைய தலைமுறைகளின் கைகளில் வலம் வந்து கொண்டிருக்கின்றன.*

*இத்தைகைய சூழலில், குதுபின் சிந்தனைகள், கருத்துக்கள் இவைகளெல்லாம், "அதிகாரம் அல்லாஹ் ஒருவனுக்கே" என்ற உயர்ந்த லட்சியத்தை அடிப்படையாக கொண்டவை என்றும், இன்றைய நவீன உலகில் மனித சமுதாயத்தின் மேல் போடப்பட்டிருக்கும், விளங்குகள் அனைத்தையும் உடைத்தெரியக் கூடிய தகுதி படைத்த கொள்கை தீனுல் இஸ்லாம் மட்டுமே என்பதை பறைசாற்றும் விதமாக ஒரு கட்டுரையை கொடுக்க எண்ணினோம்.*



الرسالة
مجلة أسبوعية للآداب والعلوم والفنون
ARRISSALAH
Revue Hebdomadaire Littéraire Scientifique et Artistique
Le Caire 24 - 9 - 1951
إذا جاء نصر الله والفتح ..

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால், மேலே நாம் சொன்ன கருத்துகளை தாங்கிய, குதுப், அல்காஷானி அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதம் நம் கண்ணில் பட்டது. அரபு மொழியில் இருக்கும் இக்கடிதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை, ICIT DIGITAL LIBRARY என்ற தளம் வெளியிட்டிருந்தது. அதை அப்படியே தமிழில் தருகின்றோம்.!

## அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் எப்போது வரும்?

சுற்றிலும் இருளும் மந்த நிலையும் சூழ்ந்திருந்தபோதிலும், இன்றைய நாட்களில் இஸ்லாமியப் புகலிடத்தை நோக்கிய மீளுரு வாக்கம் குறித்த நம்பிக்கைக்குரிய அறிகுறிகள் இஸ்லாமிய உலகின் அனைத்துப் பகுதி களிலும் தென்படுகின்றன. தங்களின் ஆன்மா, வரலாறு மற்றும் இலக்குகளுக்கு அந்நியமான கொடிகளின் பின்னால் மூச்சிரைக்க ஓடித் தளர்ந்துபோன, தோற்கடிக்கப்பட்ட, சிதறிப் போன ஒரு மக்களின் எஞ்சியவர்கள் இப்போது திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.

எப்போது அவர்கள் இந்தத் தூய புகலிடத்தை விட்டுப் பிரிந்தார்களோ, அப்போதே அதன் புனிதங்கள் மீறப்பட்டன; எப்போது அதன் கொடியைக் கைவிட்டார்களோ, அப்போதே அதன் கம்பீரம் குன்றியது. இப்போது அவர்கள் மெதுவாக அந்தப் புகலிடத்திற்கும், அந்தக் கொடியின் நிழலுக்கும் மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இஸ்லாத்தின் பெயரை எல்லா இடங்களிலும் முழங்கியபடி, அதனிடமிருந்து வலிமையையும், கண்ணியத்தையும், பாதுகாப்பையும் தேடி மீண்டும் இஸ்லாத் திற்குத் திரும்புகிறார்கள். இஸ்லாமிய உலகில் இவை நம்பிக்கையூட்டும் காலங்களாகும்.

இன்று, இஸ்லாமிய உலகம் ஒரு கூட்ட மைப்பாக இணைய வேண்டும் என்றும், இஸ்லாமே அந்தப் பேரமைப்பின் ஆளும் சக்தியாக இருக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுப்பவர்கள், வெறும் மதப் பிரச்சாரகர்களோ அல்லது இஃவானுல் முஸ்லிமின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அல்ல. இஸ்லாமியச் சிந்தனையால் வழிநடத்தப்படும் தனிநபர்கள் மட்டுமே இப்போது அத்தகையவர்கள் அல்ல. மாறாக, இஸ்லாமியத் தஃவாவை (அழைப்புப் பணி) தங்களின் தனித்துவமான பண்பாகவோ அல்லது அடிப்படை நோக்கமாகவோ கொண்டிராத கட்சிகளும் ஆளுமைகளும்கூட இன்று இதற்காகக் குரல் கொடுக்கிறார்கள். இது, இஸ்லாமிய சமூகம் வழிதவறித் தவித்த நிலைக்குப் பிறகு, இப்போது தன்னைத் தானே கண்டுகொண்டுவிட்டது என்பதற்கும், எந்தவொரு பாசாங்கும் வேஷமுமின்றித் தங்களின் ஆழமான உள்ளுணர்விலிருந்து எழும் ஒரே குரலை அவர்கள் எதிரொலிக்கிறார்கள் என்பதற்கும் ஒரு அறிகுறியாகும்.

இஸ்லாமிய உலகைத் துண்டு துண்டாகக் கிழித்து, அதன் மகத்தான 'இஸ்லாமிய அரசை' அதனிடமிருந்து பறித்து, அதற்கு 'தேசியம்' எனும் முத்திரையிட்டுச் சிறிய நாடுகளாக மாற்றியதன் மூலம் ஏகாதிபத்தியம் ஒரு மிகப்பெரிய சதித் திட்டத்தை அரங்கேற்றியது. இஸ்லாம் உருவாக்கிய அந்த ஒற்றுமையை அது சிதைத்தது; அந்த ஒற்றுமையில் தேசிய இனங்களும் இனக்குழுக்களும் கரைந்து போயிருந்தன, நிறங்களும் மொழிகளும் மறைந்து போயிருந்தன, மேலும் அனைவரும் அல்லாஹ்வின் முன்னால் சகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்ட இதயங்களோடு ஒரே குரலில் முழக்கமிட்டனர்.

ஏகாதிபத்தியம் இந்தச் சூழ்ச்சியைச் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டது, ஏனெனில் இஸ்லாமிய உலகம் ஒன்றுபட்டும் பிணைக் கப்பட்டும் இருந்தபோது, அந்தப் பெரிய கூட்டமைப்பை முழுவதுமாக விழுங்கும் சக்தி ஏகாதிபத்தியத்திற்கு இருக்கவில்லை.

ஆனால், 'தேசியம்' எனும் ஏமாற்றுப் பேரிகை முழங்கியபோது, அந்தப் பிணைப்பு உடைந்து சிதறியது; அது அனைவரும் எளிதாக விழுங்கக்கூடிய ஒரு சுவையான உணவாக மாறியது. அதன்பிறகு, ஒவ்வொரு சிறிய நாடும் தான் பாதுகாப்பாக நின்ற அந்தக் கொடியிலிருந்தும், தான் முன்னோக்கிய கிப்லாவிலிருந்தும் தனிமைப்படுத்தப்பட்டு, தத்தமது உள்நாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொண்டன. ஒவ்வொரு நாடும் ஐக்கியப் பட்ட ஏகாதிபத்தியக் கூட்டமைப்பைத் தனித்தனியாக எதிர்கொள்ளத் தொடங்கின; சில நேரங்களில் ஐநா பாதுகாப்புச் சபையிலும், சில நேரங்களில் சர்வதேச நீதிமன்றத்திலும் போராடின. ஒவ்வொரு முறையும் அவை தோல்வியுடனும் ஏமாற்றத்துடனும் திரும்பின.

ஏனெனில், ஏகாதிபத்தியவாதிகள் இங்கு ஒன்றுபட்டு நின்றனர்; அதேசமயம், கிழக் கத்திய நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களை ஏமாற்றிய அந்த 'தேசியம்' என்பது, ஒட்டு மொத்த இஸ்லாத்தையும் எதிர்கொண்ட சிலுவைப் போர்களின் மனநிலையை (ethos of the Crusades) அந்த ஏகாதிபத்தியவாதிகள் மறந்துவிடச் செய்யவில்லை!

ஒவ்வொரு நாடும் தங்களுக்குள் நிலவிய ஒடுக்கு முறைகளையும் சமூக அநீதிகளையும், பிற நாடுகளிலும் பிற சூழல்களிலும் பின்பற்றப்பட்ட தீர்வுகளையும் கோட்பாடு களையும் கொண்டு எதிர்கொள்ளத் தொடங்கின. சில நேரங்களில் அவை 'ஜன நாயகம்' என்ற பெயரையும், சில நேரங்களில் 'சமதர்மம்' (socialism) என்ற பெயரையும், இன்னும் சில நேரங்களில் 'பொதுவுடைமை' (communism) என்ற பெயரையும் பயன் படுத்தின. இவை அனைத்துமே இஸ்லாமிய உலகிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலை களால் உருவான தற்காப்பு முயற்சிகளே ஆகும். இவை மேலை நாட்டு நாகரிகம் தழுவிய 'பொருள்முதல்வாத' (materialism) சிந்தனைகளின் இயல்பான நீட்சிகளாகும்; இவற்றின் வேர்களைக் கிரேக்கம் மற்றும் உரோமானியக் கலாச்சாரங்களில் காண முடியும். எனவே, ஓர் இஸ்லாமியச் சூழலிலோ அல்லது இஸ்லாமியச் சிந்தனையிலோ இவை உருவாவதற்கு எந்த நியாயமும் இருக்க முடியாது.

## இதன் விளைவு என்னவாக இருந்தது?

நாம் காண்பது போல், வெளிப்படையான விளைவு என்பது இஸ்லாமிய உலகம் சிதறுண்டதும், கிறித்தவ உலகம் ஒன்று பட்டதுமே ஆகும். இது சிறிய இஸ்லாமிய நாடுகளின் பலவீனமாகவும், ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் வலிமையாகவும் உருவெடுத்தது. இந்தச் சிறிய நாடுகள் ஏகாதி பத்திய நாடுகளைச் சுற்றியே சுழல வேண்டிய ஒரு நச்சுச் சுழற்சியாக (vicious circle) இது மாறியது. இது பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து மற்றும் அமெரிக்காவிற்கு இடையே கொள்ளைப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒரு நிலையாகும். எகிப்து மற்றும் ஈராக் போன்ற பெயரளவில் சுதந்திரம் பெற்ற நாடுகளின் அரசாங்கங்கள் எடுத்த பலவீனமான நிலைப் பாடே இதன் விளைவு; அவை ஒரு அடி முன்னோக்கி வைப்பதும், பின் ஒரு அடி பின்வாங்குவதுமாகவே இருந்தன.

இதன் இறுதி விளைவு, ஒடுக்குமுறை மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் குழப்ப மேயாகும். நம்மிடையே சிலர் இஸ்லாத்தின் பெயரால் அதை எதிர்க்கிறார்கள், மற்றவர்கள் சமதர்மத்தின் (socialism) பெயரால் எதிர்க் கிறார்கள், இன்னும் சிலர் ரகசியமாகப் பொது வுடைமைக்கு (communism) அழைப்பு விடுக் கிறார்கள். அதே வேளையில், நிலப் பிரபுத் துவமும் முதலாளித்துவமும் எதிர்த் தரப்பில் வெட்கமின்றி ஒரே வரிசையில் அணி வகுத்து நிற்கின்றன; இவை தங்களுக்குள் ஒன்றையொன்று மோதச் செய்தும், தங்களுக்குள் பிளவு மற்றும் வெறுப்பை உண்டாக்கியும் வருகின்றன. அவ்வப்போது, சில பலவீனமான குரல்கள் கிளிப்பிள்ளையைப் போல நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றன; இஸ்லாத்தின் பெயரால் நாம் குரல் கொடுத் தாலோ அல்லது அதன் கொடியின் கீழ் ஒன்றி ணைந்தாலோ மேலை உலகம் நம் மீது பகைமை

கொள்ளும் என்று அவை அச்சுறுத்துகின்றன. ஏதோ ஒரு நாள் அந்த உலகம் நமக்கு 'நட்பு' எனும் கோப்பையிலிருந்து பானத்தை வழங்கப் போவதைப் போல அவை பேசுகின்றன! இன்று கட்சிகளோ குழுக்களோ இல்லாத ஒரு ஒற்றை அணி இருப்பது போலவும், இஸ்லாமிய அழைப்பால் தேசத்தில் பிளவும் பூசலும் ஏற்பட்டுவிடும் என்றும் அவர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள்!

அவர்கள் இதைவிட மோசமான ஒன்றைக் குறித்தும் நம்மை எச்சரிக்கிறார்கள்; அதாவது இஸ்லாமிய ஆட்சியின் 'சர்வாதிகாரம்' பற்றி அவர்கள் அச்சுறுத்துகிறார்கள். இன்று நாம் ஏதோ சுதந்திரத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதைப் போல, அவர்கள் அந்த சர்வாதிகாரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்! இன்று நாம் எந்தவொரு பெரும் துயரத்தையும் அனுபவிக்காதது போலவும், மதத்தின் பெயரால் தொழில் செய்பவர்களின் (மதவாதிகளின்) விளையாட்டுப் பொருட்களாக நாம் மாறிவிடுவோம் என்றும் அவர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள். இவை அனைத்தும் வீணான சாக்குப்போக்குகளே; இவை முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கொடியின் கீழ் ஒன்று கூடுவதைக் கண்டு பீதியடைந்துள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கு மட்டுமே சேவை செய்கின்றன. விக்டோரியா மகாராணியும் கிளாட்ஸ்டோனும் உணர்ந்திருந்ததை இவர்களும் உணர்ந்துள்ளனர்: அதாவது, வெள்ளை மனிதன் இஸ்லாமிய நிலங்களை ஆள வேண்டுமானால், குர்ஆனின் கொடி கிழித்தெறியப்பட வேண்டும் என்பதையும், அந்தக் கொடி மீண்டும் எப்போது உயருகிறதோ அன்று ஏகாதிபத்தியத்தின் அதிகாரம் வீழ்ந்துவிடும் என்பதையும் அவர்கள் நன்கு அறிவார்கள்.

இஸ்லாமிய உலகம் ஒன்றுபட்டால், போர் முனையிலும், அரசியல் மற்றும் பொருளாதார முனைகளிலும் தான் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அந்த பிரம்மாண்டமான சக்தியைப் பற்றி மேற்கத்திய ஏகாதிபத்தியம் நன்கு அறிந்துள்ளது. அணிதிரட்டப்படக்கூடிய அந்த மாபெரும் மனித வளத்தைப் பற்றியும், பொருள் ஆதாரங்களைப் பற்றியும், மற்றும் ஒரே நம்பிக்கை, ஒரே சமூகக் கட்டமைப்பின் கீழ் 400 மில்லியன் மக்கள் ஒரே கொடியின் கீழ் திரளும் நாளில் ஏற்படப்போகும் வரலாற்று மாற்றத்தைப் பற்றியும் அது தெளிவாக உணர்ந்துள்ளது. முதலாளித்துவமும் பொதுவுடைமையும் (communism) அந்த நாளை நினைத்து நடுங்குகின்றன. முதலாளித்துவம் நடுங்கக் காரணம் என்னவென்றால், அது அங்கீகரித்துள்ள வட்டி, ஏகபோக உரிமை மற்றும் முதலாளித்துவச் சுரண்டல் ஆகிய பொருளாதார அடித்தளங்கள் அனைத்தும், இஸ்லாமிய ஆட்சி மலரும் நாளில் தகர்ந்துவிடும் என்பதை அது அறியும். ஏனெனில், வட்டிக்கு வாங்குவோர், ஏகபோகச் சுரண்டல்காரர்கள் மற்றும் பிறரைச் சுரண்டுபவர்களை விரட்டியடிக்கக்கூடிய, மேலும் அவர்களின் அநீதியான மற்றும் பாவமான செயல்களுக்கு அனுமதி வழங்காத, ஒரு தனித்துவமான பொருளாதார அடிப்படையை இஸ்லாம் நிலைநாட்டும்.

பரந்து விரிந்து கிடக்கும் இந்த மாபெரும் உலகம், அதன் பொருளாதாரச் சுரண்டல் பிடிகளிலிருந்தும், முதலாளித்துவச் சதிகளிலிருந்தும் தப்பிக்கும் நாள் - கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடைமையின் (communism) மூலம் தப்பியது போல - அன்று, 'பூமி இவ்வளவு விசாலமாக இருந்தும் அவர்களுக்கு அது சுருங்கிப்போகும்' (குர்ஆன் 9:118). ஏற்கனவே பொதுவுடைமை உலகம் அதன் பிடியிலிருந்து தப்பிவிட்ட நிலையில், ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகமும் அதன் கரங்களிலிருந்து விடுபட்டுவிட்டால், மேற்கத்திய முதலாளித்துவத்திற்கு மிஞ்சுவது என்ன? அன்று அது மூச்சுத்திணறி இறந்து, உயிரற்ற சடலமாக வீழும். இஸ்லாத்தின் கொடியைக் கண்டும் இஸ்லாமிய அரசாங்கத்தைக் கண்டும் ஏகாதிபத்தியவாதிகள் அஞ்சுவது இதற்காகத்தான். இஸ்லாமிய உலகம் அவர்களை அழிப்பதற்காக ஏவிவிடும் படைகளையும் பட்டாளங்களையும் விட, இதற்குத்தான் அவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள்.

அந்த நாளை நினைத்துப் பொதுவுடைமையும் (communism) நடுங்குகிறது. ஏனெனில், உலகில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிலவும் இடங்களில் மட்டுமே தனக்கான ஒரே வாய்ப்பு இருப்பதை அது அறியும். செல்வம் ஒருசேரக் குவிக்கப்படாமலும், பெரும் வேறுபாடுகள் இல்லாமலும், ஒரு சமநிலையான மற்றும் நீதியான சமூகம்

அமையும் இடத்தில் பொதுவுடைமைக்கு இடமில்லை. அங்கு வட்டி, ஏகபோகம் மற்றும் முதலாளித்துவச் சுரண்டல்கள் ஆதிக்கம் செலுத்துவதில்லை; அங்கு ஊழியர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே பகைமை இருப்பதில்லை. ஏனெனில், அங்கு முதலாளிகள் தன்னிச்சையாகச் செயல்படவோ அல்லது ஊழியர்களை ஏமாற்றவோ வாய்ப்பில்லை. சரியான கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்படும்போது, இஸ்லாம் உருவாக்கும் சமூகம் ஒரு வர்க்கமற்ற (classless) சமூக மாகும். ஏனெனில், தொழிலாளர்களின் நலன்களும் முதலாளியின் நலன்களும் அங்கு வேறுபடுவதில்லை. தொழிலாளர்களே லாபத்தில் பாதியைப் பெறுவதற்கும், தங்களின் பங்கின் முழுமையையோ அல்லது ஒரு பகுதி யையோ அந்தப் பணிமனையின் பங்குகளாக (shares) மாற்றிக்கொள்வதற்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள்.

அந்தச் சமூகத்தில் ஊதாரித்தனமும் இல்லை, கடும் வறுமையும் இல்லை; ஏனெனில் அவை இரண்டுமே வெறுக்கத்தக்கவை (மக்ரூஹ்) அல்லது விலக்கப்பட்டவை (ஹராம்) ஆகும். வட்டி, பதுக்கல் மற்றும் அநீதியான கூலிகள் ஆகியவற்றை அது தடை செய்வதால், அங்கு செல்வம் ஒரு இடத்தில் குவிய வாய்ப் பில்லை. அது ஒரு சமநிலையான சமூகம்; ஏனெனில், எப்போதெல்லாம் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறதோ, அப்போ தெல்லாம் செல்வத்தை மறுபகிர்வு செய்ய அந்த அரசு கடமைப்பட்டுள்ளது. மேலும், அத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு இட்டுச் செல்லும் அனைத்துக் காரணிகளையும் முன்கூட்டியே தடுத்து நிறுத்தும் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயமும் அந்த அரசுக்கு உண்டு.

அனைத்துப் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளும் தேசியமயமாக்கப்பட்ட அல்லது கூட்டு உடைமையாக்கப்பட்டுள்ள ஒரு சமூகத்தில், ஏகபோக உரிமைக்கு இடமே இல்லை. அத்தகைய ஓர் இஸ்லாமியச் சமூகம் அமையும்போது, அங்கே பொதுவுடைமை (communism) ஊடுருவுவதற்கான வாய்ப்பு என்பது சாத்தியமற்றது, அல்லது இன்னும் சொல்லப்போனால் அது இயலாத ஒன்று. முதலாளித்துவத்தைப் போலவே, இஸ்லாமிய ஒற்றுமை மற்றும் இஸ்லாமிய அரசாங்கம் எனும் கருத்தாக்கத்தின் மீது தாக்குதல் நடத்து வதே பொதுவுடைமையின் முயற்சியாகும்.

இது குறித்து அச்சத்தை ஏற்படுத்துவதற் காகத் தனது எச்சரிக்கை ஒலிகளை எழுப்புவது, அல்லது அதன் மதிப்பைக் குறைத்து மதிப் பிடுவது, அல்லது அதன் நடைமுறைச் சாத்தியக்கூறுகளை மறுப்பது என, முதலாளித் துவவாதிகள் மேற்கொள்ளும் அதே முயற்சி களையே இதுவும் அந்தத் திசையில் மேற் கொள்கிறது.

இவை அனைத்திற்கும் மத்தியில், இஸ்லாமிய உலகின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே ஒரு ஐக்கியப்பட்ட குரல் எதிரொலிக் கிறது; அது இஸ்லாத்தின் கொடியின் கீழ் திரளவும், இஸ்லாமிய ஒற்றுமை மற்றும் இஸ்லாமிய அரசாங்கத்திற்காகவும் அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்பை விடுப்பவர்கள் 'இக்வானுல்முஸ்லிமீன்' (முஸ்லிம்பிரதர்ஹுட்) அமைப்பினர் மட்டுமல்ல; இஸ்லாமியச் சிந்தனையாளர்களோ, எழுத்தாளர்களோ அல்லது மதப் பிரச்சாரகர்களோ மட்டுமே இதனைச் செய்யவில்லை. உண்மையில், இது இஸ்லாமிய உம்மாஹ்வின் (சமூகம்) ஆழமான உள்ளுணர்விலிருந்து எழும் குரலாகும்; எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலிருந்தும், எதிர்பாராத இடங்களிலிருந்தும் இக்குரல் எழுகிறது. இஸ்லாமிய உலகின் பொரு ளாதாரத்தை இஸ்லாமிய அடிப்படையில் ஒழுங்குபடுத்துவதற்காக, ஓர் இஸ்லாமியப் பொருளாதார மாநாட்டைக் கூட்டக் கோரும் பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து இது வருகிறது. ஈரானின் ஆன்மீகத் தலைவரான ஆயத்துல்லா காஷானியிடமிருந்து இது வருகிறது; அவர் பிரிட்டிஷ் நாய்களை ஈரானிலிருந்து மட்டுமல்ல, ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகிலிருந்தே வெளியேறுமாறு முழங்குகிறார்.

மேலும் அவர் எகிப்தியப் பிரதமருக்குத் தனது ஊக்கத்தையும் வழிகாட்டலையும் வழங்குவதோடு, எகிப்து சந்திக்கும் இக்கட்டான சூழ்நிலையில் அதற்கு ஆதரவாக ஈரானின் தெருக்களில் போராட்டங்களைத் தொடங்குகிறார்.

இந்த அழைப்பு மர்ராகேஷ் (மொராக்கோ)

தலைவர்களான அல்லால் அல்-ஃபாஸி மற்றும் முஹம்மது ஹசன் அல்-வஸானி ஆகியோரிட மிருந்தும் வருகிறது. இவர்கள் 1931-ஆம் ஆண்டில், தங்களின் பெர்பர் (Berber) ஆதர வாளர்களுடன் இணைந்து, மத ரீதியான அடிப்படையில் பிரான்சுக்கு எதிராகப் போரிட்டனர். ஏனெனில், மர்ராகேஷின் மத ஒற்றுமையைச் சிதைக்காமல் அந்த நாட்டைத் தன்னால் அடிபணிய வைக்க முடியாது என்று பிரான்ஸ் நம்பிக்கை இழந்திருந்தது.

இந்த அழைப்பு ஆசியாவின் மலேசிய முஸ்லிம்களிடமிருந்தும், ஆப்பிரிக்காவின் சோமாலிய முஸ்லிம்களிடமிருந்தும் வருகிறது; அவர்கள் இஸ்லாமிய உலகின் பிற நாடுகளை நோக்கித் திரும்புகிறார்கள். இது சோசலிசக் கட்சியின் தலைவரான அஹ்மத் ஹுசைனிடமிருந்து வருகிறது; அவர் சோசலிசச் செய்தித்தாள்களில் ஆயத்துல்லா காஷானி மற்றும் ஈரானியப் பிரதமர் மொசாடெக் ஆகியோருக்கு உணர்ச்சிமிக்க கடிதங்களை எழுதியுள்ளார். அந்த மொசாடெக் தான், பெட்ரோலிய ஏகபோகத்தை இஸ்லாம் எனும் உடைவாளால் தாக்கி அதைக் காயப் படுத்தியவர்!

இது அஹ்மத் அபு அல்-ஃபத் தனது 'ஹிகாயத் லி மிஸ்ர்' (எகிப்தின் கதைகள்) நூலில் விடுத்த அழைப்பிலிருந்தும் வருகிறது; அதில் அவர் இஸ்லாமிய ஆட்சி மற்றும் நீதியின் மூலம் விடுதலை பெற அழைப்பு விடுக்கிறார். இதுவே அந்த விழிப்புணர்வு; இதுவே அந்த வழிகாட்டுதல்; இதுவே அந்தப் பேரொளி. இது விழித்தெழும், வழிநடத்தப்படும் மற்றும் ஒளியூட்டப்படும் இந்த ஒட்டுமொத்த உம்மாஹ்வின் மனச்சாட்சியாகும். இது இனி ஒரு தனிநபரின் அல்லது ஓர் அமைப்பின் அழைப்பு மட்டுமல்ல. இது வானத்திலிருந்து மீண்டும் பூமிக்கு இறங்கி வரும் இறைக்குரல் ஆகும். சுற்றிலும் இருளும் மந்தநிலையும் சூழ்ந்திருந்தபோதிலும், இன்றைய நாட்களில் அடிவானத்தில் நம்பிக்கையூட்டும் அறிகுறிகள் தென்படுகின்றன.

Courtesy: Al-Tawhid, A Quarterly Journal of Islamic Thought and Culture, Vol. VII, No. 1, Muharram - Rabial Awwal 1410

தமிழில் : Advocate.
**JASMINE FATHIMA** B.Sc, B.Ed, LLM.,

## ஒரு சமுதாயத்தின் வரலாற்றைப் புரட்டிப்போட்ட குத்தாலம் ஜனாப் A.R.ஹலீலுர்ரஹ்மான்


திருமணத்தின்போது வைகறை ஆசிரியர் மு.குலாம் முஹம்மது உரையாற்றுகிறார்

தன்னுடைய குடும்பத்தவர்கள் அனைவரையும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள செய்தவர். இன்று ஆல விருட்சமென விரிந்து வியாபித்து நிற்பவர்.

நம் கண்முன்னே மூன்று தலைமுறையை நிரந்தரமாக ஜாதிய அடக்குமுறையிலிருந்தும், அடுக்கு முறையிலிருந்தும் விடுவித்தவர்.

அந்த மூன்றவாது தலைமுறையில் அவருடைய பேரனின் திருமணம் - குத்தாலத்தில் 5-4-2026இல் நடைபெற்றது. நானும், காலமெல்லாம் நம் தாஃவா களத்தில் தளகர்த்தராகத் திகழும் அதுல் ரவூஃப் அவர்களும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பில் கலந்துகொண்டேன்.

கலீலுர்ரஹ்மான் அவர்கள் ஒரு சமுதாயத்தின் வரலாற்றைப் புரட்டிப் போட்டதை சுட்டிக் காட்டி, நான் உரையாற்றினேன்.

பலர் 1995இல் நம் வழியாக ஹிதாயத்தை பெற்றதையும், நாளையும் தேதியையும் குறிப்பிட்டுக் கட்டித் தழுவியது. நெஞ்சில் நீங்கா காட்சியாக என்றென்றும் நம் நினைவில். - MGM

தாருஸ் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் வழங்கும்



# கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி..!

**கடந்த மார்ச் 29 மற்றும் ஏப்ரல் 5,12களில் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி மதுரையில் நடந்தது. இது மூன்று வெவ்வேறு இடங்களில் நடந்தது. இதில் பலர் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பெற்றோர்கள் கலந்து கொண்டது தான் மிக சிறப்பு.**

இந்நிகழ்ச்சியில் கல்லூரியில் கலை படிப்பை பற்றி மக்கள் ஆவலுடன் கேட்டனர். அரசு தேர்வுக்கு உகந்த படிப்பில் சேர மக்கள் ஆர்வமுடன் இருப்பதையே இது காட்டுகிறது. இதற்காக BA டிகிரியில் வரலாறு, ஆங்கிலம், தமிழ் படிக்க வழி காட்டப்பட்டது.

மேலும் இந்த வகை பட்டப்படிப்பு ஆசிரியர் தொழிலுக்கு தகுதியானது என கூறப்பட்டதுடன், ஆசிரியர் தொழிலுக்கு மேலும் 2 வருட B.Ed., படிக்க வேண்டும் என வழிக் காட்டப்பட்டது. மேலும் கல்லூரியில் பேராசிரியர் பணியாற்றுவது பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

இதோடு வழக்கறிஞராக சட்ட படிப்பு படிக்க ஆர்வமூட்டப்பட்டது. இதற்காக +2 முடித்த மாணவர்கள் நேரடியாக 5 வருட LLBயும், டிகிரி முடித்தவர்கள் 3 வருட LLB யும் படிக்க வழி காட்டப்பட்டது.

சிலர் மருத்துவ துறை படிப்புகள் பற்றி கேட்டனர். இதில் துணை மருத்துவ படிப்பில் உள்ள வேலைவாய்ப்புக்கு உகந்த டிகிரி மற்றும் டிப்ளோமா படிப்பு வழிகாட்டப் பட்டது. குறிப்பாக Nursingல் B.Sc., Dip. GNM, ANM படிப்புகள் சொல்லப்பட்டது. மேலும், இரத்த பரிசோதனை படிப்பான DMLTயும் மருந்து தயாரிப்பு படிப்பான D.Pharm வும் அறிந்து கொண்டனர்.

விவசாயம் சார்ந்த தொழிலுக்கு B.V.Sc, Food Technology மட்டும் படிக்க கேட்டு கொள்ளப்பட்டனர்.

இவ்வாறான படிப்புகளால் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்படும் பயன்கள் விளக்கப் பட்டதுடன் சேவையில் ஈடுபட வலியுறுத் தப்பட்டது.

இதோடு சில வகை அரசு தேர்வுகள் பற்றி விழிப்புணர்வு ஊட்டப்பட்டது. ■




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்பாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்** நடத்தும்

# பிற மத முதாயத்தினருக்கான கட்டுரைப்போட்டி

**தலைப்பு**

## " குர்ஆன் காட்டும் வாழ்வியல் வழிகாட்டல்கள் "
## ( அல்லது ) " இஸ்லாம் காட்டும் நீதி "

# இஸ்லாமிய சமுதாயத்தினருக்கான கட்டுரைப்போட்டி

## தலைப்பு :" இஸ்லாமிய அரசியலும், நவீன அரசியலும்"

தினம் தினம் பலப்பல பிரச்சனைகளை ஒவ்வொரு மனிதரும் எதிர்கொண்டு வருகின்றனர். அதற்கு தீர்வாக ஏதேனும் ஒரு வழியிலும் செல்கின்றனர். முடிவில் முட்டுச் சந்தில் சிக்குவது போல் சிக்கி பரிதவிக்கின்றனர். குர்ஆன் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு வழங்குகிறது. மேலும் வாழ்விற்கான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்குகிறது. இதில் தாங்கள் அறிந்த சிறந்த வழிகாட்டுதல்களை கட்டுரைகளாக வடித்து தாருங்கள். அதுபோலவே நீதி என்பது சாமானியருக்கு எட்டாக்கனியாகவும், ஆளுக்கு தகுந்த படியும் ஜாதி, மதம் சார்ந்தும் இருக்கிறது. இதில் இஸ்லாம் வழங்கிய நீதிகளை கட்டுரைகளாக வடித்து தாருங்கள்.

**நிபந்தனைகள்**

1. கட்டுரையில் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி எண் குறிப்பிட வேண்டும்.
2. கட்டுரை 5 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 24.05.2026

கட்டுரையை அனுப்ப வேண்டிய முகவரி

**8/34, அக்ரஹாரபுத்தூர், திருப்பூர் - 641663.**

**வாட்ஸ்அப் எண் : 96551 35154**


E-Mail : katturaipotti@gmail.com

| | |
|---|---|
| முதல் பரிசு : ரூ.5000/-<br>இரண்டாம் பரிசு : ரூ.3000/-<br>மூன்றாம் பரிசு : 2000/- | சிறந்த கட்டுரைகளாக தேர்ந்து எடுக்கப்படும் 10 நபர்களுக்கு தலா ரூ.1000/- பரிசு வழங்கப்படும். |

இப்படிக்கு

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**

திருப்பூர். தொடர்புக்கு : 96551 35154




# இந்தியாவில் நடக்கும் வெறுப்புப் பிரச்சாரங்கள்

கா ஆய்வு!

## மகாராஷ்டிராவில் வெறுப்பு பேச்சுகள்

இந்தியாவின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமான மகாராஷ்டிரா, 2025ஆம் ஆண்டில் வெறுப்புப் பேச்சு சம்பவங்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது, 193 ஆவணப்படுத்தப்பட்ட நிகழ்வுகளில் தோராயமாக 15 சதவீதமாகும். இந்த எண்ணிக்கை 2024ஆம் ஆண்டிலிருந்து ஒரு சிறிய சரிவை மட்டுமே குறிக்கிறது, அந்த ஆண்டில் 210 சம்பவங்கள் பதிவாகின, அந்த ஆண்டில் முந்தைய பொதுத் தேர்தல்கள் மற்றும் 2024 நவம்பரில் நடந்த மாநிலத் தேர்தல்கள் இரண்டும் இதில் அடங்கும்.

| மகாராஷ்டிராவில் வெறுப்புப் பேச்சின் ஆண்டுத் தரவுகள் | |
|---|---|
| 2024 | 210 |
| 2025 | 193 |
| 2023 | 118 |

தேர்தல் அல்லாத ஆண்டில் இவ்வளவு அதிக அளவிலான வெறுப்புப் பேச்சு தொடர்ந்து இருப்பது ஒரு கவலைக்குரிய விடயாமாக இருக்கின்றது. தேர்தலுக்குப் பிறகு குறைவதற்குப் பதிலாக, மகாராஷ்டிராவில் வெறுப்புப் பேச்சு உயர்ந்தே இருந்தது, இது பிரச்சாரக் காலங்களுக்குப் பிறகு

சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டுதல் இயல்பாக்கப்படுவதைக் குறிக்கிறது. 118 சம்பவங்கள் பதிவு செய்யப் பட்ட தேர்தல் அல்லாத ஆண்டான 2023 உடன் ஒப்பிடும்போது, 2025ஆம் ஆண்டு ஏற்ப்பட்ட வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளில் 64 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. தேர்தல் அழுத்தம் இல்லாத நிலையில் இந்த தொடர்ச்சியான அதிகரிப்பு, ஒழுங்கமைக்கப் பட்ட வெறுப்புப் பேச்சு மாநிலத்தின் அரசியல் மற்றும் சமூக நிலப்பரப்பின் வழக்கமான அம்சமாக வேரூன்றியிருக்கும் ஒரு ஆபத்தான போக்கைக் குறிக்கிறது.

193 வெறுப்பு பேச்சுக்களில், 169 வெளிப் படையாக முஸ்லிம்களுக்கு எதிரானவை, 22 கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் இருவரையும் குறிவைத்தன, இரண்டு வெளிப் படையாக கிறிஸ்தவர்களுக்கு எதிரானவை.

| வெருப்பு பேச்சுகள் | முஸ்லீம்கள் மீது | கிருஸ்த்தவர்கள் மீது |
|---|---|---|
| மொத்த வெறுப்பு | 193 | 24 |
| | | |
| வெளிப்படையாக | 169 | 2 |
| | | |
| மறைமுகமாக | 22 | 22 |

மகாராஷ்டிராவின் மாதாந்திர தகவல்கள் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தனித்துவமான அதிகரிப்புகளைக் காட்டு கின்றன, ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அணி

திரட்டல் நிகழ்வுகள் மற்றும் வகுப்புவாத பதற்றத்தின் அத்தியாயங்களுடன் தொடர்புடையது.

## பிப்ரவரி

வெறுப்புப் பேச்சு சம்பவங்கள் முதன் முதலில் பிப்ரவரியில் 23 நிகழ்வுகளுடன் உச்சத்தை எட்டின, இவை பெரும்பாலும் இந்து தீவிர வலதுசாரி கூட்டணியான சகால் இந்து சமாஜ் ஏற்பாடு செய்த இந்து ஜன் அக்ரோஷ் மோர்ச்சா (Hindu Jan Akrosh Morcha ) மற்றும் இந்து தர்ம சபா (Hindu Dharma Sabha) போன்ற நிகழ்வுகளுடன் தொடர்புடையவை.

## மார்ச்

17ஆம் நூற்றாண்டின் முகலாய ஆட்சியாளர் ஔரங்கசீப்பின் கல்லறையை அகற்றக் கோரி வி.எச்.பி, பஜ்ரங் தள் தலைமையிலான

பிரச்சாரத்தால் நாக்பூரில் வகுப்புவாத கலவரங்கள் எண்ணிக்கை மார்ச் மாதத்தில் 29 நிகழ்வுகளை எட்டி மேலும் அதிகரித்து. ஔரங்கசீப்பின் கல்லறையை தோண்டி அவரின் உடலை எடுப்போம் என்ற கூக்குரல் மாநிலம் முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிரான பல போராட்டங்களையும், பேரணிகளையும், முஸ்லிம் எதிர்ப்பு உரைகளைக் கொண்டிருந்தன.

## ஏப்ரல்

ஏப்ரல் மாதத்தில் வெறுப்புப் பேச்சு மீண்டும் அதிகரித்தது, 33 நிகழ்வுகளுடன் உச்சத்தை எட்டியது, அம்மாதத்தில்தான் பஹல்காம் தாக்குதல் நடைபெற்றது. பஹல்காம் பயங்கர வாதத் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டங்களின் போது அதிகமான வெறுப்பு நிகழ்வுகள் ஏற்பட்டன.

ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு, மகாராஷ்டிராவில் வெறுப்புப் பேச்சு சம்பவங்கள் நிலைப்படுத்தப்பட்டன, ஆனால் உயர்ந்தே இருந்தன, மாதத்திற்கு 5 முதல் 22 நிகழ்வுகள் வரை ஏற்ற இறக்கமாக இருந்தன.

| மகாராஷ்டிராவில் , 2025 வெறுப்புப் பேச்சின் மாத தரவுகள் | |
|---|---|
| மார்ச் | 29 |
| ஏப்ரல் | 33 |
| அதற்கு பிறகு | 5 - 22 |

## மற்ற மாநிலங்களில் வெறுப்பு பேச்சுகள் : மூன்றாவது இடம் : மத்தியப் பிரதேசம்

2025-ல் 172 வெறுப்புப் பேச்சு நிகழ்வு களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. இது 2024-ல் நடந்த 98 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களை விட 75 சதவிகிதமும், 2023-ல் நடந்த 65 சம்பவங்களை விட 165 சதவிகிதமும் கணிசமான அதிகரிப்பைக் குறிக்கிறது.

## நான்காவது இடம் : உத்தரகாண்ட்

155 வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது. இது 2024-ல் பதிவுசெய்யப்பட்ட 65 சம்பவங்களை விட 138 சதவிகிதமும், 2023-ல் ஆவணப்படுத்தப்பட்ட 41 சம்பவங்களை விட 278 சதவிகிதமும் வியக்கத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக, முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு, மதவெறி மற்றும் வன்முறையைத் தூண்டுதல் ஆகியவற்றின் மையமாக இந்த மாநிலம் உருவெடுத்துள்ளது. இதில், மனித உரிமை அமைப்புகள் இனப் படுகொலையை ஒத்திருப்பதாக விவரித்த பிரச்சாரங்களும் அடங்கும்.

## முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி

மாநில அளவிலான நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்ற ஜனவரி மாதத்தில், அதிகபட்சமாக 27 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உத்தரகாண்டில் இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி முன்னின்று நடத்தி வருகிறார். இவர் முஸ்லிம்களுக்கு எதிரான உரைகளை ஆற்றுவதிலும், "லவ் ஜிஹாத்," (love jihad) “லேண்ட் ஜிஹாத்,” (land jihad) மற்றும் "ஸ்பிட் ஜிஹாத்” (spit jihad) போன்ற சதி கோட்பாடுகளைப் பரப்புவதிலும் பெயர் பெற்றவர்.

அவரது நிர்வாகத்தின் கீழ், உத்தரகாண்டில் "சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை" அகற்றுவதாகக் கூறி, முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் இடிக்கப்படுவதுடன், பரவலான வன்முறை மற்றும் பாகுபாடு நிறைந்த ஆட்சி முறைகளும் காணப்படுகின்றன.

## ஐந்தாவது ஆறாவது இடத்தில்: ராஜஸ்தானும் டெல்லியும் :

ராஜஸ்தானும், தேசிய தலைநகரான டெல்லியும் தலா 76 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களுடன் கூட்டாக ஐந்தாவது இடத்தைப் பிடித்தன. இந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களை எதிர்கொண்ட டெல்லியில், தேர்தல் காலத்தில் வெறுப்புப் பேச்சு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. இது 2024-ல் பதிவான 45 சம்பவங்களை விட 69 சதவீதம் அதிகமாகும். ராஜஸ்தானில், 2024-ல் பதிவான 74 சம்பவங்களை விட ஒரு சிறிய அதிகரிப்பு காணப்பட்டது. அந்த மாநிலத்தில் 2023-ல் 64 சம்பவங்கள் பதிவாகியிருந்தன, இது கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு சீரான மேல்நோக்கிய போக்கைக் குறிக்கிறது.

## ஏழாவது இடத்தில் : பீகார்

சட்டமன்றத் தேர்தல்களை நடத்திய பீகார், 67 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களுடன் ஏழாவது இடத்தைப் பிடித்தது. இது, 2024-ல் பதிவுசெய்யப்பட்ட 52 சம்பவங்களை விட 29 சதவீதம் அதிகமாகும். ஒப்பிடுகையில், 2023-ல் 18 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் மட்டுமே ஆவணப்படுத்தப்பட்டன. இது கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.


## மற்ற மாநிலங்களில்

முதல் தரவரிசையில் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைத் தவிர, கூடுதலாக 15 மாநிலங்களில் மாறுபட்ட எண்ணிக்கைகளில் வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் நடந்துள்ளதாக இந்தியா ஹேட் லேப் (India Hate Lab) பதிவு செய்துள்ளது. இவற்றில் குஜராத் (40), கர்நாடகா (40), சத்தீஸ்கர் (33), அசாம் (32), ஹரியானா (37), இமாச்சலப் பிரதேசம் (29), மேற்கு வங்கம் (27), ஜார்க்கண்ட் (22), தெலங்கானா (16), பஞ்சாப் (13), கேரளா (7), கோவா (3), ஒடிசா (5), ஆந்திரப் பிரதேசம் (2) மற்றும் அருணாச்சலப் பிரதேசம் (1) ஆகியவை அடங்கும். ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இந்த ஆண்டில் ஆறு வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

## வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் ஒப்பீடுகள் (2023-2025)


2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம்களை இலக்காகக் கொண்ட வெறுப்புப் பேச்சுகள் 1,147 சம்பவங்களிலிருந்து

FIGURE 3: TARGETS OF HATE SPEECH AT IN-PERSON EVENTS (2024 VS. 2025)




1,289 ஆக உயர்ந்துள்ளன. கிட்டத்தட்ட 12 சதவீதம் அதிகரித்து, கிறிஸ்தவர்களை இலக்காகக் கொண்ட வெறுப்புப் பேச்சு மேலும் கடுமையாக அதிகரித்து, 2024 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 115 கிறிஸ்தவ எதிர்ப்பு வெறுப்புப் பேச்சுகள் 162 ஆக, கிட்டத்தட்ட 41 சதவீதம் உயர்ந்தது.

FIGURE 4: HATE SPEECH EVENTS RECORDED OVER TIME (2023–2025)





படம் 4-இல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த அதிகரிப்பு ஒரு நீண்ட கால மேல்நோக்கிய போக்கின் ஒரு பகுதியாகும். ஒட்டுமொத்தமாக, 2025-ஆம் ஆண்டில் 1,318 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இது, 2024-இல் பதிவுசெய்யப்பட்ட 1,165 நிகழ்வுகளை விட 13 சதவிகித அதிகரிப்பையும், 2023-இல் ஆவணப்படுத்தப்பட்ட 668 நிகழ்வுகளை விட வியக்கத்தக்க வகையில் 97 சதவிகித அதிகரிப்பையும் குறிக்கிறது. இதில்

முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களுமே முதன்மை மற்றும் தொடர்ச்சியான இலக்குகளாக நீடிக்கின்றனர்.

## ஆளும் கட்சியால் நடத்தப்படும் வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள்

வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் அனுமதிக் கப்படுமா என்பதைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி, மாநில அளவில் ஆட்சியில் இருக்கும் அரசியல் அமைப்பே ஆகும். இந்தியாவில், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு முதன்மையாக மாநில அரசு களிடமே உள்ளது. வன்முறையைத் தூண்டுதல், பொது அமைதியின்மை மற்றும் குழுக்களிடையே பகைமையை வளர்த்தல் தொடர்பான தற்போதைய குற்றவியல் விதிகளை அமல்படுத்துவது அவற்றின் பணியாகும். எனவே, மாநில அதிகாரிகளால் இந்தச் சட்டங்கள் பாரபட்சமாகவோ அல்லது மெத்தனமாகவோ பயன்படுத்தப்படுவது, நடைமுறையில் வெறுப்புப் பேச்சையும் வன்முறையைத் தூண்டுவதையும் அதிகமாக்கிறது.

FIGURE 5: HATE SPEECH EVENTS BY PARTY IN POWER




அதிக எண்ணிக்கையிலான வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் நடந்த முதல் பத்து மாநிலங்கள், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி (பாஜக) ஆட்சி செய்யும் அராங்கத்திலே நிகழ்ந்துள்ளன. ஆய்வு செய்யப்பட்ட 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், பாஜக 16-ல், தனித்து அல்லது கூட்டணியின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. இதில் தேசிய தலைநகர் பிரதேசமான டெல்லியும் அடங்கும், அங்கு சட்டமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து பிப்ரவரி 2025-ல் பாஜக ஆட்சிக்கு வந்தது.

பாஜக ஆளும் மாநிலங்கள் முதன்மைப் வெறுப்பு நிகழ்வுகளின் மையமாக தொடர்ந் தாலும், கடந்த ஆண்டுகளைப் போலவே, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் இந்து தேசியவாதக் குழுக்களும் பாஜக தலைவர்களும் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பைத் தீவிரமாகத் திரட்டிப் பெருக்கியுள்ளனர் என்பதையும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் வெறுப்பு பேச்சுகள்

காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில், 40 ஆவணப்படுத்தப்பட்ட வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களுடன், முதல் பத்து இடங்களில் இடம்பெற்ற பாஜக அல்லாத ஒரே மாநில மாகும். இது 2024-ல் பதிவுசெய்யப்பட்ட 32 சம்பவங்களை விட அதிகரிப்பாகும், மேலும் 2023-ல் பதிவுசெய்யப்பட்ட 40 சம்பவங்களுக்கு இது சமமாகும். குறிப்பிடத்தக்க வகையில், இந்த வெறுப்புப் பேச்சுகளில்

பெரும்பாலானவை, விஸ்வ ஹிந்து பரிஷத் (VHP), பஜ்ரங் தல், ஹிந்து ஜாகரண வேதிகே, ஸ்ரீ ராம் சேனா மற்றும் ஹிந்து ராஷ்டிர சேனா உள்ளிட்ட பாஜக மற்றும் அதனுடன் இணைந்த இந்து தேசியவாத அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களால் நிகழ்த்தப்பட்டன.

தேசிய தலைநகர் டெல்லி உட்பட, பாஜக நேரடியாக ஆளும் மாநிலங்களில் 896 வெறுப்புப் பேச்சு சம்பவங்கள் பதிவாகி யுள்ளன. இது, 2025-ஆம் ஆண்டில் ஆவணப் படுத்தப்பட்ட மொத்த சம்பவங்களில் 68 சதவீதமாகும். 2024-ஆம் ஆண்டில் பாஜக ஆளும் மாநிலங்களில் பதிவான 604 சம்பவங் களை விட இது 48 சதவீதம் அதிகமாகும்.

## பாஜக வின் கூட்டணி ஆட்சியில் :

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA), ஜனதா தளம் (ஐக்கிய), சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே பிரிவு), தேசிய வாத காங்கிரஸ் கட்சி (அஜித் பவார் பிரிவு), ஐக்கிய மக்கள் கட்சி லிபரல் (UPPL), அசோம் கண பரிஷத் (AGP), போடோலாந்து மக்கள் முன்னணி (BPF) மற்றும் பிற பிராந்திய கட்சிகளுடன் இணைந்து அமைத்த கூட்டணியாகும். இந்தக் கூட்டணியால்

ஆளப்படும் மாநிலங்களில் 262 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன, இது மொத்தத் தரவுத் தொகுப்பில் கிட்டத்தட்ட 20 சதவீதமாகும்.

மேலும், பாஜக தலைமையிலான மத்திய அரசின் காவல் மற்றும் சட்ட அமலாக்க அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் ஆறு வெறுப்புப் பேச்சு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மொத்தத்தில் 88 சதவீதமான 1,164 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள், பாஜக ஆளும் மாநிலங்கள், (NDA) ஆளும் கூட்டணி மாநிலங்கள் மற்றும் பாஜக நிர்வாகத்தில் உள்ள யூனியன் பிரதேசங்களில் நிகழ்ந்துள்ளன. இது, 2024-ல் இந்த அதிகார வரம்புகளில் பதிவுசெய்யப்பட்ட 931 சம்பவங்களை விட 25 சதவீதம் அதிகமாகும். மேலும், பாஜக கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு பெருமளவில் குவிந்திருப்பதை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கு மாறாக, அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ் (AITC), இந்திய தேசிய காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM), ஆம் ஆத்மி கட்சி (AAP) மற்றும் இடது ஜனநாயக முன்னணி (LDF) உள்ளிட்ட எதிர்க்கட்சிக் கூட்டணிகள் மற்றும் கட்சிகளால் ஆளப்படும் ஏழு மாநிலங்களில், 2025-ஆம் ஆண்டில் 154 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது, 2024-ஆம் ஆண்டில் இந்த மாநிலங்களில் ஆவணப்படுத்தப்பட்ட 234 சம்பவங்களை விட 34 சதவீதம் குறைவாகும்.

## பா.ஜ.க அல்லாத மாநிலங்களில் வெறுப்புப் பேச்சுடன் ஒப்பிடுகையில் (2023- 2025)

2023 முதல் 2025-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், பாஜக மற்றும் என்டிஏ ஆளும் பகுதிகளில் வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் கடுமையாக அதிகரித்தன; அதே காலகட்டத்தில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக குறைந்து காணப்பட்டது.


## 2023-2025ல் பாஜக மற்றும் என்டிஏ தலைமையிலான மாநிலங்களில்

453 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகின. இது, ஆவணப்படுத்தப்பட்ட மொத்த சம்பவங்களில் 68% ஆகும். பொதுத் தேர்தல் காலகட்டமான 2024-ல், இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட இருமடங்காகி 881 சம்பவங்களாக உயர்ந்தது. 2025-ல், நாடு தழுவிய நாடாளுமன்றத் தேர்தல்கள் இல்லாதபோதிலும், பாஜக மற்றும் என்டிஏ ஆளும் மாநிலங்கள் மற்றும் மத்திய நிர்வாகப் பகுதிகளில் வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் மேலும் அதிகரித்து 1,164 நிகழ்வுகளாக உயர்ந்தன. இது, பாஜக கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஒழுங்கமைக்கப்பட்ட வெறுப்புப் பேச்சுச் சூழல் அமைப்புகள் தொடர்ந்து ஆழமாக வேரூன்றி வருவதைப் பிரதிபலிக்கிறது.

## எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில்

இதற்கு மாறாக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் 2023-ஆம் ஆண்டில் 170 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகின. தேர்தல் தொடர்பான அணிதிரட்டல்களால் உந்தப்பட்டு, இந்த எண்ணிக்கை 2024-ஆம் ஆண்டில் 234 சம்பவங்களாக அதிகரித்தது; ஆனால், 2025-ஆம் ஆண்டில் 154 சம்பவங்களாகக் குறைந்தது. இந்தக் குறைவானது, முந்தைய ஆண்டில் நாடு தழுவிய அளவில் அரசியல் அணிதிரட்டலையும் வகுப்புவாதப் பேச்சுகளையும் கணிசமாகத் தீவிரப்படுத்தியிருந்த பொதுத் தேர்தல் சுழற்சி இல்லாததாலும், வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டுவதற்கு எதிரான காவல் துறையின் கடுமையான நடவடிக்கையாலும் அரசியல் கட்சிகளின் உறுதிப்பாட்டின்

FIGURE 6: HATE SPEECH EVENTS BY PARTY IN POWER (2023-2025)



மிதமான அதிகரிப்பாலும் ஏற்பட்டது.

சில மாநிலங்களில் உள்ள போக்குகள், தேர்தல் சூழலுக்கும் வெறுப்புப் பேச்சு அதிகரிப்பிற்கும் இடையிலான தொடர்பை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM)-காங்கிரஸ் கூட்டணியால் ஆளப்படும் ஜார்க்கண்டில், பாஜகவுடனான கடுமையான தேர்தல் போட்டிக்கு மத்தியில் 2024-ல் 85 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகின. பின்னர், கூட்டணியின் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து 2025-ல் இந்த எண்ணிக்கை 22 ஆகக் குறைந்தது. இதேபோல், காங்கிரஸ் ஆளும் இமாச்சலப் பிரதேசத்தில், மசூதிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் மற்றும் இந்து தேசியவாத அணிதிரட்டல்களால் தூண்டப்பட்ட வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள், 2024-ல் 48-ஆக இருந்து 2025-ல் 28-ஆகக் குறைந்தன. தெலங்கானாவிலும் 2024-ல் 25 சம்பவங்களிலிருந்து 2025-ல் 16 சம்பவங்களாகக் குறைவு பதிவாகியுள்ளது.

2026-ல் மாநிலத் தேர்தல்களை எதிர்கொள்ளவிருப்பதும், பாஜகவின் முக்கிய இலக்கு மாநிலமாகத் திகழ்வதுமான மேற்கு வங்கத்தில், 2024-ல் 30 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களும், 2025-ல் 27 சம்பவங்களும் பதிவாகி, வரவிருக்கும் தேர்தல் சுழற்சிக்கு முன்னதாகத் தொடர்ச்சியான மக்கள் திரட்டல் நடைபெறுவதைக் குறிக்கும் வகையில், வெறுப்புப் பேச்சு நிகழ்கிறது.

குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆளும் இரண்டு மாநிலங்கள் பரவலான சரிவுப் போக்கிலிருந்து மாறுபட்டுள்ளன. காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் 2024-ல் 32-ஆக இருந்த நிலையில், 2025-ல் 40-ஆக அதிகரித்துள்ளன. அதே காலகட்டத்தில், ஆம் ஆத்மி கட்சி ஆளும் பஞ்சாபில் சம்பவங்களின் எண்ணிக்கை 7-லிருந்து 13-ஆக உயர்ந்துள்ளது. இது, பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வெளியேயும் இந்து தேசியவாத அணிதிரட்டல் தீவிரமாக உள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தேர்தல் காலங்கள் முடுக்கிவிடும் காரணிகளாகச் செயல்படும் அதே வேளையில், பாஜக மற்றும் என்டிஏ ஆளும் பிராந்தியங்களில் வெறுப்புப் பேச்சு கட்டமைப்பு ரீதியாக வேரூன்றி, தேர்தல் அல்லாத ஆண்டுகளிலும் நீடித்து விரிவடைந்து, நீடித்த அணிதிரட்டலை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது என்பதை இந்தத் தரவுகள் விளக்குகின்றன.

## வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் மாதாந்திர அறிக்கை

2024-ல் ஒரு நாளைக்கு மூன்று என இருந்த வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களின் எண்ணிக்கை, 2025-ல் இந்தியா முழுவதும் ஒரு நாளைக்குச் சராசரியாக நான்கு என ஆவணப்படுத்தப்பட்டது. இந்த அபாயகரமான அதிகரிப்பிற்குப் பல காரணிகள் பங்களித்தபோதிலும், சில முக்கிய உந்து காரணிகள் தனித்து நின்றன.

2025 ஏப்ரலில் நடந்த பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு மற்றும் ஆத்திரமூட்டும் பேச்சுகளைக் கொண்ட பேரணிகள் மற்றும் பொது அணிதிரட்டல்களில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. தேர்தல் அணிதிரட்டலும் ஒரு முக்கியப் பங்காற்றியது, குறிப்பாக டெல்லி மற்றும் பீகாரில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களின் போது, 2024 பொதுத் தேர்தல்களின் போது காணப்பட்ட போக்குகளைப் பிரதிபலிக்கும் வகையில், பிரச்சார உத்திகளின் ஒரு பகுதியாக வெறுப்புப் பேச்சுக்கள் தீவிரமடைந்தன.

இந்த ஆண்டில், வி.எச்.பி-பஜ்ரங் தல் போன்ற இந்து தேசியவாத அமைப்புகளும், முன்னாள் வி.எச்.பி தலைவர் பிரவீன் தொகாடியா தலைமையிலான அந்தர்ராஷ்ட்ரிய இந்து பரிஷத் மற்றும் ராஷ்ட்ரிய பஜ்ரங் தல் (AHPRBD) உள்ளிட்ட குழுக்களும் தீவிரமான மற்றும் தொடர்ச்சியான அணிதிரட்டல்களை மேற்கொண்டன. இந்தக் குழுக்கள் அடிக்கடி பேரணிகள், ஊர்வலங்கள், மத ஊர்வலங்கள், திரிசூல தீட்சை விழாக்கள், அகண்ட பாரத் சங்கல்ப் திவாஸ் நிகழ்வுகள் மற்றும் சௌர்ய திவாஸ் (வீரர் தினம்) நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தன. இவை மீண்டும் மீண்டும் வெறுப்புப் பேச்சுக்கான தளங்களாகச் செயல்பட்டன. சௌர்ய திவாஸ் என்பது

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியில் 1992-ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், வி.எச்.பி-யால் ஆண்டுதோறும் டிசம்பர் 6 அன்று அனுசரிக்கப்படும் ஒரு நிகழ்வாகும்.


திரிசூல தீட்சை விழாக்கள் என்பவை, முக்கியமாக வி.எச்.பி-பஜ்ரங் தளத்தால் ஆண்டு முழுவதும் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களாகும். இவற்றின்போது, பங்கேற்பாளர்களுக்கு திரிசூலங்கள் வழங்கப்பட்டு, வெறுப்பு நிறைந்த சபதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2025 டிசம்பரில் வங்கதேசத்தில் ஒரு இந்து ஆடைத் தொழிலாளி அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கூடுதல் எழுச்சிகள் காணப்பட்டன; இச்சம்பவத்தை, இந்தியாவில் உள்ள தீவிர வலதுசாரிக் குழுக்களும் தலைவர்களும், இஸ்லாமிய எதிர்ப்புப் பேச்சுகள் அடங்கிய தெருப் போராட்டங்களைத் திரட்டுவதற்காக ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

2026-ல் தேர்தலைச் சந்திக்கவுள்ள டெல்லி, பீகார், அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில், "ரோஹிங்கியா மற்றும் பங்களாதேஷ் ஊடுருவல்காரர்கள் " என்ற பூச்சாண்டி தீவிரப்படுத்தப்பட்டதன் மூலம் வெறுப்புப் பேச்சு மேலும் வலுப்படுத்தப்பட்டது.

ஆண்டின் தொடக்கத்திலிருந்தே வெறுப்புப் பேச்சுக்களின் அளவு அதிகரித்திருந்தது. ஜனவரி மாதத்தில் 129 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்கள் பதிவாகின. இது, இஸ்லாமிய எதிர்ப்பு வெறுப்பு மற்றும் மதவெறியால் பிரச்சாரம் பெரிதும் நிறைந்திருந்த உத்தரகாண்ட் நகராட்சித் தேர்தல்களுடனும், பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் வாக்குப்பதிவு நடைபெற்ற டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரக் காலத்துடனும் ஒத்துப்போனது.

FIGURE 7: MONTHLY DISTRIBUTION OF HATE SPEECH EVENTS IN 2025




மார்ச் மாதத்தில் 127 சம்பவங்கள் பதிவாகி, மீண்டும் ஒரு கூர்மையான உயர்வு காணப்பட்டது. நாக்பூரில் நடந்த மதக் கலவரங்களைத் தொடர்ந்து, அந்த மாதத்தில் மகாராஷ்டிராவில் 30 சம்பவங்கள் பதிவாகி, அதிகபட்ச பங்கைக் கொண்டிருந்தது. 17-ஆம் நூற்றாண்டின் முகலாய ஆட்சியாளர் அவுரங்கசீப்பின் கல்லறையை அகற்றக் கோரி, வி.எச்.பி-பஜ்ரங் தள் மாநிலப் பிரிவு முன்னெடுத்த பிரச்சாரத்தால் இந்த வன்முறை தூண்டப்பட்டது. கல்லறை அகற்றப்பட்டதைச் சுற்றியுள்ள சர்ச்சை, மாநிலம் தழுவிய போராட்டங்களையும் பேரணிகளையும் தூண்டியது. அவற்றில் பலவற்றில் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் இடம்பெற்றன.

ஏப்ரல் மாதத்தில் 158 வெறுப்புப் பேச்சுச் சம்பவங்களுடன், இந்த ஆண்டின் மிக உயர்ந்த மாதாந்திர அதிகரிப்பு பதிவானது. மாதத்தின் முதல் பாதியில், ராம நவமி (இறைவன் ராமரின் பிறப்பைக் கொண்டாடும் இந்துப் பண்டிகை) ஊர்வலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பேரணிகளுடன் தொடர்புடைய ஒரு எழுச்சி காணப்பட்டது. இவை மத அணிதிரட்டல், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் வன்முறைக்கான பதட்டமான இடங்களாக அதிகரித்து வருகின்றன. 26 பொதுமக்கள் கொல்லப்பட்ட பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் விதமாக, இந்து தேசியவாதக் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகளில், ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் வெறுப்புப் பேச்சுகளின் அலை வீசியது.

ஆகஸ்ட் மாதத்தில் 146 வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளுடன் மற்றொரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. இது, விஸ்வ ஹிந்து பரிஷத் (VHP) மற்றும் பஜ்ரங் தல் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட அகண்ட பாரத் சங்கல்ப் திவாஸ் நாடு தழுவிய அனுசரிப்புடன் ஒத்துப்போனது. அந்த மாதத்தில், அசாமில் வங்காள வம்சாவளி

முஸ்லிம்களை இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான வெறுப்புப் பேரணிகளும் நடைபெற்றன.

செப்டம்பர் முதல் டிசம்பர் வரை, ஒவ்வொரு மாதமும் 107 முதல் 117 வரையிலான வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளை IHL ஆவணப்படுத்தியது. இந்தத் தொடர்ச்சியான உயர்வானது, பெரும்பாலும் பீகார் சட்டமன்றத் தேர்தல்களால் ஏற்பட்டது. அத்தேர்தல்களின் போது, முஸ்லிம் "ஊடுருவல்காரர்" என்ற உருவகம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. இவற்றுடன், இந்துக்களை "விழித்தெழச்" செய்வதற்காக இந்து தேசியவாதக் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகளான சௌர்ய ஜாக்ரன் யாத்திரைகள் உள்ளிட்ட நாடு தழுவிய நிகழ்வுகளின் தொடர்ச்சியான அணித்திரட்டல்களும் நடந்தது.

டிசம்பர் மாதத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க பதற்ற அதிகரிப்பு காணப்பட்டது. 1992-ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், வி.எச்.பி மற்றும் பஜ்ரங் தள் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர்ச்சியான 'சௌர்ய திவாஸ்' நிகழ்வுகள் அந்த மாதத்தின் முற்பகுதியில் நடைபெற்றன. மாதத்தின் இறுதியில், வங்கதேசத்தின் மைமன்சிங்கில் டிசம்பர் 18 அன்று, இறைநிந்தனை என்ற பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் இந்து ஆடைத் தொழிலாளி தீபு சந்திர தாஸ் அடித்துக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வெறுப்புப் பேச்சு மீண்டும் அதிகரித்தது; இது இந்தியாவிலும் ஒரு சங்கிலித் தொடர் விளைவை ஏற்படுத்தியது. அதன் பின்னர், இந்து தீவிர வலதுசாரிக் குழுக்கள் விரைவாக அணிதிரண்டு, தெருப் போராட்டங்களை ஏற்பாடு செய்தன; அப்போராட்டங்களின் போது, தூண்டிவிடும் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான பேச்சுகள் நிகழ்த்தப்பட்டன.

ஆகஸ்ட் 2024-க்குப் பிறகு, வங்கதேசத்தில் நடந்த மாபெரும் மாணவர் போராட்டங்களுக்கு மத்தியில் ஷேக் ஹசீனா பதவியிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட முந்தைய நிகழ்வுகளை இந்தப் போக்கு பிரதிபலித்தது. அதைத் தொடர்ந்த வாரங்களில், வங்கதேசத்தில் "இந்து இனப்படுகொலை" நடப்பதாக தவறான தகவல்களும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களும் இந்தியாவில் உள்ள சமூக ஊடகத் தளங்களில் பரவலாகப் பரவி, முஸ்லிம்களுக்கு எதிரான சொல்லாடல்களைப் பெருக்குவதற்குச் சாதகமான சூழலை உருவாக்கின. அதன் விளைவாக, ஆகஸ்ட் 2024-ல் முஸ்லிம்களை இலக்காகக் கொண்ட வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் பெருமளவில் அதிகரித்தன.


இந்தியாவில் உள்ள நலிவடைந்த சிறுபான்மையினருக்கு எதிரான உள்நாட்டு வெறுப்புப் பிரச்சாரங்களைச் சட்டப்பூர்வமாக்குவதற்காக, இந்து தேசியவாத உரையாடலுக்குள் எல்லை தாண்டிய நிகழ்வுகள் எவ்வாறு மீண்டும் மீண்டும் திரித்துக்கூறப்படுகின்றன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், மைமன்சிங் சம்பவம் மீண்டும் அதே போன்ற அணிதிரட்டல் இயக்கங்களைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

## வெறுப்புப் பேச்சு சம்பவங்களின் ஒப்பீடு (2023-2025)

2023 முதல் 2025 வரையிலான வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் மாதாந்திர ஒப்பீடு, ஒவ்வொரு ஆண்டும் தனித்துவமான அரசியல், சமூக-மத மற்றும் நாடு கடந்த தூண்டுதல்கள் பெரும் உயர்வுகளுக்கு வழிவகுக்கும் ஒரு நீடித்த மற்றும் வேகமான அதிகரிப்பை வெளிப்படுத்துகிறது. இந்தத் தரவுகள், தனிப்பட்ட எழுச்சிகளைப் பிரதிபலிப்பதற்குப் பதிலாக, தேர்தல்கள், வகுப்புவாத பதற்றங்கள் மற்றும் பிராந்திய, சர்வதேச நிகழ்வுகளுடன் தொடர்புடைய தீவிர அணிதிரட்டல் காலங்களால் இடையிடையே தடைபடும், பெருகிய முறையில் இயல்பாக்கப்பட்ட மற்றும் நீடித்த ஒரு வெறுப்புப் பேச்சுச் சூழலமைப்பையே சுட்டிக்காட்டுகின்றன.

2023-ல், ஹரியானாவின் நூஹ் நகரில் வகுப்புவாத வன்முறை வெடித்ததைத் தொடர்ந்து, ஆகஸ்ட் மாதத்தில் வெறுப்புப் பேச்சு குறிப்பிடத்தக்க அளவில் உச்சத்தை அடைந்தது. இதைத் தொடர்ந்து, பல மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் மற்றும் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் நாடு

FIGURE 8: MONTHLY DISTRIBUTION OF HATE SPEECH EVENTS (2023-2025)




தழுவிய சௌர்ய ஜாக்ரன் பேரணிகளுடன் ஒத்துப்போகும் வகையில், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேலும் அதிகரிப்புகள் காணப்பட்டன.

2024-ல், இதே போன்ற போக்குகள் தீவிரமான அளவில் வெளிப்பட்டன. பொதுத் தேர்தலுக்கு முந்தைய காலகட்டத்தில், மத ரீதியான பிளவுபடுத்தல் ஒரு முக்கிய தேர்தல் பிரச்சார உத்தியாக மாறியதால், வெறுப்புப் பேச்சு கடுமையாக அதிகரித்தது. வங்க தேசத்தில் "இந்து இனப்படுகொலை" நடந்த தாகப் பரவிய தவறான தகவல்கள் மற்றும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகளை தொடர்ந்து, அதன் விளைவாக இந்தியாவில் நடந்த வெறுப்புப் பேரணிகளிலும் 2024 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பெரிய அதிகரிப்பு காணப்பட்டது.

2025-ஆம் ஆண்டில், உள்நாட்டு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் வெறுப்புப் பேச்சில் அவ்வப்போது திடீர் உயர்வுகளைத் தொடர்ந்து தூண்டினாலும், ஆண்டு முழுவதும் ஒரு சராசரியாக உயர்ந்த போக்காக இருந்தது என்று தரவுகள் காட்டுகின்றன. தேர்தல் காலங்களுக்கு வெளியே வெறுப்புப் பேச்சு தணிந்த முந்தைய ஆண்டுகளைப் போலல்லாமல், 2025-ஆம் ஆண்டில் தேர்தல் அல்லாத காலகட்டங்களிலும் கூட வெறுப்பு நிகழ்வுகள் நீடித்திருந்தன.

வெறுப்புப் பேச்சின் உயர் நிலை மட்டு படுத்தப்பட்டு நீடிப்பதற்கு காரணியாக, 2024 பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தெரிகிறது. ஆளும் பாஜகவால் நாடாளுமன்றத்தில் முழுமையான பெரும்பான்மையைப் பெற இயலாததும், அதைத் தொடர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் உள்ள கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையும், அவர்களின் உத்தியை மாற்றியமைத்தன. வெளிப்படையான மதவாதப் பிளவுப்படுத்தல் என்ற தேர்தல் கால உத்தி, எதிர்பார்த்த அளவிற்கான வெற்றியை தர முடியாதலால். முந்தைய உத்தியிலிருந்து முற்றிலுமாகப் பின்வாங்குவதற்குப் பதிலாக, அணுகுமுறையில் ஒரு மாற்றத்தை இது தூண்டியது.

2024ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றம் பிஜேபியின் தாய் அமைப்பான RSS மற்றும் அதனால் வழிநடத்தப்படும் வலதுசாரி இந்துத்துவ தேசியவாத அமைப்புகள் ஒரு நீடித்த பரவலாக்கப்பட்ட ஒரு நகர்வை தொடர்ந்து நடத்துவதற்காக புரிதலை ஏற்படுத்திக் கொண்டனர். அன்றாட வாழ்வில் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பையும், அச்சத்தையும் அடிப்படையாகக் கொண்ட கருத்து பரிமாற்றங்களை ஏற்படுத்தும் பேரணிகள் மத நிகழ்வுகள், ஊர்வலங்கள் போன்றவற்றை தொடர் திட்டமிட்ட முயற்சிகள் மூலம் நடத்துகின்றனர் என்பதை ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போக்கு ஒரு நீண்ட கால அபாயத்தை சுட்டிக்காட்டுகிறது. அதாவது, அசாம் மற்றும் மேற்கு வங்கத்தில் நடைபெறவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தல்கள், உத்தரப் பிரதேசம் போன்ற முக்கிய மாநிலங்களில்

நடைபெறவிருக்கும் 2027-2028 தேர்தல் காலம், மற்றும் இறுதியாக நடைபெறவிருக்கும் 2029 பொதுத் தேர்தல்கள் உள்ளிட்ட முக்கியமான வரவிருக்கும் தேர்தல்களுக்கு முன்னதாக அரசியல் களத்தை வடிவமைப் பதை இந்த அணுகுமுறை நோக்கமாகக் கொண்டிருக்கக்கூடும் என்பதைக் இது குறிக்கிறது.

அதாவது வரக்கூடிய தேர்தல்களுக்கு பெரிதும் உதவக்கூடிய வெறுப்பு பிரச்சாரத்தின் விதைகள் நீண்டகால தொலைநோக்குப் பார்வையுடன் 2024 தேர்தலின் கூட்டணி ஆட்சி எனும் தோல்வியிலிந்தே RSS மற்றும் அதன் கிளை அமைப்புகள் தொடங்கிவிட்டனர் என்பதை கள ஆய்வுகள் காட்டுகின்றன.

**– நாகப்பட்டிணம் பாவா**



# பொய் வழக்குகளும் தவறான புலன்விசாரணையும்

## மத்திய உளவுத் துறைதான் அப்பாவி முஸ்லிம்கள் மீது, பொய் வழக்குகளை புனைந்த குற்றத்தைச் செய்தது

**ஏப்ரல் மாத தொடர்ச்சி...**

- மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு
- அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பு
- சம்சவ்தா விரைவு ரெயில் குண்டுவெடிப்பு
- மாலேகான் 2006 குண்டுவெடிப்பு

இவை அனைத்திலும் நடந்த முதல் விசாரணையும், அவற்றில் காட்டப்பட்ட சாட்சியங்களும் இவற்றில் தாக்கல் செய்யப் பட்ட குற்றப்பத்திரிகைகள் அனைத்தும் பெரும் திருடுகளும் தகிடு தத்தங்களும்தான்.

அதேபோல் இவற்றில்
(இந்தக் குண்டுவெடிப்புகளில்)

1) வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள்

2) இந்த குற்ற முறைமை பிரிவு 165−ன்கீழ் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள்

3) ஆர்.டி.எக்ஸ் வகை வெடிபொருட்களைக் கைப்பற்றியது.

4) பாகிஸ்தானுக்கும், இதர நாடுகளுக்கும் தீவிரவாத பயிற்சி எடுப்பதற்காகப் பயணம் செய்தது எனப் புனையப்பட்டது. அதற்காக தரப்பட்ட பதிவுகள்

5) குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் பெயர் தெரிந்த, தெரியாத அமைப்புகளோடு தொடர்புடையதாகத் தரப்பட்ட சாட்சியங்கள்.

**இவை அனைத்தும் பொய் :**

மேலே நாம் சொன்ன நான்கு வழக்குகளையும், நான்கு மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறை யினர் ஏற்கெனவே விசாரணை செய்திருந்தனர். அதாவது,

1) மக்கா மஸ்ஜித் குண்டு (ஹைதராபாத்) வெடிப்பை ஆந்திர மாநில காவல் துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

2) அஜ்மீர் ஷெரீஃப் (இராஜஸ்தான்) குண்டு வெடிப்பை இராஜஸ்தான் மாநில காவல்துறை யினர் விசாரணை செய்திருந்தனர்.

3) சம்சவ்தா, ரெயில் குண்டுவெடிப்பு வழக்கினை (ஹரியானா) ஹரியானா மாநிலக் காவல்துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

4) மாலேகான் (மராட்டிய மாநிலம்) 2006 குண்டு வெடிப்பினை (மராட்டிய) மாநில காவல்துறையினர் விசாரணை செய்திருந்தனர்.

பின்னர், (CBI) என்ற மத்திய புலனாய்வுத்

துறையும் விசாரணை செய்திருந்தனர்.

இந்த விசாரணைகள் பற்றி ஊடகங்கள் தந்திடும் செய்திகளைப் பார்த்திடும்போது IB என்ற மத்திய உளவுத்துறை தவறான வழிகாட்டு தல்களையும், தகவல்களையும் தந்து வழக்கை திசை திருப்பி இருக்கின்றன. இந்தத் திசைத் திருப்பிடும் பணியை குண்டுவெடிப்புகள் நிகழ்ந்த உடனேயே செய்திருக்கின்றன.

ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பைப் பொறுத்த வரை குண்டுவெடிப்பு நடந்த அன்றே இந்தத் திசை திருப்பும் பணியை மேற்கொண்டது. அன்றே 'பிலால்'என்பவரின் பெயரையும், அவர் ஹூஜி – லஷ்கரே தய்பா ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர் என்றும் ஊடகங்களுக்கு முந்திக் கொண்டு செய்திகளைத் தந்தது.

(ஆதாரம் – Times of India Pune, 20 May-2007)

அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பைப் பொறுத்தவரை IB என்ற மத்திய உளவுத்துறை லஷ்கரே தய்பாவும், ஹூஜியும்தான் என அறிவித்தது.

(ஆதாரம் – Times of India Pune, 12-October- 2007)

''சம்சவ்தா எக்ஸ்பிரஸ்'' ரெயில் குண்டு வெடிப்பை பொறுத்தவரை நமது IB என்ற மத்திய உளவுத்துறை, இந்தக் குண்டு வெடிப்பை பாகிஸ்தான் உளவுத்துறையாகிய ஐ.எஸ்.ஐ.தான் செய்தது என்று நேரான பாதையில் சென்று கொண்டிருந்த விசாரணையை திசை திருப்பியது.

மாலேகான், 2006 குண்டுவெடிப்பை IB மத்திய உளவுத் துறையும், மராட்டிய மாநிலத்தின் காவல்துறை அதிகாரி கே.பி. ரகுவான்சியும் சேர்ந்து ஜெய்சே முஹம்மத் என்றார்கள்.

(ஆதாரம் – TImes of India, Mumbai. 9-Sep.2006, Afternoon Mumbai : 11-Sep, 2006, மராத்தி மொழி நாளிதழ், Pudhari, Pune, 10-Sep-2006 and 12-Sep-2006 Indian Express Mumbai 13-Sep,2006)

இந்த விவகாரத்திலும் நமது மனதை வருடுவது என்னவெனில், சரியான திசையில் சென்று கொண்டிருக்கும் புலன் விசாரணைகளை திசைத் திருப்புவது நமது மத்திய உளவுத்துறைதான். 'IB' ( Intelligence Bureau) இந்த மொத்த விவகாரத்திலும் விசாரணைகளைத் திசைத் திருப்பி அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து, உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டது மத்திய உளவுத்துறைதான். இதில், உண்மையான தீவிரவாத அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ்., வந்தே மாதரம், அபிநவ் பாரத் போன்றவை தப்பித்துக் கொண்டன. இந்த அமைப்புகள், நமது அரசியல் சாசன சட்டத்தை யும், ஜனநாயகத்தையும் தூக்கி வீசுவதை இலக்காகக் கொண்டவை. அந்த இடத்தில் ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை அமைத்திடத் தயாராகி வருகின்றன. (இதனை பிராமிண ராஷ்டிரா எனலாம்)

## இதர வழக்குகளில் 'IB' என்ற மத்திய உளவுத்துறையின் தவறான தகவல்கள்

மத்திய உளவுத்துறை நாம் மேலே குறிப்பிட்ட நான்கு வழக்குகளில் மட்டுந்தான், தவறான தகவல்களைத் தந்தார்கள் என்றில்லை. 2003–க்குப் பின் 2008 வரை உள்ள எல்லா குண்டு வெடிப்புகளிலும் தவறான தகவல்களைத் தந்திருக்கின்றார்கள்.

## மும்பை ரெயில் குண்டுவெடிப்பு 2006

1) குண்டுகள் வெடித்தவுடனேயே இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம்தான் இந்தக் குண்டுவெடிப்பை நடத்தியது என IB என்ற மத்திய உளவுத்துறை கூறியது.

(ஆதாரம் – Afternoon, Mumbai 12th July - 2006)

(நம்முடைய கணிப்பின்படி 2003ஆம் ஆண்டுக்கு முன்னர் நடந்த குண்டுவெடிப்புகள் ஒன்றிலே IB செய்தது அல்லது IBயின் ஏற்பாட்டில் நடந்தது)

2) IB மத்திய உளவுத்துறை விசாரணையை பயங்கர இரகசியமாக நடத்தியது மராட்டிய மாநிலத்தின் 'ATS' தீவிரவாத தடுப்புப் படைத் தலைவர் K.P. இரகுவான்சியைத் தவிர, வேறு யாருக்கும் விசாரணையைப் பற்றித் தெரியாது.

(ஆதாரம் – மராத்தி நாளிதழ், Sakal Pune, 22-July 2006)

(இந்த இரகுவான்சிதான், ஹேமந்த் கர்கரேயை அவர் கொலை செய்யப்பட்ட இடத்திற்கு கொண்டு வந்தவர்)

## அஹ்மதாபாத், சூரத் – வழக்கு 2008

*1) இந்த குண்டுவெடிப்புகளையும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்த வர்கள்தாம் செய்தார்கள் என மத்திய உளவுத் துறை அறிவித்தது. லஷ்கரே, தொய்பா, ஹரக்கத்துல் இஸ்லாமியா என்ற அமைப்புகளெல்லாம் இணைந்து இந்திய முஜாஹிதீன் என்றொரு அமைப்பை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இதற்கான பணம் வெளிநாட்டிலிருந்து வந்திருக் கின்றது. என்றெல்லாம் 'IB' மத்திய உளவுத்துறை எடுத்த எடுப்பிலேயே கதை கட்டிவிட்டது.*

(The Telegraph, Mumbai, 28-July-2008)

*2) குஜராத்தில் 2002ஆம் ஆண்டில் நடந்த இனப்படுகொலைகளுக்கு பின் நடந்த ''தீவிர வாதிகள் கைது'' என்பவையெல்லாம், மத்திய உளவுத்துறை தந்த தகவல்களின் அடிப்படையில் நடந்தவைதாம்.* (TOI- Mumbai, 27-July-2008)

## டெல்லி வெடிகுண்டு வெடிப்பு வழக்கு – 2008

*''இந்த வழக்கின் விசாரணையின்போது, உளவுத்துறையினர் மூன்று கைப்பேசி எண்களைத் தந்தார்கள். 97123 98204, 97145 52899, 97247 64196, இந்த கைப்பேசி எண்களைத்தான் தீவிரவாதிகள் பயன்படுத்தினார்கள் என்றார்கள்.''*

(*ஆதாரம்* – The Chargesheet Filed by the Special Cell of Delhi Police on 27th Feb - 2009)

*2) செப்டம்பர் – 18, 2008ஆம் ஆண்டு மத்திய உளவுத்துறையினர் பின்வரும் தகவலைத் தந்தனர். அத்திப் என்ற பஷீர், இவர் டெல்லியில் வசித்து வருபவர். இவர், 11 நபர்களுடன் அஹமதா பாத் (குஜராத்)இல் ஒரு வீட்டில் வைத்து சில* IED *வகை குண்டுகளைத் தயார் செய்தார். இந்தக் குண்டுகள் அஹமதாபாத்–இல் வெடிக்கச் செய்வதற்காககச் செய்யப்பட்டவை. மேலும் உளவுத்துறைத் தந்த தகவல். இந்த அத்திப் என்ற பஷீர், 12 பேருடன் இரஜதானி எக்ஸ்பிரசில் டெல்லிக்கு ரிஸ்வான் என்பவரையும் அழைத்துக் கொண்டு 26, ஜூலை 2008–இல் வந்து சேர்ந்தார். 19, செப்டம்பர் 2008 இல் குறிப்பிட்ட துல்லியமான தகவல்களின் அடிப்படையில் டெல்லியின் சிறப்புக் காவல் பிரிவு /* NDR - *பாட்லா ஹவுஸ்–இல் அடுக்குமாடி குடியிருப்பு எண். 108 – ஐ நோக்கி விரைந்தது. இங்கு சென்று தன் நோக்கம், கைப்பேசி எண். 981100 4309–ஐ யார் பயன்படுத்துகின்றார்கள் என்பதைக் கண்டு பிடிப்பதற்கு இந்தக் கைப்பேசிக்கும், கைப்பேசி எண் 97123 98204 –க்கும் தொடர்பிருந்ததாகத் தகவல்கள் கிடைத்தன.*



**எஸ்.எம். முஷ்ரிஃப்,** IPS

முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

*இதைத்தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை ஒன்று அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் இருந்தவர்களுக்கும், டெல்லி சிறப்புக் காவல் பிரிவுக்குமிடையே நடந்தது. (ஆதாரம்* – The Charge Sheet, Filed by the Special Cell of Delhi Police on 27th Feb-2009)

*(இங்கே நாம் ஓர் விஷயத்தைக் கவனிப்பது மிகவும் முக்கியம். இந்த இடத்தில் கண்டுபிடிக் கப்பட்ட கைப்பேசி எண். 98908 48720 என்பதைப் பற்றிய விசாரணையை மேற் கொள்ளவே இல்லை. நாம் இந்தக் கைப்பேசி எண்ணை விசாரித்தபோது, மராட்டிய மாநிலம், அவ்ரங்காபாத்க்குப் பக்கத்திலுள்ள ஓர் கிராமத்தைச் சார்ந்தது என்பது தெரியவந்தது.)*

## 2007 உத்திரப்பிரதேச நீதிமன்றத் தொடர் குண்டுவெடிப்புகள்

*1) இந்தக் குண்டுவெடிப்புகள் நடந்த உடனேயே 'ஹூஜி' (ஹரக்கத்துல் முஜாஹிதீன்) என்ற அமைப்பைச் சார்ந்த குரு என்பவர் இந்தத் தாக்குதலை திட்டமிட்டார் என அறிவித்தார்கள் உளவுத்துறையைச் சார்ந்தவர்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்தியவர்கள் லஷ்கரே தொய்பா, ஜெய்ஷே முஹம்மத் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்கள்.*

(*ஆதாரம்* – Times of India, Pune, 25-Nov, 2007)

*2) புலன்விசாரணையை மேற்கொண்ட வர்கள் மத்திய உளவுத்துறை அல்லது எஸ்.டி. எஃப்–ஐ சார்ந்தவர்கள் இன்னும் அதிகமான தகவல்களைத் தருவார்கள் எனக் காத்திருந்தார்கள்.*

(*ஆதாரம்* – The Times of India, Pune, 26-Nov.2007)

*3) மத்திய உளவுத்துறைத் தந்த தகவல்களின் அடிப்படையில், உத்திரப்பிரதேசத்தின் தீவிரவாத*

தடுப்புப்படை, சனிக்கிழமை காலையில் அதாவது, 22 டிசம்பர் 2007 அன்று சந்தேகத் திற்கிடமான இரண்டு தீவிரவாதிகளை பாரா பங்கி ரெயில் நிலையத்தில் கைது செய்தார்கள். (ஆதாரம் – Times of India, Pune, 23-Dec. 2007)

### ஜெய்ப்பூர் குண்டுவெடிப்புகள் 2008

*1) உளவுத்துறை ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள் பங்களாதேஷிலிருந்து கடத்தி வரப்பட்டவை என்றது.* (Times of India, Pune, 15th May 2008)

*2) புலனாய்வோடு சம்மபந்தப்பட்ட அதிகாரிகள், மத்திய உளவுத்துறையிடமிருந்து தகவல் கிடைத்தால் மட்டுமே மேற்கொண்டு விசாரணையைத் தொடர முடியும் என்றார்கள். காரணம், தீவிரவாதிகளின் தொடர்பு தேசிய அளவிலும், சர்வ தேசிய அளவிலும் இருக்கின்றன என்றார்கள்.* (The Milli Gazette 1-15, June 2008)

*இவ்வாறாக தீவிரவாத வழக்குகள் விசாரணை தொடர்பான தகவல்களுக்கு மத்திய உளவுத்துறையையே முழுமையாக சார்ந்திருந்தது மாநில தீவிரவாத விசாரணை முகமைகள். மத்திய உளவுத்துறை தொடர்ச்சியாக தவறான தகவல்களை தந்து கொண்டிருந்தது.*

### பொய் சாட்சியங்களை உருவாக்குவது

*மத்திய உளவுத்துறை, தவறான வழிகாட்டுதல் களை வழங்கியதோடு நிற்கவில்லை. மாநில வட்டார புலனாய்வுக் குழுக்களை சாட்சியங் களையும், தடயங்களையும், திரிக்கவும், திசை திருப்பவும், கட்டாயப்படுத்தியது. மத்திய உளவுத்துறை தங்கள் பக்கம் உறுதியாக நிற்கின்றது என்பதை அறிந்த மாநில புலனாய்வுக் குழுக்கள் சாட்சியங்களையும், தடயங்களையும், மத்திய உளவுத்துறையின் விருப்பத்திற்கிணங்க மாற்றினார்கள், திரித்தார்கள்.*

*இப்படி சாட்சியங்களையும், தடயங்களையும் திசை திருப்பி, பாமர மக்களையும், சில பல நேரங்களில் நீதிமன்றங்களையும் நம்பிட வைத்தார்கள். இதற்காக அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை இப்படிப் பட்டியலிடலாம்.*

### அ) சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைப்பது, பொய் வழக்குகளைப் புனைந்து கைது செய்வது, பின்னர் சித்திரவதைச் செய்து தீவிரவாத வழக்குகளில் வாக்குமூலம் வாங்குவது

*எல்லா குண்டுவெடிப்பு வழக்குகளிலும் காவல்துறையினர் கடைப்பிடித்த வழிமுறை என்னவெனில், முதலில் சில முஸ்லிம்களை அடையாளப்படுத்திக்கொள்வது, குறிப்பாக படித்த முஸ்லிம்களை அடையாளப்படுத்திக் கொள்வது, இப்படி அடையாளப்படுத்தி வழக்கில் சேர்ப்பது என முடிவு செய்து கொள்வது. பின்னர் அவர்களைக் கைது செய்து, சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் பல நாட்கள் வைப்பது, இப்படித்தான் உத்திரப் பிரதேச நீதிமன்ற தொடர் குண்டுவெடிப்புகளில் செய்தார்கள். அதையேதான் ஹைதராபாத், மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்புகளிலும் செய்தார்கள்.*

*அதேபோல் சில படித்த முஸ்லிம் இளைஞர்களை அடையாளப்படுத்திக் கொண்டு அவர்களைப் பொய்யான இட்டுக்கட்டப்பட்ட வழக்குகளைக் காட்டி கைது செய்வது, பின்னர் சித்திரவதைச் செய்து வாக்குமூலங்களை வாங்கிக் கொண்டு குண்டுவெடிப்பு வழக்கு களில் இணைப்பது. இதுதான் மாலேகான் குண்டுவெடிப்பு 2006 வழக்கில் செய்தார்கள். இதுதான் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு 2007 இலும் நடந்தது. இதேதான் ஜெர்மன் பேக்கரி குண்டுவெடிப்பு 2010இலும் இன்னும் சில குண்டுவெடிப்புகளிலும், நடந்தது. அதன்பின்னர் இதர சாட்சியங்களைத் தயார் செய்வார்கள். இவற்றைக் கொண்டு அவர்களை முஸ்லிம் இளைஞர்களை அடித்துத் துவைத்து வாங்கிய ஒப்புதல் வாக்குமூலங்களை உண்மைப்படுத்து வார்கள்.*

### (ஆ) தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குப் பயணம் செய்தார்கள் – தீவிரவாத பயிற்சிக்காக என்பது புலனாய்வு செய்யும் அதிகாரிகளின் வழக்கமான கற்பனை கதைகள்

*இதில் மத்திய உளவுத்துறையின் கற்பனைக்கு அளவே இல்லை. அடிக்கடி பாகிஸ்தானுக்கு முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதப் பயிற்சி களுக்காகப் பயணம் செய்தார்கள் என கதை கட்டி விடுவார்கள்.*

*1) பாஸ்போர்ட்–ஐ பயன்படுத்தி பாகிஸ்தான் சென்று வந்தார்கள் எனக் கதை கட்டுவார்கள். அத்தோடு பயிற்சி காலம் முடிந்த வுடன் பாஸ்போர்ட்–ஐ கிழித்தெறிந்துவிட்டு இரகசிய வழிகளின் வழி வந்துவிட்டதாகக்*


கூறுவார்கள். இதில் சாதுர்யமாக வாகா எல்லையைக் கடந்ததாகக் கூறுவார்கள். அல்லது துபாய் சென்று அங்கிருந்து நேப்பாளம் சென்று அங்கிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவி விட்டார்கள் எனக் கூறுவார்கள். இந்தக் கற்பனையைத்தான் 2006 மாலேகான் குண்டுவெடிப்பில் கட்டவிழ்த்துவிட்டார்கள். மும்பை புறநகர் ரெயில் குண்டு வெடிப்பு 2006–இல் இப்படித்தான் கதைக் கட்டினார்கள்.


2) அவர் ஒரு பாஸ்போர்ட் உடன் ஹஜ்ஜுக்கு அல்லது உம்ராவுக்கு தெஹ்ரானுக்கு ஜியாரத்துக்குப் போய் வந்திருந்தால், இதற்கான ஆவணங்கள் இருந்தால் உளவுத்துறையின் கற்பனை இப்படிப் பறக்கும். முதலில் ஜித்தாவுக்கும், பின்னர் தெஹ்ரானுக்கும் உண்மையான இந்திய பாஸ்போர்ட்டில் தான் சென்றார். பின்னர் திருட்டுத்தனமாக பாகிஸ்தானுக்குச் சென்றார். அங்கே வயிறு நிறைய தீவிரவாதப் பயிற்சியை எடுத்தார். இந்திய பாஸ்போர்ட்–ஐ தடந்தெரியாமலாக்கினார். பின்னர் இந்தியாவுக்குள் போலி பாகிஸ்தான் பாஸ்போர்ட்டில் வந்தார். அதுவும் நேப்பாள் வழியாகத்தான் வந்தார். இந்தக் கதையைத்தான் மும்பை புறநகர் ரெயில் குண்டுவெடிப்பில் கட்டிவிட்டார்கள்.

3) அவர் திருட்டுத்தனமாக வங்காளதேஷ்க்குள் நுழைந்தார். அங்கிருந்து அவர் பாகிஸ்தானுக்குள் நுழைந்தார். அங்கு தீவிரவாத பயிற்சிகள் அனைத்தையும் முடித்தார். பின்னர் அங்கிருந்து பாகிஸ்தான் பாஸ்போர்ட் ஒன்றைப் பயன்படுத்தி நேப்பாள் வந்தார். பின்னர், நேப்பாளிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தார். இப்படித்தான் IB என்ற மத்தியப் புலனாய்வுத் துறை கதைக் கட்டும். மும்பைப் புறநகர் ரெயில் குண்டுவெடிப்பு 2006, டெல்லி குண்டுவெடிப்பு 2008 ஆகியவற்றில் இதுதான் கதை.

சுருக்கமாகச் சொன்னால் ‘காவல்துறையும், 'IB' என்ற மத்திய உளவுத் துறையும், யாரையும் (கற்பனையில்) பாகிஸ்தானுக்கு அனுப்பி விடுவார்கள். அவர்களுக்குத் தீவிரவாதப் பயிற்சிகளை வழங்கி விடுவார்கள்.

தொடரும்...



ஆங்கிலம் : JOHN FEFFER

தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




# மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற இஸ்லாத்திற்கெதிரான போர்

ஜான் பெஃபர் தொடர்ந்து கூறுகிறார்:

**அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கைகள், பட்டவர்த்தனமான இஸ்லாமிய வெறுப்பையும், முஸ்லிம்கள் மீதுள்ள காழ்ப்பையும், வெளிப்படையாகவே காட்டிவிட்டன. அதனால், அவர்களை முஸ்லிம்களை சமாதானப்படுத்திட மேற்கொண்ட முயற்சிகள் பெரிய அளவில் வெற்றிகளைத் தந்திடவில்லை.**

சாதாரணமாக அமெரிக்கா ஊடகத் திரிப்பு வழியாக முஸ்லிம்களைத் திருப்திபடுத்தி வந்தது. ஆனால் இஸ்லாமோபோஃபியா என்ற இஸ்லாமிய வெறுப்பின் நாள்களில் இந்த வெறுப்பு பெரிதாக வெற்றிகளைத் தந்திடவில்லை.

அதாவது மக்களுக்குப் பயன் தந்திடாத ஒரு பொருளை மிகையான விளம்பரங்கள் வழி அவர்கள்மீது திணிப்பது, சிலகாலம், அப்பொருளை விற்பனை செய்திட உதவலாம். ஆனால் நிச்சயமாக அந்தப் பொருளை நிரந்தரமாக விற்றிட இயலாது. ஒரு காலக்கட்டத்திற்குப் பின் உண்மை வெளிப்படும். அந்தப் பொருளின் விற்பனை அடியோடு நின்றுபோகும். இதேபோல் செயலில் முஸ்லிம்களை தாக்கவும், தகர்க்கவும் செய்துவிட்டு விளம்பரங்கள் மூலம் இந்தக் குரூரங்களை மறைக்க முயல்வதும் அதேபோல்தான்.

உலகெங்கிலும் அதிகமான இஸ்லாமிய இயக்கங்களையும், சேவைகள் செய்யும் அமைப்புகளையும் அழித்துவிட்டு, அவற்றை தீவிரவாத அமைப்புகள் என முத்திரைக் குத்திட மேற்கொண்ட முயற்சிகளும் தோற்றுப் போய்விட்டன. காலப்போக்கில் அமெரிக்காவின் முயற்சிகள், குறிப்பாக ஜார்ஜ் புஷ் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி. மொத்தத்தில் அமெரிக்காவால் முஸ்லிம்களின் இதயத்தை வென்றிட இயலவில்லை.

முஸ்லிம்களை அழிக்க அவர்களிடையே ஆபாச வாழ்க்கையை அறிமுகப்படுத்தி ஆபாச மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அத்தோடு இசையையும் உலகில் இருப்பவற்றையெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையையும் உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை ஓரளவுக்கு வெற்றியைத் தந்தன. ஆனால், இவற்றிலிருந்து முஸ்லிம்களை விடுவித்து, அவர்களை மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் கொண்டு செல்லும், இயக்கங்கள் உருவாகின. இதுபோன்ற இயக்கங்களுக்கு ஒருபோதும்

இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் பஞ்சமாக இருக்கவில்லை. முஸ்லிம்களை மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் மீட்டனர். நாம் இதற்கெதிராக வேலை செய்தோம். அதனை "Deradicalization" தீவிரவாத சிந்தனை யிலிருந்து மீட்பது எனப் பெயர் வைத்தோம், அதுவும் தொடருகின்றது.

முஸ்லிம்களை சமாதானப்படுத்திட மேற்கண்ட மழுப்பல் நடவடிக்கைகள் எடுபடவில்லை என்பது மட்டுமல்ல, எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தின.

உண்மையைச் சொன்னால், அமெரிக்கா வுக்குள் வாழ்ந்த முஸ்லிம்களின் இதயங் களையே வெல்லவே முடியவில்லை.

> **“முதல் உலகப்போரின் முடிவில் முஸ்லிம்கள் தங்களின் உலகத் தலைமையை கிலாபத் (1924இல்) இழந்தார்கள். அவர்கள் ஒருபெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். தங்களை ஒருமுகப்படுத்திக்கொள்வதில் மிகவும் சிக்கல்களுக்கு உள்ளானார்கள். பிளவுகள், கருத்து வேறுபாடுகள், இவை முஸ்லிம் சமுதாயத்திற்குள் அதிகமாயின.**
>
> **இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் சபை, முஸ்லிம்களுக்குச் சொந்தமான பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிளந்து இஸ்ரேல் என்றொரு நாட்டை உருவாக்கியது, 1948இல் அன்று முதல் இஸ்லாத்தின் மார்பிடங்கள் அனைத்தும் அலைக்கழிந்தே வருகின்றன. (இதனை அமெரிக்காவில் 21ஆம் நூற்றின் Neoscars முஸ்லிம்களின் பீதி என்பார்கள்.)”**

இந்தக் காயங்களிலிருந்து முஸ்லிம்கள் இன்னும், இன்றும் வெளிவந்துவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அமெரிக்காவும் இதர நாடுகளும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளும் முஸ்லிம்களை “தாஜா” பண்ணிட எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றி பெறுவதில்லை.

ஆனால் காலப்போக்கில் அமெரிக்காவின் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் இன்னும் அதிகமாயின.

*9/11*-ஐ தொடர்ந்து அல்லது *9/11 2001*-இன் பின்னாளில் அக்டோபர்-*26,2001*இல் கொண்டு வரப்பட்ட USA Pariot Act என்ற அமெரிக்க நாட்டுப்பற்று சட்டம், ஒரு பெரும் இடியாகவே முஸ்லிம்களின் மீது இறங்கியது. இந்தச் சட்டத்தின் பார்வையில் எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் அமெரிக்க உளவுத்துறைகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களைத் தவிர.

இந்தப் (பேட்டிரியாட்) தேசப் பக்தி சட்டத்தை தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்றும் கூறினார்கள்.

எதிலிருந்து தேசத்தைப் பாதுகாக்கின்றீர்கள்? என்றால், தீவிரவாதத்திலிருந்து என்றார்கள். எந்தத் தீவிரவாதிகளிடமிருந்து? என்றால் முஸ்லிம் தீவிரவாதிகளிடமிருந்து என்றார்கள். இப்படிக் கூறி முஸ்லிம்கள் அனைவரையும் கடுமையான கண்காணிப்பின்கீழ் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய பொதுவான உரிமைகள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன.

சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு முஸ்லிமும் நான் ஒரு தீவிரவாதி அல்ல என நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக் கப்பட்டார்கள். சட்டம் எல்லா குடி மக்களுக்குந்தான் என அறியப்பட்டாலும், அமெரிக்காவில் குடிமக்களாக வாழ்ந்த முஸ்லிம்களும், அரபுக்களும் (அரபு நாடுகளைச் சார்ந்த அமெரிக்க குடிமக்களும்தான் இலக்கு. இந்த அரபு முஸ்லிம்களை Arab Americans அரபு அமெரிக்கர்கள் என அழைப்பார்கள்.

இவர்கள் அரபு நாடுகளிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியுரிமைப் பெற்றவர்கள்.

இவர்களில்

**– 5000 பேர் சிறையிலடைக்கப்பட்டார்கள்.**

**– 80,000 பேர் கைரேகை அடையாளங்கள் வைக்க கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அடிக்கடி காவல் நிலையங்களுக்கு வர வைக்கப்பட்டார்கள்.**

**– அமெரிக்காவின் பெரிய வியாபார நிறுவனங்கள் 30,000க்கு சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன.**

அந்த நிறுவனங்கள் தங்களிடம் பொருள் வாங்கிடும் அனைத்து முஸ்லிம் வாடிக்கை யாளர்களின் பெயர்களையும் உடனேயே உளவுத்துறைக்குத் தந்திட வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கைகள் கட்டாயப்படுத்தின. அந்த சுற்றறிக்கைகளுக்கு National Security Letters தேசிய பாதுகாப்பு கடிதங்கள் என்று பெயர். அத்தோடு குடிமக்களின் தொலை பேசிகள் அனைத்தும் ஒட்டுக் கேட்கப்பட்டன.

ஹிபியஸ் கார்ப்பஸ் என்ற "ஆட்கொணர்" சட்டங்களும் அவை தரும் நிவாரணங்களும் இவர்களுக்கு இல்லை என்றாக்கினார்கள்.

அதாவது இளைஞர்களை காவல்துறை யினர் பிடித்துச் சென்றால், அதுகுறித்து குடும்பத்தினருக்கு தகவல் தந்திட வேண்டும். அப்படி தகவல் எதுவும் தரவில்லை என்றால் அந்த நபர் உயிருடன் இருக்கின்றார் என்பதை நிரூபிக்கும் அளவில் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திட வேண்டும் எனக்கோரி நீதிமன்றத்தைக் கோரிடும் மனுதான் Hebeas Corpus ஹிபியஸ் கார்ப்பஸ் என்ற ஆட்கொணர் மனு.

இப்படி ஒரு மனுவைச் சமர்ப்பிக்கும் உரிமை குடிமக்களுக்கு (முஸ்லிம்களுக்கில்லை என்றாக்கினார்கள்) இப்படி திடீர் திடீர் என காணாமலாக்கப்பட்ட இளைஞர்கள் சிறப்பு சித்திரவதைக் கூடங்களில் வைத்துச் சித்திர வதைச் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய வாழும் உரிமைகள் பறிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான இமாம்கள், கைது செய்யப்பட்டார்கள். காரணமில்லாமல் சிறையிலடைக்கப்பட்டார்கள். நாடு கடத்தப்பட்டார்கள். மஸ்ஜித்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் ஏற்கெனவே அமெரிக்கர்களின் மனதில் புதைந்துக்கிடந்த வெறுப்புகளையே வெளிக்காட்டின.

(இதுபோன்றதொரு சூழல் இந்தியாவிலும் 2001 முதல் நடந்தது என்பதை நமது வாசகர்கள் நன்றாக அறிவார்கள். இந்தியாவில் நடந்தனவற்றை வேர்கள் பதிப்பகத்தின் இரண்டு நூல்கள் தெளிவுபடுத்தும்.)

1. **இந்தியாவின் இரகசிய சித்திரவதைக் கூடங்கள்**
2. **பத்திரிகை துறையும் முஸ்லிம்களும்**

- இன்ஷாஅல்லாஹ் தொடரும்.

- MGM

## நூல் அன்பளிப்பு - கூரியூர் ஜின்னா ஷஹீத் மாதம்





கோவை மாவட்டம், போத்தனூரில் 13-04-2026 அன்று சகோதர சமுதாயத்தினர்களுக்கு "கூரியூர் முஹம்மது அலி ஜின்னா ஷஹீத்" அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இமாம் வி.ஹி.முஹம்மது ஜஹீர், S.யாசர் அரஃபாத் மற்றும் ஹாரிஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

செய்தி : உமர் ஃபாருக்

- அன்பகம் தாஃவா குழு & வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் - கோவை மாவட்டம்

- செல் : 8220677704, 9786214186

# நினைவாற்றலை அதிகரிக்கும் உணவுகள்



கீழ்க்காணும் உணவு வகைகள் பல ஆராய்ச்சிகளுக்கும் பின்பு நினைவாற்றலை அதிகரிக்கும் தன்மை உடையவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் நமக்குத் தெரிந்த உணவு வகைகள்தானே என்று அலட்சியப்படுத்த வேண்டாம். நினைவாற்றலை அதிகரிக்கும் சத்துகள் இவற்றில் அடங்கியுள்ளன.

இந்த உணவுகளில் ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைத் தினசரி நாம் உண்ணும் உணவில்இருக்குமாறுபார்த்துக்கொண்டால், எதிர்பார்த்த பலன் நிச்சயம் கிடைக்கும்.

■ பசலைக்கீரையில் ஃபோலிக் அமிலம் நிறைய உள்ளது

■ ஸ்ட்ராபெர்ரி மற்றும் ப்ளூ பெர்ரி பழ வகைகளில் ஆன்டி ஆக்ஸிடன்ட் அதிகம்

■ ஆப்பிளில் குவார்செட்டின் (Quercetin) என்னும் சத்து நினைவாற்றலை மேம்படுத்தும் முக்கியமான ஊட்டச்சத்து ஆப்பிளைப் போலவே வெங்காயத்திலும் க்வார்சிடின் உள்ளது. கூடுதலாக அந்தோசயானின் (Anthocyanin) என்கிற பொக்கிஷத்தையும் வெங்காயம் வைத்திருக்கிறது.

■ மீன் வகைகள் ஞாபக சக்தியை மேம்படுத்தக் கூடியவை. குறிப்பாக, டுனா என்கிற மீன் வகைகளில் ஒமேகா என்னும் சத்து அபரிமிதமாக இருக்கிறது

எண்ணெயும் இதில் முக்கிய இடம் பிடிக்கிறது. மீன் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் மற்றும் லவங்கப்பட்டை எண்ணெய் போன்றவற்றை அளவறிந்து பயன்படுத்துங்கள்

■ முட்டையின்மஞ்சள்கருவில்கொழுப்பு அதிகம் என்று பலர் சொன்னாலும், நம் மூளைக்கு அந்த மஞ்சள் கரு மிகவும் உகந்தது.

■ சர்க்கரை வள்ளிக் கிழங்கில் இருக்கும் வைட்டமின் பி6, வைட்டமின் சி மற்றும் பீட்டா கரோட்டின் ஆகியவற்றுக்கு மறதியை விரட்டும் வல்லமை உண்டு.

■ ராஜ்மாவில் உள்ள தையமின் என்கிற வைட்டமினும் நமக்குத் தேவை.

■ உலர்ந்த திராட்சையானது இரும்புச் சத்து, பி. காம்ப்ளக்ஸ், ஃபோலிக் ஆசிட், கால்சியம் மற்றும் மக்னீஷியம் போன்றவற்றைக் கொண்டது.

■ வாழைப்பழத்தில் பொட்டாசியம் நிறைந்திருப்பதைப் பலரும் அறிவீர்கள்.

■ கீரின் டீயானது வயதான பின் வரும் ஞாபக மறதி மற்றும் நரம்பு சார்ந்த நோய்களைத் தடுக்கிறது.

■ முளைக்கட்டிய கோதுமையில் ஞாபக சக்தியை அதிகரிக்கும் வைட்டமின் ஈ மற்றும் செலினியம் சுத்துகள் உண்டு.

■ காபி, பட்டை, லவங்கம், ஏலக்காய், பூண்டு, வல்லாரைக் கீரை, வால்நட் போன்றவையும் நினைவாற்றலை மேம்படுத்த உதவுகின்றன. • – நன்றி முதுமை எனும் பூங்காற்று



# ஈறுகளில் ரத்தம் கசிகிறதா? ஈறு வலிக்கிறதா? இதை எப்படி சரி செய்வது?

**மருத்துவர் ஆர்.முரளி கார்த்திக்**
**பல் மருத்துவர், சென்னை**

பல் ஈறுநோய் (Periodontitis) அல்லது பற்புறத்திசு நோய் என்பது நீண்டகால வாய்வழிச் சுகாதாரமின்மை காரணமாகப் பற்களைச் சுற்றியுள்ள ஈறுகளில் ஏற்படும் நோய்த்தொற்று ஆகும்.

**அறிகுறிகள்**

■ பற்கள் மஞ்சள் நிறத்தில் தோன்றுதல்.

■ பல் விளிம்புகள் மீது கடினமாவதால் பிளேக் (plaque) வளர்ச்சி.

■ தொடர்ந்து துர்நாற்றம்.

■ ரத்தக்கசிவு அல்லது ஈறுகளில் வலி பல் ஈறு திசுக்கள் கீழிறங்குதல் தளர்வான பற்கள்.

**காரணங்கள்**

■ வாய் சுத்தக் குறைபாடு.

■ சர்க்கரை நோயினால் பாதிக்கப் பட்டவர்கள்.

■ புகையிலை பயன்படுத்துபவர்கள்.

■ ஹார்மோன் சமநிலையின்மை மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றால் கூட ஏற்படலாம்

**இதன் முக்கியச் செயல்பாடுகள்**

■ வாய்சுத்தக்குறைபாட்டினால், பல் ஈறுநோய் தூண்டப்படுகிறது. இது பாக்டீரியாவின் பல் விளிம்புகளில்

■ பிளேக் உருவாக காரணமாகிறது.

■ சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், இந்த பிளேக் பற்களில் கறையை ஏற்படுத்துகிறது (plaque formation). இதைப் பற்கறை என்று கூறலாம்.

■ பிறகு ஈறுகளில் ரத்தக்கசிவு ஏற்படுகிறது (Gingivitis) இதைச் சரிசெய்யாவிட்டால் ஈறுகளில் தொற்று ஏற்படுகிறது.

■ இது பல் ஈறுத் திசுப் பற்களில் குழிகளை உருவாக்குகிறது (Early periodontitis).

■ பின்பு நாளடைவில் ஈறு மற்றும் எலும்பு நோயாக மாறிவிடுகிறது (Chronic periodontitis).

**சிகிச்சை முறைகள்**

■ (Chronic periodontitis) - ஆழமான சுத்தம்

■ Early periodontitis - பற்குழிகளைச் சுத்தம் செய்தல்

■ Chronic periodontitis - மடல் ஈறு சிகிச்சை/ லேசர் ஈறு சிகிச்சை

**தடுக்கும் வழிமுறைகள்**

■ ஒவ்வொரு முறை உணவு உண்ட பிறகும் பற்களைத் தண்ணீரால், சுத்தம் செய்வது மற்றும் வாய் கொப்பளித்தல் அவசியம்.

■ அன்றாடம் பல் துலக்குதல்

■ வருடத்திற்கு இரண்டுமுறை அல்லது குறைந்தபட்சம் ஒருமுறையாவது பல் மருத்துவரிடம் பல் சென்று பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

# மே-1 தொழிலாளர் தினம்

**மே-1 இந்தியா உட்பட பல நாடுகளில் தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.**

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தொழில் வளர்ச்சி அடைந்து வந்த காலங்களில் 12 முதல் 16 மணி நேரங்கள் வேலை செய்தாக வேண்டிய கட்டாயம் இருந்தது. ஊதியம் மிகவும் குறைவு. பெண்களும் குழந்தைகளும் வேலை செய்தே ஆக வேண்டிய கட்டாயம் விடுப்பு கிடையாது. இதனால் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதை எதிர்த்து ஆங்காங்கே குரல்கள் எழும்ப தொடங்கியது. அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் 1886 மே-1 ல் தொழிலாளர்கள் பெரிய அளவில் போராட்டம் தொடங்கினர்.

மே-4, 1886: ஹெய்மார்கெட் சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் குண்டு வெடிப்பு ஏற்பட்டது. போலீஸாரும் போராட்டக்காரர்களும் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொழிலாளர் இயக்கத்தில் மிகப்பெரிய திருப்பமாக அமைந்தது. 1889: பாரிசில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் மே 1-ஐ தொழிலாளர் தினமாக அறிவித்தனர்.

அதன்பிறகு பல நாடுகள் இதை ஆண்டு தோறும் கொண்டாட ஆரம்பித்தன.

1923: தமிழ்நாட்டில் (சென்னை) முதன் முறையாக மே தினம் கொண்டாடப்பட்டது.

இது சிங்காரவேலர் தலைமையில் நடைபெற்றது. இந்த போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றது அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் தான். காரணம் தொழிலாளர்களை சக மனிதர்களாக மதிக்கும் எண்ணம் அங்குள்ள முதலாளிகளிடம் இல்லை. அவர்கள் பின்பற்றி வந்த மதங்களிலும் தெளிவான வழிகாட்டல்கள் இல்லை. இதுபோன்ற போராட்டங்கள் இஸ்லாம் ஆண்ட இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பகுதிகளில் இல்லை. காரணம் இஸ்லாம் வழங்கிய தொழிலாளர்களின் உரிமைகள். தொழிலாளர்கள் எப்படி நடத்த பட வேண்டும் என்ற வழிகாட்டல்கள் உரிமைகளை பெற்று தந்ததோடு முதலாளி தொழிலாளர் மோதல்களையும் இல்லாமலாக்கியது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

தொழிலாளர்கள் வியர்வை உலருவதற்கு முன் அவர்களின் கூலியை கொடுத்து விடுங்கள் என்று. (இப்னு மாஜா 2443) இது வெறுமனே கூலியை மட்டும் அல்லாமல் பல செய்திகளை சொல்லுகிறது. தொழிலாளர்கள் எந்த அளவுக்கு உழைத்து உள்ளார்கள் என்பது அவர்களின் வியர்வை காய்வதற்கு முன் தான் தெரியும். அமெரிக்கா ஐரோப்பா போல் தொழிலாளிகளை வஞ்சிக்காமல் சரியான ஊதியம் வழங்கப்பட்டு விடும். ஊதியம் தாமதப்படுத்தப்படாமலும் உடனே வழங்க பட்டு விடும். தொழிலாளியை ஏமாற்றுவது மிகப்பெரிய பாவமாக இஸ்லாம் கூறுகிறது. அப்படி பட்டவர்களுக்கு எதிராக அல்லாஹ்வே இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'மறுமை நாளில் மூவருக்கெதிராக நான் வழக்காடுவேன்' என்று அல்லாஹ் கூறினான்.

ஒருவன் என் பெயரால் சத்தியம் செய்து விட்டு, அதில் மோசடி செய்தவன்; இன்னொருவன் சுதந்திரமான ஒருவரை விற்று அந்தக் கிரயத்தைச் சாப்பிட்டவன்; மூன்றாமவன் ஒரு கூலியாளிடம் வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடுக்காமல் இருந்தவன்!' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். புஹாரி 2227.

*தொழிலாளியை சமமாக நடத்த சொல்லும் முஹம்மது நபிகள் (ஸல்). நாங்கள் ரபதாவில் அபூ தர்ர் (ரழி) அவர்களைக் கடந்து சென்றோம். அவர்கள் மீது ஒரு மேலாடை இருந்தது; மேலும் அவர்களுடைய அடிமை மீதும் அதுபோன்ற ஒன்று இருந்தது. நாங்கள், "அபூ தர்ர் அவர்களே! நீங்கள் அவ்விரண்டையும் சேர்த்திருந்தால், அது ஒரு முழுமையான ஆடையாக ஆகியிருக்குமே?" என்று கேட்டோம்.

அதற்கு அவர்கள் கூறினார்கள்: "எனக்கும் என்னுடைய சகோதரர்களில் ஒருவருக்கும் இடையில் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. அவருடைய தாயார் அரபி அல்லாதவர். நான் அவருடைய தாயைக் குறித்து அவரை இழிவாகப் பேசினேன். அவர் எனக்கெதிராக நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார். நான் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள், 'அபூ தர்ரே! உம்மிடம் அறியாமைக் காலத்தின் பண்பு உள்ளது' என்று கூறினார்கள்."

நான், "அல்லாஹ்வின் தூதரே (ஸல்)!

யார் (மற்ற) மனிதர்களைத் திட்டுகிறாரோ,

அவர்கள் (பதிலுக்கு) அவருடைய தந்தையையும் தாயாரையும் திட்டுகிறார்கள்" என்று கூறினேன்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"அபூ தர்ரே! உம்மிடம் அறியாமைக் காலத்தின் பண்பு உள்ளது. அவர்கள் உங்கள் சகோதரர்கள்; அல்லாஹ் அவர்களை உங்கள் அதிகாரத்திற்குக்கீழ் வைத்திருக்கிறான்.

ஆகவே, நீங்கள் உண்பதிலிருந்தே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவதைப் போன்றே அவர்களுக்கும் உடுத்தக் கொடுங்கள். அவர்களுடைய சக்திக்கு மீறிய வேலைகளை அவர்கள் மீது சுமத்தாதீர்கள்; அவ்வாறு நீங்கள் அவர்கள் மீது (வேலையைச்) சுமத்தினால், அவர்களுக்கு உதவுங்கள்." (சஹீஹ் முஸ்லிம் 1661) என்ன ஒரு சமத்துவம் என்ன ஒரு உன்னதமான வழிகாட்டல்கள். இஸ்லாம் தொழிலாளர்களுக்கு:

உடனடி கூலி வழங்க சொல்கிறது ஏமாற்றமில்லாத நியாயமான ஊதியம் கொடுக்க சொல்கிறது.

மரியாதை மற்றும் சகோதரத்துவம் அதிக சுமை இல்லாத வேலை தர சொல்கிறது. ஊதியம் குறித்து தெளிவான ஒப்பந்தம் போட சொல்கிறது. மொத்தத்தில், இஸ்லாம் தொழிலாளரை ஒரு வேலைக்காரனாக அல்ல ஒரு மனிதராக மதிக்கிறது.

## நூல் அன்பளிப்பு



**கோவை மாவட்டம் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக 3-4-2026 அன்று இறுதி வேதம் திருக்குர்ஆன் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.**

**எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே!**

**அதிகமதிகமாக தாஃவா பணியினை மேற்கொள்ள துவா செய்யுங்கள்.**

*1944*ஆம் ஆண்டு இன்று, Colonel S. A. Malik தலைமையில் செயல்பட்ட Indian National Army, இந்திய நிலப்பரப்பின் ஒரு பகுதியை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து கைப்பற்றிய தினமாகும்.

*1944* ஏப்ரல் *14* அன்று, Shaukat Ali Malik தலைமையிலான இந்திய தேசிய படை, Burma எல்லைப்பகுதியிலிருந்து பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தியது. அவர்கள் Moirang என்ற இடத்தை கைப்பற்றினர். இது Manipur மாநிலத்தில், அப்போது பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி. அங்கு இந்திய தேசியக் கொடியை அவர்கள் பெருமையுடன் ஏற்றினர். இந்த நடவடிக்கையின் விளைவாக சுமார் பதினொன்று சதுர மைல் பரப்பளவு Provisional Government of Free India கட்டுப்பாட்டிற்குள் வந்தது.



இந்த வரலாற்றுச் சம்பவத்தை நினைவு கூர்ந்து, இன்று (ஏப்ரல் *14)* Moirang பகுதியில் மக்கள், Colonel S. M. Malik அவர்கள் காட்டிய தைரியத்தையும் வீரத்தையும் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வின் போது, Subhas Chandra Bose அவருக்கு “Sardar-e-Jang” என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

ஆதாரம்: The Immortals, Syed Naseer Ahamed, 2014

மொபைல்: *9440241727*




# திருக்குர்ஆனும் மருத்துவமும்

**பகுதி - 1**

**திருக்குர்ஆனில் காது அக்குபஞ்சர் சிகிச்சை :**

**பிரைட் நேச்சுரல் ஹெல்த்கேர் மற்றும் யோகா ரிசர்ச் பவுண்டேசன் சார்பில் அக்குபஞ்சர் பல்கலைகழக பட்டய சான்றிதழ் வழங்கும் விழாவில் "திருக்குர்ஆனும் மருத்துவமும்" பற்றிய என் சிறப்பு சொற்பொழிவின் சாரம்சம்**

அக்குபஞ்சர் மருத்துவத்தில் மிகவும் நவீனமானதும், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது மான - காது, அக்குபஞ்சர் (Auriculotherapy) சிறந்த சிகிச்சை பலன்தருவதாக கருதப்படுகிறது. காது அக்குபஞ்சரின் மருத்துவ குணத்தைப்பற்றி திருக்குர்ஆன் அன்று எடுத்துச் சொல்லியிருப்பது, உலகிற்கு வியப்பான ஒன்று என்பதை எந்த அக்குபஞ்சர் நிபுணர்களும் மறுக்கவே முடியாது.

நமது காதில் டிரையாங்குலர் போஸ்ஸா (Triangular Fossa) என்னும் பகுதியில் உள்ள ஷன்மேன் (Shenmen) அக்குபஞ்சர் புள்ளி, தூக்கத்தை வரவழைப்பதற்கும், தூக்கத்தில் விழிக்கும் தொந்தரவு இல்லாமல் தூங்கச் செய்வதற்கும் சிகிச்சை செய்யப் பயன்படுகிறது.

தூக்கமே வராத நோயுள்ளவர்களைக்கூட தூங்க வைத்து விடுகிறது என்பது உண்மை. தற்காலத்தில் அக்குபஞ்சர் மூலம் வலியற்ற உணர்வு நிலையை ஏற்படுத்தி மிக அற்புதமாக அறுவை சிகிச்சை கூட செய்து விடுகிறார்கள்

நமது காதில் ஆன்ட்டிராகஸ் (Antitragus) என்னுமிடத்தில் உள்ள சப்-கார்டெக்ஸ் (Sub-cortex) என்னும் பகுதியில் அமைந்துள்ள அக்குபஞ்சர் புள்ளி மனதை மயக்கத்தில் ஆழ்த்தி தூக்க நிலைக்குக் கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த அக்குபஞ்சர் புள்ளி என தற்காலத்தில் நிருபித்திருக்கிறார்கள்.

திருக்குர்ஆன், காதில் தூக்கக் கட்டுப்பாட்டு மையங்கள் இருக்கிறது. என்பதை சுட்டிக்காட்டியிருப்பது தற்கால நவீன அக்குபஞ்சர் மருத்துவத்திற்கு மேலும் பெருமைச் சேர்க்கிறது.

நவீன காதுஅக்குபஞ்சர் மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் டாக்டர் பால் நோஜர் (Paul Nogier) என்ற பிரான்ஸ் நாட்டுக்காரர் நமது காதுகளில் மட்டும் 200 அக்குபஞ்சர் புள்ளிகள் இருக்கிறது என்று கண்டுபிடித்து நிருபித்துக் காட்டினார்.

குறிப்பாகத் தூக்கத்தைக் கொடுக்ககூடிய புள்ளி "ஷென்மென்"

(Shenmen) இந்த புள்ளிக்கு தூக்கத்தை உண்டு பண்ணவும், வலியை போக்கவும் அபாரசக்தி உள்ளது. மனிதனை அதிக உறக்கத்தில் ஆழ்த்தும் இந்த புள்ளி நமதுகாதில் அமைந்துள்ளது.

குகைத்தோழர்கள் 7 பேருடன் அவர்களுடைய நாயும் ஜோர்டான் நாட்டு குகையில் 300 வருடங்கள் தூங்குவதற்கு இறைவன் அவர்களுடைய காதுகளைத் தட்டிக் கொடுத்தோம் என்று கூறுகிறான்.

"ஆதலால், அக்குகையில் பல வருடங்கள் (நித்திரை செய்யும்படி) அவர்களுடைய காது களைத்தட்டிக்கொடுத்தோம். (குர்ஆன்-18:11)

அவர்கள் குகையில் (சூரிய கணக்கின்படி) முன்னூறு ஆண்டுகள் தங்கி இருந்தனர், (சந்திர கணக்கின்படி 309 ஆண்டுகள் தங்கி இருந்தனர்.) மேலும் (சிலர்) ஒன்பது ஆண்டுகளை அதிகப்படுத்தினர். (குர்ஆன்-18:25)

"காதுகளைத் தட்டிக்கொடுத்தோம்" என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதை நிருபித்துக்காட்டி நம்மை வியப்பில் ஆழ்த்து கிறது. உடல்எடை குறைப்பதில் இருந்து குடிப்பழக்கம் வரை அனைத்து நோய்களையும் காது அக்குபஞ்சர் செய்வதன்மூலம் குணப் படுத்த முடியும்

**பகுதி-2**

அய்யூப் (அலை) அவர்களின் நோய் குணமான நிகழ்வு, குர்ஆன் மற்றும் ஹதீஸ் களின்படி அல்லாஹ்வின் கட்டளையின் பேரில், ஒரு அற்புத நீரூற்றின் (Spring of Water) மூலமே நிகழ்ந்தது. இது நேரடியாக அக்குபஞ்சர் சிகிச்சை என்று குறிப்பிடப்படவில்லை.

இருப்பினும், சில விளக்கவுரைகள் மற்றும் நவீன ஆன்மீக/மாற்று மருத்துவ பார்வைகளில், இந்த நிகழ்வு எவ்வாறு விவரிக்கப்படுகிறது என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ளது:


குர்ஆன் கூறும் உண்மையான நிகழ்வு (ஸூரா ஸாத் 38:42):

அய்யூப் (அலை) அவர்கள் நீண்ட காலம் கடும் நோயால் (சிரங்கு, தோல் நோய்) பாதிக்கப் பட்டிருந்தனர்.

அய்யூப் (அலை) அவர்கள் 7 அல்லது 18 ஆண்டுகள் கடுமையான சோதனைகளுக்குப் பின், இறைவனிடம் பிரார்த்தனை செய்த போது, இந்த அற்புத நிவாரணம் கிடைத்தது.

அவரது உடல் நோயின்றி ஒரு பகுதியு மில்லை எனும் அளவுக்கு சீழ் வடிந்த நிலையில், இந்த நீரூற்று சிகிச்சை ஒரு அற்புதமாக அமைந்தது.

அல்லாஹ் அவர்களுக்கு, "உமது காலால் பூமியை உதைப்பீராக" என்று கட்டளை யிட்டான். அவர்கள் உதைத்த இடத்தில், ஒரு குளிர்ந்த நீரூற்று வெளிப்பட்டது. அதில் அவர் குளித்து, அந்நீரைப் பருகியவுடன், அவரது உடல் மற்றும் உள்ள நோய்கள் அனைத்தும் குணமாகி, முழு ஆரோக்கியத் தையும் திரும்பப் பெற்றார்.



ரஹ்மத் ராஜகுமாரன்

**அக்குபஞ்சர் தொடர்பான விளக்கம் (மாற்று விளக்கம்):**

சிலர், "கால்களை தரையில் அடிக்கும்படி" அல்லாஹ் கூறியது, பாதங்களில் உள்ள முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகள் (Acupressure points) தூண்டப் படுவதை உணர்த்துகிறது என்று விளக்கம் அளிக்கின்றனர்.

பழங்கால மருத்துவ முறைகளில், பாதங் களில் உள்ள குறிப்பிட்ட புள்ளிகள் சிறுநீரகம், மண்ணீரல் மற்றும் செரிமான உறுப்புகளுடன் தொடர்புடையவை. அந்தப் புள்ளிகள் அழுத்தப்பட்டதால், உடலில் தேங்கியிருந்த நச்சுக்கள் நீங்கி நோய் குணமானது என்பது ஒரு மாற்றுப்பார்வை.

**பகுதி-3**

ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு புகட்டப்படும் தாய்ப்பாலின் அடர்த்தி மற்றும் எடை குறித்து அலி (ரலி) அவர்கள் வழங்கிய தீர்ப்பு இஸ்லாமிய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

அலி (ரலி) அவர்களின் விளக்கம் மற்றும் அதன் பின்னணியிலான வரலாற்றுத் தகவல்கள் இதோ:

**அலி (ரலி) அவர்களின் தீர்ப்பு**

ஒருமுறை யுத்த காலத்தில் பெண்களைப் பாதுகாப்பாக ஒரே கூடாரத்தில் வைக்கப் பட்டிருந்தனர். இரவு நேரத்தில் ஒரே நேரத்தில் பிரசவித்த இரு பெண்கள் தங்களுக்குப் பிறந்த குழந்தைகள் மாறிவிட்டதாகக் கூறி, இருவரும் ஒரே ஆண் குழந்தைக்கு உரிமை கோரினர்.

அந்த நேரத்தில் டிஎன்ஏ (DNA) போன்ற நவீனப் பரிசோதனைகள் இல்லாத நிலையில், அலி (ரலி) அவர்கள் ஒரு புதுமையான தீர்வை முன் வைத்தார்கள்:

இரண்டு பெண்களிடமிருந்தும் தாய்ப் பாலைச் சேகரித்து அதைத் துல்லியமாக

எடை போடுமாறு உத்தரவிட்டார்கள்.

யாருடைய பால் அதிக எடையுடனும், அடர்த்தியாகவும் இருக்கிறதோ அவரே அந்த ஆண் குழந்தையின் தாய் என்றும், யாருடைய பால் எடை குறைவாக இருக்கிறதோ அவர் பெண் குழந்தையின் தாய் என்றும் தீர்ப்பளித் தார்கள்.

அப்போது சுற்றி நின்ற தோழர்கள் அலியே! இது உங்கள் யூகத்தின் அடிப்படையில் உம்முடைய சொந்த அபிப்பிராயமா? என்று கேட்டனர்.

அதற்கு அலி (ரலி) "இல்லை என் சொந்த யூகம் இல்லை. குர்ஆனில் அல்லாஹ் பெற்றோர்கள் விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்கு இரண்டு பங்கும் பெண்களுக்கு ஒரு பங்கும் என்பதை சுட்டிக்காட்டும் வசனத்தை ஓதி

"உங்கள் மக்களில் ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்குபோன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான் (குர்ஆன்-4:11)

சொத்து பங்கீட்டு (குர்ஆன்-4:11) வசனத்தை பேறுகால நிகழ்வில் தாய்ப் பாலுக்கு உவமானமாக காட்டுவது என்பது அறிவின் சிகரமான அலி (ரலி) அவர்களால் மட்டுமே சுட்டிக் காட்ட முடியும்.

இதன் அடிப்படையிலேயே ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் இறைவன் கருவிலேயே அவர்களுக்குரிய உணவின் இந்த வேறுபாட்டை ஏற்படுத்தி இருக்கிறான் என்றார்கள்.

அலி (ரலி) அவர்கள் அன்று கூறிய இந்தத் தகவல் நவீன கால ஆய்வுகளிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது:

ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த தாயின் பாலில் புரதம் (Protein) மற்றும் கொழுப்புச் சத்து (Fat) அதிகமாக இருப்பதால் அது அதிக அடர்த்தியுடனும், எடையுடனும் இருக்கிறது.

பெண் குழந்தைகளுக்குச் சுரக்கும் தாய்ப் பாலை விட, ஆண் குழந்தைகளுக்குச் சுரக்கும் பாலில் சுமார் 25% முதல் 35% வரை கூடுதல் ஆற்றல் (Energy) இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் பெண் குழந்தைகளுக்குச் சுரக்கும் பாலில் கால்சியம் (Calcium) சத்து சற்று அதிகமாக இருப்பதாக சில ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

காரணம் அப்பெண் குழந்தை பெரிய வளாகும்போது ஒவ்வொரு மாதந்தர மாத விலக்கின்போதும், பிரசவ காலத்திலும் நிறைய கால்சியத்தை இரத்தப் போக்கின் வழியே இழக்கிறாள். எனவே பெண் குழந்தைக்கு புகட்டப்படும் தாய்ப் பாலில் கால்சியம் அதிகமாக இறைவன் வழங்குவதாக இருக்கலாம்.

அலி (ரலி) அவர்களின் இந்த அறிவார்ந்த அணுகுமுறை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உயிரியல் உண்மைகளை உணர்த்திய ஒரு வரலாற்றுச் சான்றாகக் கருதப்படுகிறது.







Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002